ஓம்
கடவுள் துணை

புகழேந்திப்புலவர் இயற்றிய

# சித்திரபுத்திர நாயனார் கதை

வெகுதானிய ௵ சித்திரை ௴

இ. வெங்கடேச ஐயரால்
கொக்குவில்
சோதிடப்பிரகாச யந்திரசாலையில்
பதிப்பிக்கப் பெற்றது.

விலை ரூபா 1/00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்
கடவுள் துணை

புகழேந்திப்புலவர் இயற்றிய

# சித்திரபுத்திர நாயனார் கதை

இ. வெங்கடேச ஐயரால்
கொக்குவில்
சோதிடப்பிரகாச யந்திரசாலையில்
பதிப்பிக்கப் பெற்றது.

இடைக்குமிடம்

சோதிடவிலாச புத்தகசாலை

46. பெரியகடை,
யாழ்ப்பாணம்.

கே. கே. எஸ். வீதி,
கொக்குவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

கடவுள் துணை

# சித்திரபுத்திர நாயனார் கதை

## காப்பு

அத்தனுமயனு மாலுமான நல்ரிஷிகள் தேவர்
நித்தமும் பலாபலன்கள் நெறியுடன் தெரிவதற்குச்
சித்திரபுத்திரனார் செனித்த தோர்கதையைப்பாட
மத்தகஜமுந் தொந்திவயிறு நங்காப்பதாமே

## வெண்பா

சீர்கொண்ட பூதலத்திற் சித்திரபுத்திரன் கதையைப்
பார்கொண்ட செந்தமிழாய்ப் பாடவே — யேர்கொண்ட
வார்பூத்த கோலமுலை மாதுமையா ளீன்றெடுத்த
கார்பூத்த குஞ்சரமே காப்பு.

## விருத்தம்

ஆனைமுகமு மொருகொம்பு மகன்றமார்புஞ் சிறுகண்ணும்
பானையைப்போற் பெருவயிறும் பாங்கார்பூண் நூலழகும்
தானே தோன்றி எனதுள்ளத்திற் றயவாய்வாழும் விநாயகனே
நானேயுனது பதந்தொழுதேனா விலுதியாய் கணபதியே.

## நூல்

திருமகிழ்ந்து வாழுமந்தச் சித்திரபுத்திரர் கதையை
விருப்பமுடன்பாட விநாயகனே முன்னடவாய்
விக்கினவிநாயகனே வேழமுகத்தைங்கரனே
தொந்திக் கணபதியே தூயவனே முன்னுதவாய்
கர்த்தனருள் பெற்ற கணபதியே காத்தருள்வாய்
சத்திக்கணபதியே தையலுமை புத்திரனே
எத்திசையும் போற்றும் இறையோன் திருமகனே
பத்தியுடன் தொழுவோர்க்குப் பாவங்கள் தீர்த்தவனே
சித்திரபுத்திரர் கதையைச் செப்பவருள்வாயே
சீராகவாழுஞ் சித்திரபுத்திரர் கதைக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேராகவந்துதவு நீலமயில் வாகனனே
அந்தரியேதாயே அயனாரிடத்திருக்கும்
சுந்தரியேவெள்ளை நிறச்சோதியே முன்னுதவாய்
பத்தியுடனெப்பொழுதும் பாங்காகவந்துதவாய்
பத்திமிகவுண்டாகப் பொற்கொடியேவந்துதவாய்
பத்தியுடன்யானும் பாடுகிறேனிக்கதையை
ஆதியரனாரும் அச்சுதனும் வேதாவும்
தீதில்லாமுப்பத்துமுக்கோடி தேவர்களும்
எல்லோருமாகயிருக்குமோர் நாளையிலே
சித்தமகிழ்ந்து செப்புவார் ஈசுரரும்
நன்றுதீதுதெரிய நடுவெழுதுவார்கணக்கர்
ஈசனருள்பெற்ற எமதருமர்தன்னிடத்தில்
நேசமுடன்கணக்கு நிச்சயமாய்தானெழுத
புண்ணியஞ்செய்தவரைப் பூதலத்தில் வாழ்பவரை
எண்ணரியபாவ மியற்றியதோர் தங்களையும்
ஒன்றுந்தவராம லுள்ளபடிதானெழுத
வென்றிபுனைநற்கணக்காய் விரைந்தேயெழுதிவர
அந்நகரிநாட்டுக்காம் அதிகாரியாங்கணக்கர்
முத்திரைநாட்டுக் கெங்குமுதற்கணக்கர்
நாட்டுக்கணக்கு நமனார்பெருங்கணக்கும்
எட்டுப்புரத்தில் எழுதுமெழிற்கணக்கர்
நல்லார்குணத்தை நடுவெழுதுநாயனார்
பொல்லார்குணத்தைப் பிரித்தெழுதும்புண்ணியனார்
தன்னைநினைத்தவர்க்குத் தன்னியமஞ்செய்தவர்க்கும்
இன்னிலத்திற்செல்வம் இசைவாகத்தானருள்வார்
எல்லோரும்நீங்க ளியல்பாகத்தான்கேளும்
உத்தமனார்தன்கதையை உவப்பாகத்தான்கேளும்
அத்தன்திருக்கதையை யன்பாகத்தான்கேளும்
மன்னவனார்தன்கதையை மகிழ்ந்திருந்துகேட்டவர்கள்
தென்னவனார்தன்கதையைத் தினமுவந்துகொண்டாடி
பரமனார்தன்கதையைப் பக்தியுடன்கேட்டவர்கள்
பார்வேந்தன் தன்கதையைப் பண்புடனே கேட்டவர்கள்
சித்திரபுத்திரர் கதையைச் சிந்தையுடன் கேட்டவர்கள்
உத்திரங்கள் சொல்லாம லுண்மையாய்க் கேட்டவர்கள்
புத்திரநற் பாக்கியங்கள் பொருந்தியே தான்வாழ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேணுமென் றுயீசுரனார் விஸ்தாரஞ் செய்தகதை
இனிமேல்நடத்துகிறோம் இப்போதுசெய்யும்வகை
சித்திரைக்குச்சித்திரையிற் சீரார்பவுரணையில்
வெண்பட்டுத்தானுடுத்தி விரதமதுதானிருந்து
புண்ணியமான பூதானந்தான்கொடுத்து
அடைக்காயும்வெள்ளிலையும் அன்பாகத்தான்கொடுத்து
பூதானம்கோதானம் வஸ்திரதானம்கொடுத்து
பந்தல்விமானம் பாங்காகத்தான்போட்டு
தோரணங்கள்கட்டி துலங்கும்மேற்சுட்டிகட்டி
வித்தைவிநாயகரை விரைந்துமேதாள்போற்றி
செய்யும்வகையதற்கு சிறக்கவே வைத்தபின்பு
பூரணகும்பம்பொன்னின் குடத்தால்வைத்து
வஸ்த்திராபரணங்கள் வகையுடனேதான்சாத்தி
தெட்சணைதாம்பூலம் திருமாலைகள்சாத்தி
சந்தனங்குங்குமஞ் சங்கையுடனேசாத்தி
வாழைக்கமுகுடனே வான்கரும்புதானிருத்தி
பொன்னின்விளக்குவைத்துப் பூமலர்கள்தான்சாத்தி
வாழையிலைபரப்பி வைக்கும்வகைக்கனிகள்
வாழைப்பழமும் வருக்கைப்பலாச்சுளையும்
மாங்கனியுந்தேங்கனியு மற்றுமுள்ள நற்கனியும்
தேமாங்கனியுடனே செங்கதலிநற்பழமும்
விளாங்கனியுஞ்சர்க்கரையும் விரவிமிகப்படைத்து
கடலைசிறுபயறுங் காராமணிப்பயறும்
கடலைபொரியவலும் வேண்டும்பணியாரம்
தேனுந்தினையும் திறமாகத்தான்படைத்து
கரும்போடிளநீருங் கற்கண்டுசீனியுமே
பொருவிளங்காயுடனே பிட்டமுதுவெள்ளுருண்டை
கொழுக்கட்டைதேங்காய் கொண்டுவந்து தான்படைத்து
தோசைவடையிட்டலித் தோன்றமிகப்படைத்து
அப்பமதிரசமும் ஆனதொருதேன்குழலும்
பாயாசமும்பாணக்கமும் பதிவாகத்தானும்வைத்து
அன்னமிகச்சமைத்து அரன்பாலன்முன்னேவைத்து
புத்துருக்குநெய்யும் பொரிக்கறியுள்ளதெல்லாம்
அடைக்காயும்வெள்ளிலையு மன்பாகத்தான்படைத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தனார்தம்மருளால் அமுதுசெய்யபடண்ணுவித்து
நெய்வேதனஞ்செய்து நியமமுடன்பூசித்து
தோத்திரங்கள்செய்து தொழுதுமிகப்பணிந்து

## விருத்தம்

கங்கையைத்தரித்தோன்பாலா கரிமுகாவுன்றன்பாதஞ்
சங்கையாய்த் தரணியோர்கள் தயவுடன் போற்றிசெய்ய
மங்களமாகவாழ்த்தி வந்தெனக்கருளுநாதர்
எங்குமாய்நிரைந்தாய்நீயு மிறையவர்போற்றிபோற்றி.

## வசனம்

இப்படிக் கணபதியைத் தோத்திரஞ் செய்து அருச்சனை நெய்வேதன முதலானதுஞ் செய்து தூபதீபம் கொடுத்து அப்பால் மேற்கதையை நடத்தவேண்டியது.

## நடை

சங்கரனுர்மெய்க்கத் தானெழுதுமெய்க்கணக்கர்
சித்திரபுத்திரரைச் சீருடனேதானிருத்தி
பீதாம்பரஞ்சாற்றிப் பெருப்பவட்டஞ்சாத்தி
சீதளங்களான செண்பகமுந்தான் சாத்தி
சுத்தாதியுள்ளதெல்லாந் தோன்றமிகச்சாத்தி
அறிவாய்முறைப்படியே அர்ச்சனைகள்செய்தபின்பு
வெள்ளிலையோடும் விளங்கும் அடைக்காயும்
உள்ளமகிழ்நெய்வேத்தியம் உவந்துமிகப்படைத்து
புத்தகத்தோடிலங்கும் பொன்னினெழுத்தாணியுடன்
பூதலத்திலுள்ள புதுப்பண்டமுள்ளதெல்லாம்
இஷ்டமுடனேபடைத்து எல்லோருமிக்கதையை
தெண்டனிட்டேனிக்கதையைச் செப்பவேணுமென்று
பக்தியுடன்கேட்கப் பகர்தலுற்றவிக்கதையை
ஓங்குபுகழ்மாதர்மைந்தர் உண்மையுடன்கேட்கச்
சொல்லுமையாவென்று துன்பமறக்கேட்கலுற்றார்
கல்லுமுருகிக் கருத்துடனேகேட்கலுற்றார்
மன்னும்புகழுங்கள் மங்கிலியந்தான்வாழ்க
மலடிகளெல்லா மனமுருகித்தான்கேட்ட
அகம்பாவம்விட்டு அன்புடனே கேட்டவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புண்ணியங்கள்செய்து புதுமையுடன்கேட்டவர்கள்
நல்லநினைவுவைத்து நன்றாகக்கேட்டவர்கள்
கதைமுழுதுங்கேட்டவர்கள் கயிலைப்பதம்பெறுவார்
வந்தவகைக்குறைவு நீங்குமென் றீசுரனார்
பிச்சையிடாத பெரும்பாவியானவரும்
நச்சுவாய்ப்பல்லியர்கள் நடுக்கேடுசெய்தவர்கள்
கள்ளிகளாயுள்ளார் கணவனுரைத்தப்பினவர்
பிச்சையிட்டுண்ணாத பெரும்பாவியானவர்கள்
குண்டுணிகள்சொல்லுங் கொடும்பாவியானவர்கள்
உற்றுநின்றுகேட்டு உறவைமுரித்தவர்கள்
பலநினைவுவைத்து பாவிகளானவர்கள்
கொற்றவரைத் தள்ளிவைத்த கொடும்பாவியானவர்கள்
மற்றவரைத்தேடி வாழ்ந்திருக்கும்மகாபாவி
பிள்ளையழிக்கும் பெரும்பாவியானவர்கள்
சண்டையிட்டுநித்தந் தன்பேச்சுமேலிடவே
கொண்டவனைப்பேணாத கொடும்பாவியானவர்கள்
தன்வீட்டைச்சாத்தி யயல்வீட்டிற்போயிருந்து
பின்னங்கள்பேசும் பெரும்பாவியானவர்கள்
பசித்தாரிருக்கப் பார்த்திருந்தபாவியர்கள்
இத்தியாதிபேர்களெல்லாம் இக்கதையைக்கேளாமல்
கடக்கவேநில்லுமென்று கணக்காயுரைத்தமொழி
பூமிதனில்விளைந்த புதுமண்டபம் வந்தென்றாள்
பெரியவர்முதலானவர்க்கும் பிசகாமல்தானீய்ந்து
வேதியர்க்கீய்ந்து விரதமதைக்கொண்டாடி
கேட்டவர்களெல்லாங் கிளைசுத்தம் வாழ்ந்திருப்பார்
காரணமாய்நடந்த கதையை நடத்துகிறோம்
பதிவிரதையாயிருந்து பாங்குடனேகேளுமென்றார்
பக்தியுடனேகேட்டாற் பாடுகிறேனினிக்கேளும்
ஈசனருளால் எமதருமர்தன்னருகே
நேசமுடன்கணக்கு நிச்சயமாய்த்தானெழுத
புண்ணியஞ்செய்தவரை பூதலத்தில்வாழ்பவரை
பாவங்கள்செய்வாரைப் பகுந்துகணக்கெழுத
வேணுமென்றுசொல்லி விமலனுர்செய்தகதை
கயிலாசமீதிற் காரணமானகதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படியேதானுமங்கே நடக்குந்தருவாயில்
தெய்வலோகபட்டணத்திற் றிறமாய்நடந்தகதை
நன்றாகச்சொல்லுகிறேன் நாடெல்லாந்தானறிய
இந்திரனிந்திராணியுட னிருந்துமிகவாழ்கையிலே
புத்திரவாசை பிடித்துமிகப்புலம்பி
நடந்ததை சொல்லுகிறோம் நன்றாகக்கேளுமென்றார்
நல்லார்பவிசு மிறையோன்கொடுத்திருக்க
பிள்ளையில்லாவாழ்வு பெருமையடையாதென்று
இந்திராணியம்மை யேங்கிமிகவாடி
சொன்னவசனத்தை சொல்லுகிறேன்கேளுமென்றார்
பட்டிபலுகாது பாவங்கள்தீராது
ஆளடிமையென்று ஆகாசம்போய்விடுங்காண்
ஆபரணங்காதியெல்லாம் அழிந்திடுங்காண்மன்னரே
சித்திரக்காரியங்கள் சிதறியேபோய்விடுங்காண்
தருமங்கள்செய்யவென்று தானினைத்தாரிந்திரரும்
கன்னிகாதானங்கள் கருத்தாகச்செய்தார்காண்
மாதானங்கோதானம் வஸ்திரதானங்களும்
விமரிசையாய்த்தருமங்கள் வேண்டியபடிசெய்தபின்பு
தவசுசெய்யவேணுமென்று தானினைந்தாருத்தமனார்
உத்தமருமுத்தமியும் உலகாண்டோன்றனைநினைந்து
இந்தக்கதையை யெள்ளளவுந்தப்பாமல்
கேட்டவர்களெல்லாங் கிளைசுற்றம்வாழ்ந்திருப்பார்.

**விருத்தம்**

சித்திரபுத்திரர் கதையைச் சிறப்புடன் கேட்கநோன்பு
பத்தியா யிருந்தோரெல்லாம் பழவினை நீங்கிநல்ல
அத்தர்தன் பதியைச்சேர்ந்துஅத்துடன்சேர்ந்துவாழவார்
பத்தியாய்முந் நூல்சொல்லும் பகர்ந்தனர் நூல்வல்லாரே.

**வசனம்**

அதெப்படியென்று கேட்பீரானால் அனேகமான திரவியங்கள் பூமிகள் முதலான சகல பாக்கியங்ளிலிருந்தாலும் மைந்தனில்லாத வாழ்வு வாழ்வல்லவென்று இந்திரனும் இந்திராணியும் வெகு மனஸ்தாபமாய்க் கிலேசப்பட்டுத் தங்கள் பொக்கிஷக் களஞ்சியத்திலுண்டான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரவியமுதலானதை யெல்லாங்கொண்டு அனேக தருமங் களைச் செய்து பின் பார்வதிசமேதராகிய ஈஸ்வரரை நினைத்துத் தவசுசெய்யச் சித்திரபுத்திரநாயனார் வந்து பிறந்து அவதாரச் சித்தராக நடந்த கதையானதால் இந்தக் கதையை மனமுவந்து அன்பாகப் பக்தியுடனே கேட்டவர்களுக்கு வரும்பலத்தை இனிமேல் விபரமாகச் சொல்லுகிறோம் கேட்பீர்களாக.

**நடை**

உத்தமருமாவார் உயர்ந்த குடியாவார்
பத்தினிகளாவார் பலபிள்ளை தாயாவார்
சத்தி சிவம் பொருந்தித் தாட்டிகராய் வாழ்ந்திருப்பார்
நீடூழிகாலம் நேசமதாய் வாழ்ந்திருப்பார்
மங்கிலியம் வாழ்ந்து மகிழ்ச்சி மிகவுண்டாகும்
செல்வமிகவுண்டாகிச் சீராகத்தானிருப்பார்
ஆழ்கடல் வற்றிடினும் அவர்புகழ்தான் குன்றாது
மாற்றில்லாச் செம்பொன் மதிக்குமவர் வசத்தில்
புண்ணியவானானாலும் போதமுள்ள வரானாலும்
மண்ணுமதியுள்ளளவும் வாழ்வு மிகவுண்டாகும்
சித்திரைக்குச் சித்திரையிற் சீரார் பவுரணையில்
சித்திரைமாதந் திருநோன்பு வந்ததிலே
உத்தமரைநோக்கி யொருநோன்பு செய்தவர்கள்
மைந்தர்களானாலும் மடந்தையர் களானாலும்
எந்தக்குலத்தில் எவர்களேயானாலும்
தந்தைதனைக்கொன்ற பெரும்பாவியானாலும்
நித்தமதுவுண்ணும் நீச்சரேயானாலும்
இந்தக்கதையை இயம்பாய்க் கருத்தில்வைத்து
லோகத்தியற்கையொன்று யோசியாமலேயிருந்து
இளகும்படிமனதி லெந்நேரமும் நினைத்தால்
அங்கேதானோன்புக் கவரேவெளிப்படுவார்
இந்திரனைப்போலே இனிதாக வாழ்வுமுண்டாம்
அந்நெடுமால்பதத்தில் அழகுடனேவாழ்ந்திருப்பார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவனருளுமுண்டாகுந் தீங்கொருநாள்வாராது
நம்முடையசெல்வங்கள் நாள்தோறுமுண்டாகும்
மின்னோன்பிராத முக்கடனேயானாலும்
இன்னோன்பிருந்தவர்க ளிகபரமுந்தான்பெறுவார்
முத்தியருள்கொடுக்கும் மோகங்கள்தான்நீங்கும்
வல்வினைகளானதெல்லாம் வழிவிலகித்தான்போகும்
நல்லதொருபுண்ணியங்கள் நாள்தோறுமுண்டாகும்
ஆராகிலுமிதனை யன்புடனேகேழுங்கள்
நாயனார்பிறப்பையினி நன்றாகச்சொல்லுகிறேன்
கயிலாசத்தில்நடந்த காரணத்தைச்சொல்லுகிறேன்
சிவனார்கையிலையினிற் சிறப்பாயிருக்கையிலே
அரனார்மனமகிழ்ந்து ஆனபராசக்தியுடன்
கேளாயுமையவளே கிருபையுடன் சொல்லுகிறேன்
ஊழின்விதிப்படியே யுள்ளபடியேயுலகில்
அவரவர்செய்தபுண்ணிய பாவங்கள்தானறியார்
நாமேயறியவென்றார் ஞாயமில்லைக்கண்டாயே
நம்மைநினையாமல் நாள்தோறும் வைத்தவர்கள்
சிவசிந்தையில்லாத சென்மங்களாவார்கள்
முன்வினையைவிட்டு மோசம்பெறுவதற்கு
வேணவரங்கொடுத்து மேதினியிற்றானவர்கள்
அசுரர் அரக்கர் அநேகமுதலானோர்
சத்திசிவமறந்து தானிடுக்கஞ்செய்வதனால்
அப்படியேவாராமல் அதற்கான செய்தியொன்று
ஒப்பில்லாப்பெண்ணே உமையவளேநீகேட்பாய்
செப்பமுடன்கணக்குச் சீராகத்தானெழுதி
திட்டமுடன்செய்து சிட்சைகள்நான்செய்வதற்கு
நாமேகணக்கெழுத நல்லதல்லகண்டாயே
மூத்தபிள்ளைகணபதியை மொழிவதுநல்லதல்ல
மூலமாயிவ்விடத்தில் மூத்தமகன்தன்னைவைத்தோம்
கோலமயில்வாகனனுங் கொடுஞ்சூரன்கண்டாயே
சூரரைக்கொல்லவே சோதனைக்குவைத்தோங்காண்
சாலக்கணக்கெழுதான் தகப்பன்குருசாமி
கோலப்பிரமாவைக் கொண்டுசிறையும்வைத்தான்
அவனைதுதித்தவர்க்கு அனேகவரம்கொடுப்பான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புவனங்கணக்கெழுதப் புகர்சொல்வானுன்மகனும்
பாலனிருந்து பழிக்குயிடமானோம்
மக்களிருந்து மனுநீதிதானெழுத
இந்தவகைதனக்கு யெழுதிவரும்படிக்கு
நல்வினைகள் தீவினைகள் நன்றாயெழுதிவர
எந்தன்வினையானாலு மியல்பாகவுள்ளபடி
கணக்குப்படியே கருமங்கள்தான்பொசிக்க
பிறர்சாட்சியால்கணக்குப் பிரபஞ்சந்தானிருக்கும்
என்றரனார்சொல்ல வியல்பானபார்வதியும்
நல்லதுதான்சொல்லவந்திர் நாயகரேயும்முடைய
திருவுளத்துக்கேற்றபடி செய்யுமென்றார்பார்வதியும்
இருந்துமிகப்பேசி யீசுரருமேதுசொல்வார்
பூமாதைநோக்கிப் பொற்பலகைகொண்டுவர
என்றபொழுதே யியல்பானபொற்பலகை
நன்றெனவேபார்வதியு நாதன்முன்புவைத்தனளே
பார்வதிகொண்டுவரப் பரமனாரேதுசொல்வார்
சித்தமகிழ்ந்துசி த்திரக்கோல்தந்திடென
அந்தப்படியேயம்மையுமை கொண்டுவர
சாதிலிங்கக்காரன் தவளநிறப்பச்சையுடன்
நீலமணிவெள்ளையுட னெறியாகச்சேர்ந்துடனே
பால்நிறமுமாகப் பாவித்நார்பலகையின்மேல்
சாலவேதம்மைப்போ லாகவென்றுதயாநிதியும்
கோலமுடனிருக்கக் குறித்தாரேசித்திரத்தில்
பஞ்சவர்ணமாகப் பாகமதுதப்பாமல்
திருக்கரத்தாற்றானுஞ் சிறப்பாயெழுதினரே
தம்மைப்போலிருக்கவென்று தானேயெழுதலுற்றார்
உருவையெழுதி யுண்மையுடன்தான்பார்த்து
திரிபுரையேநீயுஞ் சுந்திரத்தைப்பாரெனவே
இந்தப்புதல்வரைநீ ரிப்போதழையுமென்றார்
அழையுமென்றபோதே யானுமதைப்பார்க்க
ஆருமறியாத அரனார்தம்பேரருளால்
சித்திரத்திலேயுதித்த புத்திரனாகவர
வாராய்மகனேயென்று மலர்க்கரங்கள்நீட்டிடவும்
கைகாட்டிமுகங்காட்டி கருவுருவாய்த்தான்திரண்டு
கருணைவிழிநோக்க மாதாகையிற்பிறந்தனரே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறந்தாரேவுத்தமனார் வேணும்வரம்பெருக
பணிந்தவர்க்கேயருள்கொடுக்கும் பரமனதுசந்நிதியில்
தெண்டனிட்டுவாய்புதைத்து சென்னியின்மேற்கைகுவித்து
நிற்குமந்தவுத்தமரை நீலகண்டர்தான்பார்த்து
எக்கோடிகாலம் இயல்பாகவுள்ளமட்டும்
அக்காலம் நீடூழியாகவேதானிருப்பீர்
பல்லாயிரங்கோடி பகிரண்டமுள்ளமட்டும்
எள்ளுக்குளெண்ணெய்போ லெங்கும்நிறைந்திருப்போம்
பூவுக்குள்ளவாசம்போல் பொருந்தியிருப்போம்நாம்
பரைக்கும்நமக்குமிது பண்புதான்கண்டீரே
ஒன்றுயிருக்குமிட மொருவருந்தாமறியார்
அறிவார்தவமுடைய ரடையாளஞ்சொல்லுகிறோம்
நன்றாயுரைக்கிறோம் நன்மகனேகேளப்பா
மோட்சவழிசத்தியுடன் மொழிந்தோமதுபோல
மோட்சவழியுபதேச மொழிந்தோமேயின்றுனக்கு
எங்களுடமனதி லிருக்குநினைவுகளும்
தேவரசுராள் ரிஷிகள்முனிமாதர்கள்
எறும்புகடையானதனை யெண்பத்துநாலுநூ
றாயிரம்யோனிபேத மாகுமுயிர்களெல்லாம்
செய்கின்றதெல்லாந் திறமாயெழுதுமென்றார்
கருவேலநற்கணக்குங் கட்டாயெழுதுமென்றார்
அரனார்திருக்கரத்தா லாபரணந்தான்திட்டி
கயிலாசத்துள்ளே கணக்கெல்லாமெழுதுமென்றார்
மகமேருநற்கணக்கும் வைகுண்டநற்கணக்கும்
பிரமலோகக்கணக்கும் பின்புமற்றுமுள்ளதெல்லாம்
எல்லாக்கணக்கு மெழுதவருள்கொடுத்து
உமையவளுந்தானு முண்மையாய்த்தானழைத்து
ஆபரணப்பெட்டகத்தை யழைப்பித்தாரந்நேரம்
பூட்டுத்திறந்து புதுப்பட்டந்தான்கொடுத்துக்
காலிற்சிலம்பணிந்து கனகமணித்தண்டையிட்டு
முன்கைமுதாரி முன்கைவளைதான்சாத்தி
தங்கச்சரப்பளியுந் தரித்துவைடூரியமும்
காதிலேகுண்டலங்கள் கதிரொளிபோற்றான்சாத்தி
முப்புரிநூலு முழுவயிரப்பதக்கமுடன்
தும்பிப்பதக்கமுடன் சூடாமணிக்கவசம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்லைசரப்பளியும் வேணபணியாபரணம்
பாதமுடிவரைக்கும் பலபணிகள் தான்பூட்டி
பார்வதியுமீசுரரும் பார்த்தார்கள்கண்குளிர
அரனுனடயதிருவுளத்தா லாண்டவரையருகழைத்து
திருநீற்றுக்காப்புமிட்டுச் சித்திரபுத்திரரெனவே
உபதேசங்காதிலே யுரைத்தாரேயுத்தமற்கு
அதிகாரஞ்செய்கணக்கு அய்யனே தந்தோமென்றார்
முத்திரைமோதிரத்தைச் சித்திரமாய்கையிலிட்டு
நீடூழிகாலங் கணக்கெழுதநீரெனவே
உத்தமருமங்கே யுடன்வணங்கிதெண்டனிட்டு
அம்மையுமைபார்வதியை யப்போதேதெண்டனிட்டார்
தெண்டனிட்டுநின்றதொரு சித்திரபுத்திரரை
தாவியெடுத்து மகனேயெனமொழிந்து
ஆருமறியாதார் அரும்பொருளார் தன்மகனே
சீருடநீருஞ் சிவனாரருட்படிக்குப்
பாரும்விசும்புமிந்தப் பரன்மொழிகள் தப்பாமல்
பல்லாயிரங்கோடி பலன்களுக்குத்தானெழுத
சொல்லார்கணக்குச் சுருணைமுத்துண்டாக்கி
கருமநிழல்வந்து கணக்கில்தினசரியும்
எழுதித்தொகைபடுத்தி யியற்றும்பயன்படியே
பழுதுகள்வாராமற் பார்த்தவுடனவ்வேடு
எடுத்தவர்கள்பேசாமல் தன்னிழலேசாட்சிசொல்லி
இச்சாட்சிவந்து இயல்பாய்க்கணக்கெழுதும்
உனக்குப்பிரயாசம் ஒன்றுமில்லையென்றுசொல்லி
கணக்கராயிருந்து கருவேலங்கைக்கொள்ளும்
என்றுகருவேலம் ஏற்புவித்தாரன்னேரம்
பண்டுமுன்னாளுள்ள பழையகணக்குள்ளதெல்லாம்
ஆயிரம்பதமசைக்க வொண்ணாதபட்டோலை
தப்பாமலெழுத தார்வேந்தர்தான் கொடுக்க
சித்திரபுத்திரனார் சீமானார்தன்னிடத்தில்
வாங்கினாருத்தமனார் வையகம்வாழவென்று
அன்றாடக்கணக்கு மனூவும்வகைவிபரமாய்
இருந்துகணக்கு யெழுதுகின்றாருத்தமனார்
சிவனார்தம்வாசலிற் சிறப்பாயெழுதுகிறார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விருத்தம்

அய்யனுமுமையுங்கூடி யானநற்கணக்கராக
மெய்யராய்ச்சிருட்டித்தார்கள் மேதினியுள்ளமட்டும்
செய்யனுங்கணக்கைப்பார்த்து செய்திகள்வாராவண்ணம்
தையலாள்பாகன்வாசற் றருங்கணக்கெழுதலுற்றார்.

## வசனம்

எப்படியென்றால் கயிலாசத்திலே சுவாமியும் பரமேஸ்வரியும் முப்பத்துமுக்கோடி தேவர்களும் நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகளும் மற்றுமுள்ள தபோதனர்களும் நிறைந்திருக்கும்போது அண்டபுவனங்களெல்லாம் பாவ புண்ணியபலன் தெரியவேண்டி நம்முடைய குமாரர்களிருபேருங் காரணமான கதைகள் சிலது நடக்கவேண்டியதற்கு அவர்களாலாகவேண்டியதால் மற்றுமுள்ளபேர்கள் இதற்கு ஆகத்தக்கினவர்கள் யாருமில்லையென்று சுவாமி பரமேஸ்வரர் தானே யோசித்து உமையையழைத்து தங் கப்பலகை எடுத்துவரச்சொல்லி உருவமைக்க அதையுமையாள்கண்டு அதிசயப்பட்டு கருவுருவாய்ப் பேசும்படி கிருபை பாலிக்கவேண்டுமென்றறிவிக்க அப்படியே கிருபைசெய்து விஞ்சைமந்திரமுபதேசித்து சித்திரபுத்திரனென்று பேர்வைத்து ஆடையாபரண முதலானதும் பூட்டி மகனைக்கட்டிமுகந்து அண்டபுவனங்களிலுண்டான முன்னால் கணக்கும் கருவேலமும் விஷ்ணுமூர்த்தி பிரமா முதலானவர்களிடமுள்ள கருவேலமும் பொக்கிஷமுதலானதும் பாவபுண்ணிய பலன் கணக்குங் கொடுக்க உமையாகிய பரமேஸ்வரியும் வேண்டத்தக்கின வரங்களுங்கொடுத்துத் தினச்செய்தி நடக்கிற பாவபுண்ணிய முதலானபலகணக்கும் நம்க்கறிவியுமென்று சுவாமியுத்தரவுகொடுத்தபடியே சித்திரபுத்திரருங் கயிலையங்கிரி வாசரான பரமேசுரர் சந்நிதானத்திலிருந்து கணக்கெழுதிவந்தார். இப்படிக் கயிலாசத்தில் நடந்துவரும்போது தேவேந்திரன் மகா ஆசைகொண்டு வேணத்தக்கின தருமங்கள் செய்து ஈஸ்வரனை நோக்கி இந்திராணியுடன் தவசுபண்ணுகிற விஸ்தாரத்தை இனிமேற் சொல்லுகிறோம் அன்புவைத்து ஒரேமனதாக கேட்பீர்களாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நடை

எண்ணத்தொலையாத வேற்றசிவபூசைதன்னை
செய்யவேவேணுமென்று திரமாகவேநினைத்து
தேவாதிதேவரெல்லாஞ் சேரவேசூழ்ந்துவர
செம்பொன்மணித்தேரிற் சிறப்புடனேதானேறி
பசும்பொன்னுலகாள் பதியைவிட்டுத்தேர்நடத்தி
விண்ணுலகக்கன்னியர்கள் வேணபணிசூழ்ந்துவர
இப்படியேயிந்திரனா றேத்ததவஞ்செய்ய
வருகிறவழிதனிலே வந்தாள் அகலிகைதான்
புண்ணியதீர்த்தமாடப் புறப்பட்டாள் அகலிகையும்
தந்திரமாயப்போது தான்கண்டாரிந்திரனார்
மெத்தவேமையலாகி மெய்சோர்ந்தறிவழிந்து
தேர்மேலே தான்விழுந்தார் தேவர்கள்சென்றெடுத்தார்
பாராமல்நடந்து பகற்பூண்டஆசையினால்
காதல்கொண்டஇந்திரனார் கர்மவினைநினைத்து
ஆதரவுபேசி யகலிகையைச்சேரவெண்ணி
தேரைமிகநிறுத்தித் தேவர்களைத்தானிறுத்தி
மாயமாய்ச்சென்று மருத்துமாமலையிலுள்ள
காய்கனிகள்கொண்டுடனே காரிருளாமந்நேரம்
மாயாபாசத்தால் மகிமைதனையிழந்து
ஆசைத்துயரமதால் அகலிகைதன்வீட்டினிலே
சென்றாரேயிந்திரனார் தெய்வவுருமாறி
அன்றிரவுநல்லுறக்க மறிந்துநடுச்சாமமதில்
வேளையிதுவென்னவே விடியற்காலங்கூவும்
கோழியாய்நின்று கூவினாரிந்திரரும்
அப்போதுகௌதம ராளரிஷிதானும்
எப்போதும்போலே விடிந்துதேயென்றெழுந்து
தெண்டுகமண்டலமுந் திருநீற்றுக்கோலுடனே
கங்கைக்கரையில்வந்து நின்றார்மகாரிஷியும்
கங்கையுறக்கமதைக் கண்டார்மகாரிஷியும்
மாயர்விதியோ மாயமோதெரியாது
நந்தவனஞ்சென்று நாமறிவோமென்றுவர
அந்தமலரும் அரும்பாயிருந்ததுகாண்
இதுவென்னசோதனையோ ஈசுவரரேதஞ்சமென்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிசாமநேர மறியாமல்வந்ததென்று
மனக்கவலையாயகரிஷி மனையிடத்தேமீண்டுவந்தார்
சென்றறிவோமென்று திரும்பிவருமந்நேரம்
இந்திரனுமவ்விருளில் ரிஷிரூபந்தானெடுத்து
வந்துஅகலிகையின் வாய்த்தமுகம்நோக்கி
மனக்கவலைமையலொடு வந்தவரலறெல்லாம்
கேளுமென்றுசொல்லிக் கருணைகொள்ளவேண்டுமென்றான்
பாவிகெடுவாய் பத்தினிமார்தன்னிடத்தில்
தீவினையால்வந்தாயே சீசீமகனின்றி
நீயுமழிந்திடுவாய் நிச்சயமேதப்பாதென்று
ஆசையில்லாமல் அகலிகைசொல்லிநிற்க
வாசவனுமந்நேரம் மயக்கத்தால்வீழ்ந்திறைஞ்சி
ஆசைத்துயர்தீர்ப்பாய் அகலிகையேயென்றிரந்தான்
அப்போதுமகரிஷியு மதிவேகமாய்வந்தார்
மெய்யாகப்போனவரு மீண்டுவந்தாரந்நேரம்
கண்டார்தன்ஞானத்தால் காரணமானதெல்லாம்
அண்டர்பதிக்கோனை யாரடாவென்றதட்டப்
பூனையுருவங்கொண்டு போனானேயிந்திரனும்
ஆரடாவிந்நேர மறிவுகெட்டுவந்ததென்ன
பேரும்பிறப்பும் பிழையாமற்சொல்லெனவே
இந்திரனேநான்காண் ரிஷியேநானும்மிடத்தில்
வந்ததுவேறில்லை வருஷப்பலனுள்ளதெல்லாம்
சாஸ்திரங்கேட்கத் தான்வந்தேனென்றுரைத்தான்
இந்நேரநீயிங் கிடும்புசெய்யவந்தவன்காண்
அகலிகையையிச்சித்தே அடைந்தாய்நீயென்றுசொல்லி
ரிஷியும்தான்கண்சிவந்து நெருப்புப்பொறிபறக்க
இன்றெரித்தோமாகி லிந்திரலோகமழியும்
இச்சாபமிந்திரனை யிருந்தழிக்கவேண்டுமென்று
துற்சாபம்வேறு சொல்லுவாரப்பொழுது
தன்தாரம்விட்டுப் பரதாரம்வேண்டினதால்
இந்திரன்சரீரமெல்லாம் யோனியாய்ப்போகவெண்ணி
ஆயிரம்யோனி யங்கமெல்லாந்தான்வெடிக்க
என்றுமகரிஷியு மேற்றதொருசாபமிடத்
தப்பாமலந்நேரம் தோன்றியதேதான்குறியும்
கண்டானேயிந்திரனுங் கண்கலக்கமுண்டாகித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழுவான்ரிஷியடியைத் தோற்றமுடனந்நேரம்
பெரியவரேநீர்பொறுப்பீர் பிழைசெய்தேனான்சிறியேன்
அரியவினைக்காளானேன் ஆசையாற்றான்விரும்பி
வஞ்சகனுமானேன் மாபாவிதானானேன்
வஞ்சகமாய்ச்செய்தகுற்ற மகரிஷியேநீர்பொறுப்பீர்
என்றுசொல்லியிந்திரனும் ரிஷியையடிபணிந்து
இந்திரலோக மிழந்துநான்போகாமல்
இச்சாபந்தீர்த்தே யிரட்சிக்கவேண்டுமென்று
அச்சாபத்தோடே யவரருகில்நின்றழுதான்
இந்திரனைப்பார்த்து ரிஷியுமவரேதுரைப்பார்
இருடிகள்சாப மிந்திரனேதீராது
ஆணவமாயையினால் அழியவந்தவிந்திரனே
தாணுமாலயனாரைத் தரணியிலேபூசைசெய்தால்
ஆயிரம்யோனியு மாயிரங்கண்ணாகுமென்றார்
ஆயிரங்கண்ணாகுமென்ற அம்முனியைத்தெண்டனிட்டு
பூசைசெய்தேயிந்திரனும் போனான்காண்அந்நேரம்
அப்போதுமகரிஷியும் அகலிகையைப்பார்த்துடனே
கருங்கல்லாய்ப்போகவென்று கடுஞ்சாபமிட்டனரே
அப்போதேயகலிகை அடிதொழுதுதெண்டனிட்டு
வேர்த்துவிரைத்து மெய்கலங்கியுள்நடுங்கி
இச்சாபந்தானும் எனக்கோவரவேண்டும்
ஈதென்னமாயமோ வெம்பெருமான்சோதனையோ
சாபநிவர்த்தி தானருளவேண்டுமென்று
அகலிகைதான்பணிந்து அடிதொழுதுதெண்டனிட்டுக்
கேட்குமளவில் கிருபையுடன்மகரிஷியும்
அரக்கர்குலமறுக்க அன்பாகமாயவனார்
ரவிகுலத்தில்வந்துதசரதன் பாலகனாய்ப்பிறப்பார்
நாலுபேராகவந்து பிறந்துவளர்நாளையிலே
விசுவாமித்திரர்செய்யும் வேள்விகெடும்படிக்குத்
தாடகைசிறுநீரால் தானணைப்பாள்அம்முனியும்
தாடகையைச் சங்கரித்துத்தனிவேள்விமுடிப்பதற்குத்
தசரதன்தன்னிடத்திற் சார்ந்துவிசுவாமித்திரரும்
இராமரையும் லட்சுமணரையுந்தானழைத்துச்
சங்காரஞ்செய்து தனிவேள்வியமுடித்து
மிதுலையைநோக்கி விரைந்துவருகையிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலியாணம்பண்ணவென்று கனமாய்வருகையிலே
ஸ்ரீராமர்தன்பாதஞ் சிறப்பாகப்பட்டவுடன்
பெண்ணாகநீவருவாய் பேர்ந்துவிடுமுன்சாபம்
அப்போதுநாமுன்னை யழைத்துக்கொள்வோமென்னக்
கருங்கல்லின்பாறையாய்ப் போனாளேகன்னிகைதான்

விருத்தம்

இந்திரலோகம்விட்டே யெழிலுறுபுவனஞ்சுற்றித்
தந்திரவானமெல்லாந் தன்னுடன்வரும்போதந்த
மந்திரப்பெண்ணும்வந்து மலர்கொய்யும்போதுகண்டு
இந்திரன்மயங்கிவாடி யேகினானிருப்பிடத்தில், 1

இருப்பிடந்தேடிப்பார்த்து இரவிலோர்கோழிபோல
உருக்கொண்டுகூவியந்த ரிஷியினைக்கங்கைபோக்கி
உருக்கினவகலிகையில் உணர்விலான்செல்லும்போது
செருக்கிலாரிஷியுங்கண்டு சிறந்துதான்சாபமிட்டார். 2

செய்ததோர்சாபம்காமத் திருடனாய்வந்ததாலே
வெய்யனேபெண்மேல்மோக விருப்பமுமில்லையாகத்
துய்யதோர்மேனியெல்லாந் தூயருடன்யோனியாகும்
பொய்யல்லஎன்றுசொல்லி போவெனவிடைகொடுத்தார்.

இந்தநற்சாபத்தாலே யிந்திரன்தலைகவிழ்ந்து
அந்தநல்ரிஷியைத்தானு மடிபணிந்தவனேகேட்கத்
தந்திரவிசனாரைத் தானுமேபூசைசெய்தாற்
சுந்தரமேனியெல்லாந் துலங்குமாயிரங்கண்ணாமே, 3

வசனம்

எப்படியென்றால், தேவேந்திரன் தபசுசெய்யப் புறப்பட்டுவருகிற வழியிலே கௌதமரிஷி பத்தினியான அகலிகை ரிஷிக்கு மலர்கொய்ய வந்தவிடத்தில் இந்திரன் அவளுடைய அழகுசவுந்தரியங்களைக்கண்டு தவம் மறந்து புத்திர நினைவும்விட்டு மையல்கொண்டு அந்தப்பெண் வாழுகின்றவிடத்துக்குப்போய்க் கோழியாய்நின்று கூவினான். ரிஷியும் பொழுதுவிடிந்ததென்று கங்கைக்கு வரும்போது கங்கை நித்திரை செய்கிறதைப் பார்த்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நந்தவனஞ்சென்று புஷ்பவிரிவு பார்ப்போமென்று செல்லும்போது. புஷ்பங்களெல்லாம் அரும்புமயமாயிருப்பதைக்கண்டு இது ஒரு காரணமாயிருக்கவேண்டுமென்று தன்னுடைய ஆச்சிரமத்துக்கு வந்துகொண்டிருக்கையில் இந்திரன் அகலிகையிடத்திற் றன்னுடைய விரகதாபத்தைச் சொல்ல, அவள் மனம்நொந்து சில கொடுமையான வார்த்தைகளைச் சொல்லுகிறநேரத்தில் ரிஷி வருகிற ஜாடையை இந்திரன் தெரிந்து பூனைவேடம் போட்டதை அவர் ஞானதிருஷ்டியினால் பார்த்து, "ஆரடா நீ? உன்னுடைய பேரும் ஊரும் வந்ததுவுஞ் சொல்" என்று கேட்க அடியேன் தேவேந்திரனென்று பெயரைச் சொல்லி இந்தவருஷம் பஞ்சாங்கப்பலன் கேட்கவந்தேனென்று திருட்டுத்தனமாய்ச் சொன்னதை தெரிந்து இவன் அகலிகையைக் கெடுக்கவந்தவனாய்க் காண்கின்றதென்று மாகோபத்துடனே ரிஷியானவர் கண்களிரண்டும் நெருப்புப்பொறி பறக்கும்படி பார்த்துத் தன் தாரமிருக்க அயல்தாரத்துக்கு ஆசைப்பட்டதினாலே உன் சரீரமெல்லாம் ஆயிரம் யோனியாக வெடிக்கக்கடவதென்று சாபமிட்டார். உடனே இந்திரனும் பயந்து நடுநடுங்கி மகரிஷியைத் தெண்டனிட்டு எளியேன் செய்த குற்றம் பொறுக்கவேண்டுமென்று வேண்டி நமஸ்காரஞ் செய்ததின்மேல் ரிஷிக்குக் கொஞ்சம் தயைவந்து தானுமாலயனாகிய சுவாமி கயிலையங்கிரிவாசரைப் பூஜைசெய்தால் இந்தச்சாபம் அவராலே தீர்ந்து ஆயிரம் யோனியும் ஆயிரங்கண்ணாகுமென்று விடைகொடுக்க அப்படியே தேவேந்திரன் தன்னுடைய பட்டணத்துக்குவந்து சுவாமி கயிலையங்கிரிவாசரைப் பூசைசெய்து முன்சொன்னபடியே ஆயிரங் கண்ணாகப் பெற்றுக்கொண்டான்.

விருத்தம்

கௌதமரிஷியும்பெண்ணைக் கண்டகலிகையேயுன்னைச்
சவுமியமாகக்கண்டு இந்திரன்சார்ந்ததாலே
புவிதனிற்கருங்கல்லாகி பொற்பெலாங்குறைவாயென்று
தவமுனிவந்துநின்று சாற்றினார்சாபந்தானே. 1

எந்தனுக்கிட்டசாப மெத்தநாட்போமென்றேங்க
அந்தநற்சாபந்திர ஆனதோர்வகையுஞ்சொல்வார்
சுந்தரத்தசரதற்குத் தோன்றியராமன்பாதம்
உந்தன்மேற்பட்டபோதே ஒளிந்திடுஞ்சாபமென்றார். 2

வசனம்

எப்படியென்றால், அகலிகை மற்றொரு புருஷர்களின் வாடைபடாதவளானதால் இந்திரன்கண்டு மோகித்தத னாலே இந்தத் தேகம்விட்டு மறுதேகமாகவேண்டியதற் குக் கருங்கல்லாய்ப் போகக்கடவதென்று சபித்ததினாலே அகலிகை ரிஷியைத் தோத்திரஞ்செய்து அடிபணிந்து எனக்கிட்ட சாபம் எப்போது நீங்குமென்றுகேட்க, மஹாவிஷ்ணுவானவர் அரக்கர் குலமறுக்கவேண்டியதற் காகத் தசரதர் புத்திரனாக ஜனித்து ஸ்ரீராமனென்னும் நாமத்துடனிருக்குங் காலத்தில் விசுவாமித்திரர் தன் வேள்வியைத் தாடகை சிறுநீரால் அழிக்கிற வேதனையை நீக்கவேண்டித் தசரதரிடத்திற் கேட்டு ஸ்ரீராமனை அழைத்துக்கொண்டுபோய்த் தாடகையை சங்காரஞ் செய்து மிதிலையிற் சீதையை கலியாணஞ் செய்விக்க ஸ்ரீராமனை அழைத்துக்கொண்டு வரும்போது அந்த ஸ்ரீராமனுடைய திருப்பாதம் உன்பேரில் பட்டவுடனே பெண்ணுருவமாகி என்னிடம் வருவாய் அப்போது உன் னைச் சேர்த்துக்கொள்ளுகிறேனென்று விடைகொடுத்த படியே சிலநாட்சென்று ஸ்ரீராமர் வந்து தாடகையைக் கொன்று விசுவாமித்திரற்குச் சந்தோஷஞ் செய்வித்து, மிதிலையிற் சீதையைக் கலியாணஞ்செய்ய வரும்வழியில் ஸ்ரீராமனுடைய பாதம் அகலிகையின் பேரிலேபட்டு பெண் சொரூபமானதை ஸ்ரீராமர் பார்த்து இதென்ன விதமென்று விசுவாமித்திரைக் கேட்க அகலிகையான வள் நடந்த விருத்தாந்தமெல்லாம் சொல்ல, அப்பால் ஸ்ரீராமமூர்த்தி இருடியினிடத்துக்குப் போகும்படி உத் தரவுகொடுக்க அப்படியே இருடியினிடம் அகலிகைவந்து சேர்ந்து வாழ்ந்துகொண்டிருந்தாள். அப்பால் நடந்த கதையைச் சொல்லுகிறோம் கேட்பீர்களாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நடை

இந்திரனார்தன்கதையை இயம்புகிறேன்கேளுமினி
ஆயிரம்யோனியுங்கண் ணாகுமென்றமாமுனியை
தெண்டனிட்டுக்கொண்டு திரும்பினார்பூசைசெய்ய
தாணுவைமாலயனைத் தானேமனதிலெண்ணி
ஆணவமாயைதன்னை அகலவிட்டுயோகமதாய்
தான்செய்தகுற்றமெல்லாந் தாணுவேதீருமென்று
வனத்துரிஷிசாபமதை மாலயனேதீருமென்று
மெத்தவேபூசை விரும்பியேசெய்யலுற்றார்
பூசைதனைச்செய்த புதுமைதனைக்கண்டுமிக
தாணுவுமாலயனுந் தயவுடனேவந்துதித்து
ஆயிரம்யோனியுனக் காயிரங்கண்ணாகுமென்றார்
ஆயிரங்கண்ணாகுமென்ற அம்மூவரைப்பணிந்து
ஆயிரங்கண்ணாக அயிராவதத்தோனும்
வரமதிகம்பெற்று வாழுகிறநாளினிலே
அகலிகைசாபம் பிடித்ததேயந்நேரம்
தெய்வலோகப்பட்டணத்தில் வாழுகின்றதேவருக்கும்
எல்லார்க்குமாகப் பிடித்ததேசாபமது
வானுலகமெல்லாம் மலடாகப்போனதுகாண்
தான்மலடுமல்லாமல் தரணியெல்லாந்தான்மலடாய்
பூமிவிளையாமல் பொன்மாரிபெய்யாமல்
காமனெரிந்ததுபோல் காடுகளெல்லாமெரிய
காய்க்குமரங்களெல்லாங் காயுதிர்ந்துபோனதுவே
பால்பசுக்களெல்லாம் பால்வற்றிநின்றதுகாண்
பட்சியினங்களெல்லாம் பெருமலடுதானாக
கரடிமிருகமெல்லாங் கடுமலடாய்ப்போயினகாண்
புல்லுங்கருகிமிகப் பூக்களுமேயில்லாமல்
இந்திரலோகமெல்லா மீடழிந்துபோனதுவே
இந்திரனார்தேவி இதுவெல்லாந்தான்தெரிந்து
இந்திராணியென்று இளங்கோவைநானிருக்க
அனர்த்தம்விளைத்தீரே ஆனதொருஇந்திரரே
ரிஷியினதுசாபம் பலித்ததேயிப்போது
பத்தினிசாபம் பலித்ததுவுங்கண்டீரே
அவர்களிட்டசாபம் அவனியெல்லாஞ்சூழ்ந்ததுவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிகொண்டுவாழ்கையிலே மதிமயங்கிப்போனீரே
தபசுமறந்து கட்டழிந்தகாரணத்தால்
மனத்திற்றுயரமதாம் மலடாயிருந்தோமே
இடுவார்கள்பிச்சைதன்னைக் கெடுவார்தடுத்தாற்போல்
படுவார்கள்பாடெல்லாம் பட்டோமேஇந்திரரே
அம்பலத்தில்நின்றலையும் அனியாயஞ்செய்தவர்போல்
ஊரார்உடமைக்குப் பேராசைகொண்டவர்போல்
தேவர்களெல்லோருஞ் சேரமலடானோம்
இந்தப்படிசொல்லி இந்திராணிதான்புலம்ப
இந்திரனுங்கேட்டு இலச்சையுற்றுத்தான்வாடி
எந்தன்விதியாலே எனக்குமேயிந்தவினை
வந்ததேயென்று மனக்கவலைதான்கொண்டு
மானேகுயிலே மரகதமேநீகேளாய்
தேனேகனியே தெவிட்டாததெள்ளமுதே
அந்தரம்பைமாதை அடிமைகொள்ளும்பெண்ணேநீ
புத்திரனில்லாமல் பூதலத்தில்வாழ்வென்ன
சேனைபலதாழச் சிறுவனொருவனில்லை
மைந்தனில்லாவீட்டில் மறையோர்புசிப்பதில்லை
மகனில்லாவீட்டில் மற்றொருவர்போகார்காண்
வடிவுள்ளமாமயிலே வகையொன்றுசொல்லுகிறேன்
அரனாரைநோக்கி அரியதவஞ்செய்தாக்கால்
அம்மையுமைபார்வதிபோல் அதிகதவஞ்செய்தாக்கால்
எல்லாப்பதமும் இயல்புமிகவுண்டாகும்
என்றுமனையாட்கு இதமாகச்சொல்லியபின்

விருத்தம்

மங்கையேசொல்லக்கேளாய் மைந்தனில்லாமையாலே
தங்கியேவாழ்ந்திருந்துந் தரணியில்வசையுமாச்சு
கங்கைவேணியர்தன்பாதங் கண்டுமேவரத்தைப்பெற்று
இங்குநாம்வருவோமென்றே ஏகினார்கைலைமீதில்

நடை

சென்றுசிவன்கையிலை சேர்ந்தேயிருவருந்தான்
சத்தியைவேண்டித் தவம்பெறவேண்டுமென்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கரனாரைஞ்செழுத்தைத் தங்கள்மனதுவைத்துச்
சிவனோடுமையாளைச் சிந்தையிலேதானினைந்து
இந்திரனுந்தேவியுமாய் ஈசுவரர்பாலேகலுற்றார்
இந்தப்படியே இருவருமொற்றுமையாய்
கயிலையைத்தானோக்கிக் கடுகவேதானடந்தார்
கடிதாய்வழிகடந்து கயிலைக்குப்போனார்காண்
தென்கயிலைசேர்ந்து சிறந்தவிருவருமாய்
நந்திதனைக்கண்டு நமஸ்கரித்தாரந்நேரம்
நின்றுகைகூப்பி நெடுமூச்செறிந்துநின்றார்
நெடுமூச்செறிந்துநொந்து நின்றவரைத்தான்பார்த்து
தடுமாற்றநீக்கித் தயவாகவார்த்தைசொல்லி
தேவியும்நீயும் தேடிவந்தகாரியமேன்
தேடிவந்தகாரியத்தைச் செப்புமெனவுரைத்தார்
இவ்வார்த்தைகேட்டு இந்திரனேதுரைப்பான்
எவ்வார்த்தையென்று இயம்புவேனானடியேன்
சீராயுரைசெய்தாற் சிரிப்பார்களெல்லோரும்
மகனாசையாலே வருந்திநடந்துவந்தோம்
புத்திரனுமில்லாமல் பொன்னுலகையாண்டிருந்தோம்
பொன்னுலகையாளப் புத்திரனேதானுமில்லை
சந்ததிக்காகத் தவம்பெறவேவந்தோங்காண்
எங்கள்தமைக்காத்து இரட்சிக்கவேண்மென்றான்
அந்தமொழிகேட்டு அருள்நந்தியேதுரைப்பார்
வந்ததுநன்றுநன்று மகனுமக்குண்டாகும்
சிவனோடுமையாளைச் சிந்தையிலேதானினைந்து
தவமாயிருந்து தரையில்மிகவூசிவைத்து
ஊசிமேல்நின்று உற்றதவஞ்செய்வீரேல்
சிவனோடுமையாளும் சிந்தைமிகமகிழ்ந்து
சந்ததிபாக்கியமுந் தந்தேயருள்புரிவார்
இந்தப்படிக்குநந்தி யெடுத்துரைக்கவப்போது
நன்றெனவேயிந்திரனும் நாயகியுமப்போது
ஆற்றில்முழுகி யஞ்செழுத்தைநெஞ்சில்வைத்து
ஊசிநிறுத்தியதில் ஒருகாலைத்தானூன்றி
நின்றார்தவத்தில் நிருமலனைத்தானினைந்து
இந்திராணிதானும் இருந்தார்நெடுந்தவத்தில்
ஈசனேபிள்ளையருள் என்றேமனத்திலெண்ணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருவருமொன்றாய் இருந்தார்நெடுந்தவத்தில்
உள்ளங்காலுச்சி யொன்றுந்தெரியாமல்
தள்ளாதபுற்றும் தானேவளர்ந்ததுகாண்
வேருகளோடி வியனமரங்களுண்டாகிப்
பாருக்குள்வேரோடிப் படரத்தவசுசெய்தார்
அந்தத்தவத்தருமை யரனாரறியவில்லை
ஆனபொழுதிந்திரனும் அவன்மனைவிதன்னுடனே
எந்தப்படிதவங்கள் செய்வோமெனநினைத்துச்
சுந்தரியாள்தன்னுடனே சொல்லிவிசாரமுற்றுப்
பாதாளந்தோன்றவெட்டி பண்பாயனல்வளர்த்தி
வேதாளஅக்கினிபோல் மேலேபடர்ந்தெரிய
ஈசனே பிள்ளையரு ளென்றேதவமிருந்தார்
தண்ணீர்அருந்தாமல் சருகும்புசியாமல்
இந்தப்படியிருந்தார் இரண்டாயிரவருஷம்
அந்தத்தவத்தருமை யரனாருந்தானறிந்து
பார்வதியைப்பார்த்துப் பரமனருள்செய்வார்
இந்திரனுள்ள விடத்துக்குநாம்சென்று
மன்னுமுடிதேவரெல்லாம் வந்துதொழுதேத்த
பொன்னுலகையாண்டுமிகப் போகம்படைத்தருள்வீர்
என்றுவரம்கொடுப்போம் என்னச்சிவகாமி
இந்தப்படிபலத்தை யேதுக்குத்தான்கொடுத்தீர்
புத்திரனில்லாச்செல்வம் போதக்கொடுத்தீரே
புறறுவளர்ந்து போதமரமுண்டாக்கிக்
கண்ணீரொழுகுவதைக் கண்ணினாற்காணுமென்று
சிவனாரிடத்தில் செப்பினாள்பார்வதியும்
உள்ளபடிசொன்னாய் உமையவளேயென்றுரைத்துக்
கள்ளனிவனிந்திரனுங் கடுங்குற்றஞ்செய்ததுண்டு
மானேயவனிட மனத்தின்படிசெய்வோம்
தேனேயவன்செய்த தீவினைகள்மெத்தவுண்டு
ஒன்றும்அறியாமல் உபாயமாய்ச்சொன்னதென்ன
ஆனால்உனக்காக அருள்செய்வோங்கண்டாயே
என்றுசிவனார் இரங்கியுரைத்தனர்காண்
உமையாளுமங்கே யுரைப்பாள்மனம்நடுங்கி
ஈசுவரரேயும்மடியார் ஏதுபிழைசெய்தாலும்
நேயமுடன்தனை நீபொறுக்கவேண்டாமோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றுமையாள்சொல்ல இறையோன்மனமகிழ்ந்து
மன்றல்செறிவெள்ளி மலைதனிலேவீற்றிருந்த
நந்திதனையழைத்து நலஞ்சேருமிந்திரனைக்
கூட்டிவரச்சொல்லிக் கொடுத்தார்களுத்தரவு
வென்றிபுனைநந்தி விரைந்தோடியேயழைக்க
இந்திரனுந்தேவியுமாய் இன்பமுடனெழுந்து
நந்தீசர்தன்பின்னே நன்றாய்நடந்தனரே
கந்தமலர்குழலுங் கடுகவேதானடந்தார்
கூட்டியேதானும்வந்து கோமானைத்தேவியுடன்
தேடுபுகழ்நந்தி திருவாசலில்நிறுத்தி
எண்ணத்தொலையாத இடியேறுதான்முழங்க
வண்ணக்கடல்முரசு வகைவகையாய்த்தான்முழங்க
சிந்தைமகிழத் திருநந்திதான்கொலுவில்
வந்துபுகுந்து வலக்கைப்பிரம்பதனால்
இதங்கள்அறியாமல் எதிர்த்துநின்றதேவர்தம்மை
ஒதுக்கிவிலக்கி யொருபால்நிறுத்தினரே
நேரேவிலக்கி நிறுத்தினார்விஞ்சையரை
உற்றபிரம்பால் ஒதுக்கியொருபுறமாய்ச்
சென்னிவணங்கித் திரண்டுதொழுந்தேவர்களை
உன்னியடித்தங் கொருபால் நிறுத்தியபின்
காலவெமதூதரையுங் கடக்கநிறுத்தினரே
வருணன்முதல்மற்றவரை வாகாய்நிறுத்தியபின்
ஈசனுக்குத்தோழனா யேற்றகுபேரனையும்
உருத்திரரையும்பக்கத் துண்மையாய்த்தானிறுத்தி
ஆனைமுகத்தானுடனே ஆறுமுகத்தானையும்
சேனைநடுமத்தியிலே சிறக்கஇருத்தியவர்
பக்கத்தில்வீர பத்திரனைத்தானிறுத்தி
மேனகையினோடு விளங்கும் அரம்பையுடன்
ஆனஊர்வசியும் அந்தமுள்ளதிலோர்த்தமையும்
நாடகங்களாடுமந்த நாதன்சிவசபையில்
தேடுபுகழ்நந்தி சேர்ந்தபலநாதர்களை
மிஞ்சுவக்கிரக வேடிக்கையுள்ளவரை
அஞ்சாமற்சொல்லி அடைவாய்நிறுத்தினர்காண்
காளிகளையெல்லாம் கலக்கநிறுத்தியபின்
சத்தமகாரிஷிகளையுஞ் சார்பினில்தானிறுத்தி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றுமுள்ளபேர்களையும் வகையாகத்தானிறுத்தி
விருப்பமுடனந்தி விண்ணவர்கோன்கிட்டவந்து
வந்தரனார்பாதம் வணங்குவாயென்றுசொல்ல
அந்தப்படியே யரனார்திருமுன்பு
சென்றுபுகுந்திந்திரனுந் தேவியிந்திராணியுமாய்
மன்றில்விழுந்து மலரடியைப்போற்றிசெய்யச்
சிந்தைமகிழ்ந்து சிவனாரெழுந்திரென்றார்
திருவாய்மொழிகேட்டுத் தேவியுடனிந்திரனும்
எழுந்துநின்றுகைகட்டி யெதிராகவேநிற்க
வந்தகருமத்தை வகையாகச்சொல்லுமென
இந்திரனுமப்போது இயல்பாகச்சொல்லுகிறான்
புத்திரனுமில்லாமற் பொன்னுலகையாண்டிருந்தேன்
புத்திரனில்லாதார் பொசிப்புப்புழுவல்லவோ
எத்தனைதான்வாழ்வு இயல்பாய்படைத்தாலும்
புத்திரனையில்லாமல் புலைநரகில்போவேனோ
சந்ததிதான் தாருமெனத் தார்வேந்தன்கேட்டதன்பின்
இந்திரனேசந்ததிதான் தந்தோமெனவுரைத்தார்
சந்ததிதந்த சங்கரனார்சொற்படியே
இந்திரனுந்தேவியுமாய் யின்பமுற்றுமீண்டனரே
மீண்டுமேயவர்கள் விரைந்துவரும்வழியில்
ஊர்பதியைநோக்கி யுலாவிவந்தாரப்போது
காமதேனுநற்பசுவைக் கயிலையிலேவரவழைத்துப்
பசுவின்முகம்பார்த்துப் பரமனருள்புரிவார்
சந்ததியில்லாமற் றவம்செய்தயிந்திரற்காய்
உன்னையவர்களுடன் அனுப்புகிறோமென்றுசொல்வாய்
அன்புடனேநீபோய் அருகிருந்துதான்வளர்ந்து
பாலகனையீன்று பாங்குடனேதான்கொடுத்து
வந்துவிடுநீயு மாதேயிளம்பசுவே
என்றுசிவனார் இவ்வார்த்தைசொல்லியபின்
நிமலன்றனைப்பார்த்து நெடுமூச்சுத்தானெறிந்து
தோத்திரங்கள்செய்து சொல்லுகின்றதப்பசுவும்
பூலோகம்போயிருக்கப் பொறுக்குமோயென்னுடல்தான்
பூலோகம்போயிருந்து புத்திரனையீன்றபின்பு
எனக்குமேமோட்சகதி எப்போவெனக்கேட்க
அப்போசிவபெருமான் அன்புமிகப்பெருகி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாராய்பசுவே வருந்திமெலியாதே
புத்திரனையீன்றவுடன் பூந்தேர்அனுப்புகிறோம்
உன்னாணைநாமும் உடனழைத்துக்கொள்ளுகிறோம்
என்றுசிவனார் எளிதாயுரைத்தபின்பு
போய்வருவேனென்று பொருந்திவிடைகேட்டதற்பின்
அந்நேரமேசிவனார் அன்புவிடைதான்கொடுத்தார்
பசுவுமேயப்போது பரமனருட்படியே
இடியுங்கடலும்போ லெங்குமேதான்முழங்க
அவரடியின்பின்னே யலறித்தொடர்ந்ததுவே.

## விருத்தம்

அந்தணர்கயிலைவாசன் அருட்படிகாமதேனு
இந்திரன்பின்னேநல்ல விளங்கன்றாய்வேடங்கொண்டு
பந்துபோற்குதித்துமெள்ள பாரினில்வந்துமேவ
வந்ததோர்பசுவையிந்திரன் பரிசையாய்த்துதிகொள்வானே.

## வசனம்

எப்படியென்றால், சுவாமி கயிலையங்கிரிவாசரான பரமேசுவரர் காமதேனுவாகிய பசுவை வரவழைத்துப் புத்திர தவஞ்செய்த இந்திர 'னிந்திராணிக்கு நீ போயிருந்து ஒரு புத்திரனையீன்று கொடுத்துவாவென்று விடை கொடுக்க, அப்போ பசுவானது எனக்கு மோட்ச கெதி எப்போவென்று கேட்க, பரமேசுவரரும் அப்போது புத்திரனைப் பெற்றுக் கொடுத்தவுடனே பூந்தேர் அனுப்பி உன்னை இவ்விடம் வரவழைத்துக் கொள்ளுகிறோமென்று சொல்லி விடை கொடுக்க, அப்படியே விடை வாங்கிக் கொண்டு இளங்கன்றாக வேடங்கொண்டு அண்டபுவனங்களெலாம் இடிபோல முழங்கத்தக்கதாகப் பந்து குதித்ததுபோல் நடந்து இந்திரன் இந்திராணி போனவழியை நோக்கி அவர்களிருவரையுங் கண்டவுடனே அவர்களிருவரும் பசுவாகிய கன்றைக் கண்டு சுவாமி கயிலையங்கிரிவாசராகிய பரமேசுவரரும் உமையாளும் அனுப்பி வைத்ததாய்க் காணப்படுகிறதென்று இருவரும் ஆனந்தங் கொண்டாடிப் பசுவைகட்டி முகந்து தாங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடவே கூட்டி வருகிறார்கள். அப்பால் நடக்கிற அதிசயங்களை இனிமேல் விஸ்தாரமாகச்சொல்லுகிறோம்

நடை

வந்ததொருகன்றை வாரியெடுத்தணைத்து
அவாவியெடுத்து அங்கமெல்லாந்தான்குளிர்ந்து
இன்றுநமக்கீசர் ஈய்ந்தருளுஞ்செல்வமென்று
கன்றையெடுத்து கடிகவழிநடந்தார்
பூபாலரெல்லாம் பூமாரிபெய்தனர்காண்
மற்றுமுள்ளாரெல்லா மனமகிழ்ந்துகொண்டாட
பிரமாமுதலானோர் பிரியமுடன்பார்த்துநிற்க
நடந்தாரிருவருமே நல்லுலகந்தானோக்கி
ஒருவர்கொருவர் உவந்துதந்துதான்பேசி
சந்ததியாய்வந்தகன்றைத் தான்கொண்டுசென்றார்கள்
பட்டணத்திலுள்ள பரிஜனங்களெல்லோரும்
இந்திரனிந்திராணி யிவர்கள்வரவுகண்டு
சந்ததிபாக்கியமும் தான்பெற்றுவாரார்கள்
என்றுசொல்லியப்போது இயல்பாய்ப்பறையறைந்தார்
தேசமெல்லாந்தானறிய சிறப்பாய்ப்பறையறைந்தார்
பறையோசை கேட்டவர்கள் பாக்கியம்பெற்றோமெனவே
பட்டணஞ்சென்றதேவ பதியுமிந்திராணியுமாய்
சிங்காதனத்தில் சிறக்கவேதானிருக்க
அம்பொற்றருவான அழகானகற்பகக்கீழ்
செம்பொற்பதியில் சிறப்புடனேதானிருக்க
நல்லதொருசுந்தரியும் நன்றாய்மனமகிழ்ந்து
சங்கரனார்தங்களுக்குத் தயவாய்க்கொடுத்தகன்றை
மங்காதகன்றை வளர்த்தெடுக்கவேணுமென்று
தாதியரையழைத்து தயவாயுரைத்தாள்காண்
மானனையீர்நீங்கள் மனமகிழ்ந்துகொண்டாடி
கானகத்திலோட்டாமல் கனமாய்வளர்க்கவென்று
சாற்றுமந்தவார்த்தைதனைத் தான்கேட்டுத்தாதியர்கள்
போற்றியெடுத்தணைத்துப் பொன்போல்வளர்க்கலுற்றார்
சீருடனேபோற்றித் திரமாய்வளர்க்கலுற்றார்
ஒருநாளுக்கொருநாள் ஓங்கிவளர்சந்திரன்போல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருமையாய்க்கன்றுதனை அன்பாய்வளர்த்தனர்காண்
பேரிடவேண்டுமென்று பேர்முகூர்த்தந்தான்பார்க்க
பஞ்சாங்கம்பார்ப்பாரைப் பாங்காய்அழையுமென்றார்
சாத்திரவாதியெல்லாம் சடுதியழையுமென்றார்
தபோதனரையெல்லாந் தாமேயழையுமென்றார்
கட்டியக்காரர்சென்று கடிந்துமிகவோடி
பார்ப்பாரையெல்லாம் பாங்காயழைத்துவந்தார்
தபோதனர்கேட்டவுடன் சந்தோஷமாகவந்தார்
சாத்திரவாதியெல்லாந் தானேதான்வந்தனர்காண்
நாளுமுகூர்த்தமொடு நல்லதினமும்பார்த்து
ஆர்பேரிடுவமென்று ஆலோசனைசெய்தார்
அப்பொழுதுவியாச பகவானருளினொடு
இந்திரன்தாயார் இளங்கொடியாள்தன்பெயரை
இடுமென்றுசொன்னபடி எல்லோருஞ்சொன்னார்கள்
அந்தப்படிபெயரை அமைக்கவேவேணுமென்று
வைகாசிமாதம் வளர்ந்தஇருபத்தொன்றில்
சுக்கிரவாரமதில் சூழ்ந்ததிருவாதிரையில்
அமிர்தகணயோகம் அன்பாயிருக்குதென்றார்
அந்தப்படியே அவர்கள்மொழிதப்பாமல்
பட்டணமெல்லாம் பதிவாயலங்கரித்து
சோடித்தெல்லார்தமக்குங் கொடுத்தாரேதட்சணைகள்
தட்சணைகொடுத்தவுடன் திருப்பெயரைத்தானழைத்தார்
மாவேந்திரியென்று வரவழைத்தாரப்பசுவை
அழைத்தவுடனே யனைவோர்க்குந்தானமிட்டார்
மாதானங்கோதானம் வஸ்திரதானஞ்செய்தார்
வாத்தியங்களெல்லாம் வரிசையாய்த்தான்முழங்க
பதினெட்டுவாத்தியமும் பாங்காய்முழங்கிடவே
நாடகசாலைப்பெண்கள் நாட்டியங்கள்தானாட
ஓமங்கள்பூசைகள் ஒன்றுந்தவறாதபடி
அன்னதானங்கள்முதல் அன்பாய்க்கொடுத்தனர்காண்
இந்தப்படியே இருபதுநாள்வரைக்கும்
பட்டுப்பட்டாவளியும் பாங்காய்க்கொடுத்தனரே
மைதவழுங்கன்றுக்கு வகையாய்ப்பணிபூண
பொன்னாலேதும்பும் புரிகயிறும்போட்டார்காண்
நாலுகாலிற்குளம்பும் நல்லதொருதங்கமதாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேனியெல்லாந்தங்கமதாய் வுரைத்துமேதானழுத்தி
நவரத்தினவகைகளெல்லாம் நன்றாகத்தானழுத்தி
ஆபரணாதியெல்லாம் ஆணிமுத்துவயிரமதாய்
கொம்புக்குநல்ல கோமேதகமழுத்தி
நாலுகாற்சிலம்பும் நல்லதொருவயிரத்தால்
வாரியேபூட்டி வளர்த்தார்கள்நற்பசுவை
பாலமுதமூட்டி பதிவாய்வளர்க்கையிலே
இந்தவரிசையா யிதமாய்வளர்க்கையிலே
கண்ணாகப்போற்றிக் கருணையுடன்வளர்த்தார்
நாளிரண்டுநாளையிலே நற்பசுவுந்தான்வளர்ந்து
திங்கட்பிறைபோலாக சீர்பெற்றுதான்வளர்ந்து
பிள்ளையென்றுசொல்லி பெருமையுடன்தான்வளர்த்தார்
இந்திராணிசெய்யும்வகை யேதென்றுதான்கேட்கில்
நித்தப்படிநடக்கும் நியமநிஷ்டைசொல்லுகிறேன்
பொய்கைதனிற்சென்று போதவேநீராடி
சிவபூசைதவபூசை செப்பமுடன்செய்தபின்பு
தங்கச்செம்புதனிற் றானேஜலங்கோரி
புட்பாதிகளெல்லாம் போதவேகொண்டுவந்து
பசுவினிடபாதமதைப் பாங்காகச்சுத்திவந்து
பத்திரபுட்பமதைப் பாங்குடனேதான்சாத்தி
சிவனைநினைத்துத் தோத்திரங்கள்செய்துவந்தாள்
இந்தப்படியா யிருக்குமந்தநாளையிலே
பசுவின்முகத்தைப் பார்த்துமனஞ்சலித்து
நெடுநாளுந்தானாச்சே நீயுமெனைப்போல
நிற்கும்வகையேதென்று நிமலனையேதான்தொழுவாள்

விருத்தம்

அய்யய்யோ சிவனே நான்செய்யறந்நினுங்கொடுமை யுண்டோ, வையகந்தன்னிலேதான் மலடியென் றென்னை வைத்துத், துய்யநற் பசுவுங்கூடச் சுரப்பிலா மலடாய் நிற்கச், செய்யுமா றேதோவென்று சிந்தையும் நொந்து சொல்வாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வசனம்

அகோதெப்படியென்றால் தேவேந்திரனும் இந்திராணியும் அதிகதவசுசெய்து வரம்பெற்றுத் தங்கள் பதியைநோக்கி வரும்போது சுவாமி உத்தரவு கொடுத்தனுப்பிய காமதேனுவாகிய பசுவானது தங்களிடஞ்சேர்ந்ததைக்கண்டு சுவாமியும் உமையாளும் அனுப்பினாரென்று மகாசந்தோஷத்துடன் அவர்களும் போற்றிவளர்க்க நெடுநாட் சென்றும் நம்மைப்போல நாம்வளர்த்த பசுவானது மலடாய்நிற்கிற காரணம் என்னமோவென்று வையகத்திற் பேரெடுத்ததுமல்லாமல் தவசுசெய்து கிடைத்த பசுவும்இப்படிநிற்குதென்று இந்திரனிடத்தில் இந்திராணி நெடுமூச்செறிந்து அவர்களிருவரும் புலம்பித் தவிக்கிறார்கள் என்றவாறு. அப்பால் நடக்கும் அதிசயத்தை விவரமாய்ச் சொல்லுகிறோம்.

## நடை

நாம்தாமலடிருந்தோம் நாம்வளர்த்தநற்பசுவும்
தவத்தருமையால்வந்த காமதேனுதான்மலடாம்
மலடாகிநின்ற மயக்கமதைத்தான்பார்க்க
விதியோவிதுவும் விளம்பீரோவென்றுசொல்லி
இந்திரருங்கேட்டு யேங்கிமுகம்வாடி
நாகமடந்தையரே நானொன்றுசொல்லுகிறேன்
இதுவரையும்பாலன் எமக்குவரக்காணோமே
இன்னமும்நான் போயி யெங்கள்பரமேஸ்வரன்போல்
தவசுசெய்யநான்போவேன் தப்பாதிளங்கொடியே
சங்கரனைநோக்கித் தவசுமிகச்செய்து
வண்மையுள்ளகானகத்தில் மகாதவமாய்நானிருந்து
பூங்காவனந்தேடிப் போகிறேனென்றுசொல்லி
கமண்டலமும்புலித்தோலும் கையில்பிரம்புடனே
கப்பறையும்புத்தகமும் கையில்மழுவாளுடனே
பத்தினியக்கினியைப் பாங்காகத்தான்வளர்த்தி
இந்திராணிதன்னிடத்தில் இயல்பாயனுப்பினன்காண்
வந்துமேகானகத்தில் வாய்த்ததவசுசெய்ய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவனாரைநோக்கித் தெண்டனிட்டுதவசிருந்தான்
இந்திரனுங்கானகத்தி விசைவாய்த்தவசிருந்தான்
வாசியைநோக்கி வாகாய்த்தவஞ்செய்தான்
அஞ்செழுத்தைநெஞ்சில்வைத்து அரனைமிகநினைந்து
ஆராலும்முடியாத அதிகதவஞ்செய்யலுற்றான்
சற்றுமசையாமல் தவஞ்செய்தானப்போது
முப்பத்துமுக்கோடி தேவர்களுமுத்தோரும்
நிருபன்குபேர நிருதிதிசைபாலகரும்
சந்திரருஞ்சூரியரும் சத்தமகாமுனியும்
தேவர்களெல்லோருஞ் சேரவேதான்கூடி
மூவரையுந்தெண்டனிட்டு முறைமையாய்ச்சொல்லுகிறார்
சித்தமிரங்குமையா தேவேந்திரனாரும்
புத்திரவாஞ்சையில் பூமிமறந்துவிட்டார்
மைந்தனைவேண்டியே மகாதவசுசெய்கிறார்
அப்போதரனார் அகமகிழ்ந்துசொல்லுகிறார்
நந்தீசர்தன்னை நாயாகமாய்த்தானழைத்து
வள்ளுவனையிங்கே வரவழையுமென்றுரைத்தார்
வள்ளுவனையப்போ வரவழைத்தாரந்நேரம்
செய்யசிவனாருந் திருவாய்மலர்ந்தருளி
சித்திரபுத்திரனை தேடியழையுமென்றார்
சித்திரபுத்திரரைச் சிறப்பாகக்கண்டான்காண்
அத்தனாரும்மை யழைத்துவரச்சொன்னார்கள்
சித்திரபுத்திரருஞ் சிந்தையகமகிழ்ந்து
பாதமதில்வீழ்ந்து பணிந்துகண்டார்புத்திரரும்
தேசம்விளையாடிவந்த சித்திரபுத்திரனே
கணக்காற்பெரியவனே காரியத்தில்வல்லவனே
தேவேந்திரனுமங்கே திகைக்கின்றான்பிள்ளையின்றி
மைந்தனைவேண்டி வருந்துகிறானென்றுசொல்ல
சித்திரபுத்திரருஞ் செய்தியொன்றுசொல்லுகிறார்
அரியதவம்பண்ணினாலும் ஆவதுண்டோயிந்திரற்கு
மைந்தன்பிறக்க வழக்கில்லைநாயகரே
என்றருளிச்செய்ய இருந்தவர்களெல்லோரும்
சத்தியருள்கொண்டு தவஞ்செய்தயிந்திரற்கு
புத்திரனைத்தான்கொடுப்பாய் பூதநாதாவென்ன
சிவனாருமங்கே திருவாய்மலர்ந்தருளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூமிவிளையாடிவந்த புண்ணியரேநீருமொரு
தீமையைநீக்குமென்று திருவாய்மலர்ந்தருளி
பாலகராய்ப்போய்ப்பிறக்க பரமன்விடைகொடுக்க
புத்திரராகப்போய்ப்பிறக்க சிவனார்விடைகொடுக்க
தேவேந்திரன்வயிற்றிற் செனிக்கதர்மமல்ல
இந்திரற்குப்பிள்ளை யெழுதவில்லைகணக்கிலென
அந்தமொழிகேட்டு அரனாருந்தான்மகிழ்ந்து
எந்தவகையானாலும் இந்திரற்குஅன்புடனே
செந்தாமரைப்பூ தினம்பூர்க்கும்பொய்கையிலே
இந்திராணிதான்வளர்த்த இளம்பசுவுமப்போது
தண்ணீர்குடிக்க தான்வருமேயந்நேரம்
தாமரைப்பூவாகத் தண்ணீருடன்கலந்து
ஆவின்வயிற்றில் அவதரித்தஅற்புதங்காண்
வளர்த்தபசுவயிற்றில் வருவாயெனவுரைத்தார்
ஆதிலடியேன் அருள்பெற்றேனென்றுசொல்லி
கூறுபெற்றேனென்றுசொல்லி கும்பிட்டெழுந்திருந்து
தேவர்முனிவரையுஞ் சிறப்பாகவேயனுப்பி
வாய்புதைத்துநின்று மகவைமிகநோக்கி
செப்புகின்றாரீசுரரும் சித்திரபுத்திரர்க்கு

## விருத்தம்

அரனுடனேவாழுந்தேவ ரானதோருயிர்கட்கெல்லாம்
பரனுடன்பாவபுண்ய பத்திரமெழுதவேண்டிக்
கரமிசையுதித்தசித்திர புத்திரசிகாமணிக்காயென்
றருமையாயவனையீசன் வரவழைத்தருள்செய்வானே
சித்திரபுத்திரரைச் சிவனுமேவரவழைத்து
பத்திரநாவிதன்னிற் பாங்குடன்பூவாய்ச்சென்று
வச்சிரன்வளர்த்தஆவின் வயிற்றினில்சென்றுபுக்குப்
புத்திரனாய்ப்பிறக்கப் போவெனவிடைகொடுத்தான்
எழுதினகணக்கைநீயும் இறைவன்மால்வசத்திலாக்கிப்
பழுதில்லாப்பூமிதன்னிற் பகுத்துரைதெரியவப்பால்
வழுவில்லாதொழுதுநாமும் வரமுனக்கருளிச்செய்தோம்
எழுமெனப்பூமிபாரக் கணக்கையுமருவிக்கீர்ந்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வசனம்

அதெப்படியென்றால் முன் கயிலாசபர்வதத்திலேயும் வைகுண்டத்திலேயும் பிரமலோகத்திலுமுண்டான தேவர்கள் ரிஷிகள் தபோதனர்கள் முதலானவர்கள் செய்கின்ற பாவபுண்ணிய கணக்குங் கருவும்பார்த்து சிருட்டிசெய்த சித்திரபுத்திரரை ஈஸ்வரர் அழைத்துத் தேவேந்திரன் மகாகொடூரமாய் அந்தரமாய் தவசுசெய்கிறதைப் பாருமென்று சொல்லவும், சித்திரபுத்திரர் அவருக்குச் சந்தானமில்லையே அவர் தவசுசெய்தாலுமில்லை என்று சொல்ல அப்போது சிவன் எந்தவிதத்திலும் நீயேபோய்ப் பிறந்து புத்திரவாஞ்சையைத் தீர்க்கவேணுமென்று சொல்ல இந்திரன் வயிற்றிற் பிறக்கக் காரணமில்லை என்று சித்திரபுத்திரர் சொல்ல இந்திராணிக்குத் தாம் அனுப்பிய காமதேனுவாகிய பசுவின் வயிற்றிற் செனித்தாற் குற்றமில்லை. அதற்குச் சம்பு மகா பொய்கையாகிய தடாகத்திற் றாமரைப் புஷ்பமாய் அவதரித்தால் அப்பொழுது அந்தப்பசுவானது தண்ணீர் குடிக்கவரும் தண்ணீருடனேபோய் செனித்து பிறப்பாய். உடனே மகவாசை தீரும் பூமியிலுண்டாகிய முன் பாவபுண்ணிய கணக்குகளுஞ் சீராகுமென்று கணக்கெடுத்தெழுதிக் கொடுத்து எழுத்தாணியும் கொடுத்து, அவ்விடத்திலுண்டான கணக்குங் கருவேலமும் மகாவிஷ்ணுவசம் ஒப்புவிக்கச்சொல்லி யுத்தரவளித்தபடி ஒப்புவித்துப் பின்பு சித்திரபுத்திரர் அவ்விடத்திலுள்ள பெரியோர்களையெல்லாம் அழைத்துக்கொண்டு சம்புமகாபொய்கையில் வந்து அவதரிக்கிற கதை இனிச்சொல்லுகிறோம் எ—று.

## நடை

ஈஸ்வரரும்ஈஸ்வரியும் யின்பத்துடன்மகிழ்ந்து
எந்தெந்தபுத்தகத்தை யெடுப்பேனான்னென்கோவே
ஆயிரம்பேரானாலும் அசைக்கவொண்ணாப்புத்தகமே
ஞானநெறிநீதிமுறை நன்னூலின்நீடுபுகழ்
பூண்டவர்கள்புத்தகத்தை போயெடுத்துவாருமென
போயெடுத்துவந்து பொற்பலகைதன்னில்வைத்தார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னெழுத்தாணியுடன் புத்தகமுங்கைகொடுத்தார்
முற்கணக்கும்பிற்கணக்கும் முன்னேட்டுப்படிப்பும்
எக்கணக்கும்பார்த்து எழுதுமென்றார்புத்திரரை
எழுதியந்தநாள்வரையில் எடுத்துக்கொடுத்தனர் காண்
ஏழுலோகக்கணக்கும் எழுதிமிகக்கொடுத்து
பாவிக்கணக்கும் பஞ்சபாதர்தன்கணக்கும்
நாகலோகத்திலுள்ள நன்மையுள்ளதன்கணக்கும்
பூமிதனில்மாயவனார் புண்ணியபாவக்கணக்கும்
எல்லாக்கணக்கும் எழுதிமிகக்கொடுத்து
ஆதிபரமசிவன் அண்டரண்டந்தான்வகுத்து
மூத்தகணபதியும் முதுகுவலமிருக்க
இளையகுமாரன் இடதுபக்கந்தானிருக்க
தேவாதிகளெல்லாம் சேரவேதானிருக்க
இருடிமுனிதேவர்கள் எல்லோருந்தானிருக்க
ஜாதிபதினெட்டுந் தப்பாமல்தான்வகுத்து
எமதர்மராசன் இயல்காலதூதருடன்
பல்லாயிரங்கோடி பகிரண்டந்தான்வகுத்து
புண்ணியபாவம் புதுமையாய்த்தான்வகுத்து
இந்தவரைகணக்கை இயல்பாகதானெழுதும்
வச்சிரகாயமாய் வரைந்துகணக்கெழுதும்
பத்திரமாயதிகாரம் பலநாளுமுந்தனுக்கே
தப்பாமல்உந்தனுக்குத் தந்தோமெனவுரைப்பார்
சந்திரசூரியர்கள் தங்களொளிபோலெனவே
குண்டலமுங்காதிலிட்டுக் கூந்தல்முடிகூட்டி
ஆபரணாதியெல்லாம் அழகழகாய்தான்பூட்டி
சிவனாரிடத்தில் தீர்க்கவிடைவாங்கி
அம்மையுமையாளிடத்தில் அன்பாய்விடைவாங்கி
எண்ணாயிரம்பூதம் எடுக்கவொண்ணாப்பட்டோலை
கூட்டிச்சமைத்துக் கொடுத்தார்களந்நேரம்
கட்டிச்சுருட்டிக் கக்கத்திற்றானிடுக்கி
தாங்குவாயென்று தானேவரங்கொடுத்தார்
தாமரைப்பூவாகத் தாபித்தார்வுத்தமரை
சித்திரைக்குச்சித்திரையிற் சிறந்தபவுரணையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தத்தலைக்கிழமை யாதித்தவாரமதில்
புத்தகமுந்நூலும் கூடப்பிறக்குமென்றார்
சிவனாரருட்படிக்குச் சிறந்தவிடைவாங்கி
அயிராவதங்களென்னும் ஆனைகளைத்தான்பூட்டும்
ஆகாசத்தேரும் அப்போதுதான்கொடுத்தார்
ஆகாசத்தேரில் அப்போதேதானேறி
வாராரேயுத்தமனார் வாவிதனைநோக்கி
செண்பகங்கள்நிறைந்த சிறந்ததொருபொய்கையிலே
ஆணிப்பவளம் அடுக்கடுக்காய்த்தான்விளையும்
வயிரவயிடூரியமும் வச்சிரகோமேதகமும்
புஷ்பராகங்களுமே புகழுமந்தப்பொய்கைதனில்
முத்துகள்வந்து முழங்கும்மந்தவாவிதன்னில்
சங்குகள்சூலங்கொண்டு தவழுமந்தப்பொய்கையிலே
கெருடனுமங்கே கிளைகூடிக்கொண்டாடும்
மயிலினங்களெல்லாம் மகிழ்ந்துவிளையாடும்
அன்னங்கள்தாராக்கள் அமர்ந்தாடும்பொய்கையிலே
வானரங்கள்பாடி மகிழ்ந்துவிளையாடும்
மாடாப்புறாக்களெல்லாம் வரிசையாய்த்தானிருக்கும்
புனுகுடனபிள்ளை பொருந்திமிகவாழும்
சவ்வாதுடன்பிள்ளை தானுமிகவாழும்
கஸ்தூரிபிள்ளை கவியுமந்தப்பொய்கைதன்னில்
கவரிமான்வந்து கலந்துவிளையாடும்
காண்டாமிருகங் குதித்தாடும்வாவிதனில்
புட்பாதிகளெல்லாம் பொலியுமந்தநீராவில்
கனிவகைகளெல்லாம் காய்க்குமந்தப்பொய்கையிலே
செந்நெல்விளைந்து சிறந்திருக்கும்நீராவி
மல்லிகைமுல்லை வாய்த்தசிறுபிச்சுகளும்
இருவாட்சிபிச்சி இருந்துமிகவீசும்
மருவுமருக்கொழுந்து மணம்வீசும்பொய்கைதனில்
ஏலங்கிராம்பும் இலங்குமந்தநீராவி
சாதிக்காய்பத்திரியும் தான்விளங்கும்பொய்கையிலே
மரங்களிற்றேனருவி வந்துமிகப்பாயும்
வண்டுகள்தும்பிமுதல் மதுவுண்ணும்பொய்கைதனில்
மந்திகள்பாய்ந்து மதுவுண்ணும்பொய்கைதனில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செந்தாமரைபூத்துச் சிறப்பிக்கும்வாவிதனில்
அல்லிமலரும் அப்படியேதான்பூர்க்கும்
சந்திரசூரியர்கள் தானுதிக்கும்பொய்கைதனில்
ஆதிப்பிரமாவும் அமர்ந்தாடுநீராவி
நாராயணர்முதலாய் நல்லரிஷிகளுமே
முனிவர்முதலாக முத்தர்தபோதனரும்
சித்தர்முதலானோர் சிறந்தபொய்கையிலே
கன்னியர்களெல்லாம் கலந்துவிளையாடுவார்
பழையவினைகளெல்லாம் பரந்தோடுங்கண்டீரே
தீவினைகளெல்லாந் திடுக்கிட்டுத்தானோடும்
பிணிகள்முதலாகப் பிறக்கிட்டுத்தானோடும்
கிழவர்முழுகினால் பாலகராகிப்பிறப்பார்
இந்தவிதமா யிருக்குமந்தப்பொய்கையிலே
சித்திரபுத்திரருஞ் சீராகவந்துதித்தார்
தாமரைப்பூவாகத் தான்வந்தவதரித்தார்
இனிமேல்நடக்கும் இக்கதையைக்கேளுமென்றார்
ஏலங்கருங்குழலாள் இந்திராணிதன்றனக்கு
நித்திராதேவி நிறையவேதான்பிடித்து
பஞ்சணைமெத்தையில் சயனித்தாள்பைங்கொடியும்
அப்போதுசொற்பனங்கள் அழகாகக்கண்டனளே
கண்டுமகிழ்ந்து கடுகிட்டெழுந்திருந்து
தாதியரைத்தானழைத்து தானுமேயெடுத்துரைப்பாள்
இந்திரரைப்போலே யெந்தன்மடிமீதில்
சந்திரர்கள்சூரியர்கள் தங்கள்ஒளிபோலச்
செம்பொன்னெழுத்தாணியுடன் சேர்ந்துபிள்ளைபோல்
பச்சுடம்புநல்ல பால்சுரக்கக்கண்டேனே
காயாதவாழை காய்க்கவுங்கண்டேனே
இன்பம்பெருகி யிருதோழும்பூரித்தேன்
கொட்டைபலாமரமுங் கொழுந்துவிடக்கண்டேனே
பதினாலுலோகமுதல் பண்பாய்க்கணக்கெழுத
குண்டகனாவுங் கைமேற்பலிக்கவென்று
சிந்தித்துநின்று சிவன்பாதமேதொழுது
வேழமுகத்து விநாயகனைத்தெண்டனிட்டு
மயிலேறும்பெருமானை மனமகிழ்ந்துகொண்டாடி
மூவரையுமங்கே முழுதுமே தெண்டனிட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியபகவானைத் தோத்திரங்கள்செய்யலுற்றார்
கண்டகனாப்படியே காசினியிற்கொண்டாடி
குண்டலங்கள்மின்னக் குமாரன்வந்துதோன்றுதல்
பொன்கனகமாரி பொழிந்திடுங்களெல்லோரும்
என்றரனார்பாதம் ஏந்திப்பதிந்துநின்று
இந்திராணிதான்வளர்த்த இயல்பசுவையந்நேரம்
தும்புதரித்துவிட்டார் சூரியனுமப்போது
கட்டவிழ்த்துக்கொண்டு கடுகப்புறப்படுதே
இந்திராணியம்மை யிளங்கோதையோடிவந்து
முத்திமுகந்து முகத்தைமிகத்தடவி
நான்மலடியென்று நாடெல்லாந்தானறியும்
என்னோடேகூட நீயுமலடாகாமல்
இனத்துடனேகூடி யின்பமுறமேய்ந்திடுவாய்
வனங்கள்தனிலே வளர்மிருகமெத்தவுண்டு
இனத்தாரைவிட்டு இனம்பிரிந்துமேயாமல்
எல்லைக்கடவாமல் இளம்பயிரைத்தின்னாமல்
ஈணாதசாலி யிளஞ்சாலிதின்னாமல்
குலையோடேயாமணக்கை கொழுந்தோடருத்தரனே
சோளக்கதிரைக்கண்டாற் சுற்றியேமேயாமல்
எளங்கடுகுநாய்கடுகு ஏறிட்டும்பாராமல்
கள்ளிகளைத்தின்னாமல் காய்ந்தபுல்லுமேயாமல்
இத்தனையும்நீக்கி யிதமாகத்தான்மேய்ந்து
மாலைகருகருத்து மையிருளாகுமுன்னே
எல்லைக்குவந்துவிடு என்மகளேயென்றுசொல்லி
இந்தப்படியே யிசைந்தபுத்திதான்சொல்லி
மேய்ந்துவாவென்று விட்டாளேயப்பசுவை
மேய்ந்துவருவதற்கு மெய்குளிர்ந்ததேயப்பசு
சிலம்புகலகலவெனச் செஞ்சலங்கையோசையிட
ஆபரணத்தோடே யசைந்தேவிளையாடி
அடிமேலடிவைத்து அன்னம்போல்தான்நடந்து
காட்டோடேசென்று கடுகெனவேதான்மேய்ந்து
பொற்புல்லுந்தின்று புனலுமிகத்தானருந்தி
தண்ணீர்தாகத்தை தான்பொறுக்கமாட்டாமல்
கண்ணாயிரமுடைய காவலனார்சோலையிலே
இந்தப்படியே யிருக்கிறநேரமதில்
சிவனாருமங்கே சித்தமகிழ்ந்தன்னேரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலைகடலிலேயுதிக்கும் ஆதித்தபகவானை
விரையவேதானழைத்து விடைதந்தாரென்னவெனிற்
தேசமதையாளுந் தேவேந்திரன்தேவி
பிள்ளையாய்த்தான்வளர்த்த பெரியதொருபசுவும்
சம்புலதத்திற் றானிருக்குஞ்சோலையிலே
திக்குத்திசைகள் தெரியாமல்நிற்குதுகாண்
வழித்தடங்கட்டி வரும்போதுவாவியிலே
தண்ணீர்குடிக்குந் தருவாயில்நீதானும்
செந்தாமரைப்பூவைச் சிறப்பாகமுன்னிடுவாய்
என்றரனார்சொல்ல ஏற்றபகவானும்
திகைத்தபசுவுக்குத் தெரியவழிகாட்டிடவே
வழியின்படியே வந்ததுவேநற்பசுவும்
சப்புமகாப்பொய்கை தன்னருகேவந்துநிற்க
பொய்கைதனைக்கண்டு பூரித்துஆகமெல்லாம்
சுற்றிவலம்வந்து துய்யதிருநற்பசுவும்
தங்கப்படித்துறையைத் தான்கண்டேயங்குள்ள
புதுமைகளெல்லாம்பார்த்து பூரித்திருதோளும்
ஆவலுடன் தண்ணீர் அருந்துமந்தவேளையிலே
தப்பாமல்சூரியனும் தாமரைப்பூப்பறித்து
போடவேதான்தின்று பொறிகலங்கிச்சூலாகி
வால்வீசிக்கரையேறி மயங்கியேசூலாகி
முட்டுகளுந்தானசைத்து முகமுமிகக்குழைந்து
வாயில்நுரைதிரண்டு மயிர்க்குச்சுதான்சொரிந்து
முட்டிவணங்கி முன்வயிறுதான்தள்ளி
நாலுதிக்கும்பார்த்தும் நடுங்கிவழிநடந்து
காதுமடைத்துக் கண்ணுமிருளாகிச்
சிவனாரையங்கே தோத்திரங்கள்செய்துமெள்ள
எல்லைதனில்வரவும் ஏங்கிமிகத்தளர்ந்து
செட்டியார்கள்வீதியிலே சென்றுமேகால்மடித்துப்
படுத்ததேய்ப்போ பலபேருமோடிவந்து
நாடாளுமிந்திரற்கும் நாகமடந்தையற்கும்
தேடாத்திரவியமே சிறந்தமகாதேவியம்மா
மயிலேநீபோமிடத்தில் மலைநாகந்தீண்டியதோ
மாயமிருகம் வளைத்துமிரட்டினதோ
நச்சுப்புல்லுத்தின்றதுவோ நாகங்கடிந்ததுண்டோ
என்றுபுலம்பி எல்லோருமோடிவந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஷத்துக்குலகுபார்த்து மேல்தடவிநீறுமிட்டு
செட்டிச்சிகளெல்லோரும் சிறக்கவேயோடிவந்து
சந்தனங்குங்குமந் தானுமிகக்கொண்டுவந்து
ஆவின்மேலெல்லாம் அடைவாகத்தான்பூச
அப்போவொருதாதி யானதொருவார்த்தைசொல்வாள்
பசுவின்வடிவல்லப் பாலன்வடிவென்றுசொல்லிக்
கழுநீரும்புல்லுங் கலந்துகுடிக்கவைத்து
சந்தனமுப்பன்னீருந் தானுமிகப்பூசி
ஆலவட்டங்கொண்டு அங்கிருந்துதான்வீச
சுற்றுதிரைகட்டி சூழவேகாத்திருக்க
தாகந்தெளிந்து தான்விழுத்துப்பார்த்தவுடன்
பசுவின்வயிற்றில் இருக்குமந்தப்பாலகனுஞ்
சிறப்பாய்பிறந்திருக்க வேணுமென்றார்செட்டிச்சிகள்
என்றபொழுதே யெழுந்ததேநற்பசுவும்
செம்பொன்மணிமண்டபத்திற் சேரவேவேணுமென்று
ஆசாரமேறி அசையாமணியடித்துத்
தங்கவணித்தூணோடே சாய்ந்ததுகாண்அந்நேரம்
இந்திரனார்தேவி யிளங்கோதைதான்கேட்டு
அசையாமணியை யசைக்கவந்தகாரியமேன்
இந்திரரும்போனார் தவத்துக்கேயென்றுசொல்லி
எந்தவிதமோ தெரியவுமாட்டுதில்லை
பாருங்களென்றுசில தாதியரைவிட்டார்காண்
போனார்கள்தாதியர்கள் பொற்கொடியாள்சொற்கேட்டு
வந்துமேபார்த்து மறுபடியும்சொல்லலுற்றார்
நாகமடந்தையரே நல்லதொருதேவியரே
வளர்த்தபசுவந்து மயங்கிக்கிடக்குதென
எண்ணத்தொலையாத ஏற்றபசுக்களுண்டு
எந்தப்பசுவென்றுகண்டீர் ஏந்திழையீர்சொல்லுமென
கண்கள்பவளமுமாய் கண்டவர்க்குநல்லுறவாய்
நெற்றியிலேவெள்ளியுமாய் நிறமெல்லாம்பொன் னிறமாய்
என்றமொழிகேட்டு ஏங்கியேயோடிவந்து
சிங்காதனத்தைவிட்டுத் திரும்பியேயோடிவந்து
தேனேமரகதமே தியக்கம்வந்தகாரியமேன்
மானேமரகதமே மயங்கிடுவதென்னவென்று
துயரத்துடனே சொல்லுவாளிந்திராணி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### விருத்தம்

அந்நீதம் நடந்ததுண்டோ வானுயர்த் தவிர்த்த துண்டோ, நிந்தயாய்ப் பெரியோர் முந்நூல் நெடு முறை தவறினோமோ, கந்தன்மாலயன்வேறென்று கருத் தினில் நினைத்ததுண்டோ, உந்தன் முன்னோர்கள் செய்த ஆழ்வினை முடிந்தவாறோ.

### நடை

வானேயுனக்கு வஞ்சனைகள்செய்ததுண்டோ
கொள்ளிக்கண்ணியான கொடும்பாவிபார்த்தாளோ
மலைமீதிலேறி மலைப்புல்லுதின்னுகையில்
விஷங்கள்கடித்ததுண்டோ விள்ளுவாயெந்தனிடம்
உந்தன்றிருமேனி யுள்ளடைந்துவாடுவதேன்
இந்தவிதிவருமோ அறியேனேயென்றுசொல்லி
குங்குமச்சந்தனமும் கூட்டிக்குழம்புசெய்து
செங்கையால்வாரித் திமிர்ந்தாளேயுத்தமியாள்
அப்போதுகூடத் திரவில்லையம்மயக்கம்
காடிக்கழுநீருங் கஞ்சியுந்தான்கலந்து
விட்டபொழுதே குடித்ததுவேநற்பசுவும்
பாரக்களைதீர்ந்து பார்த்துமேயந்நேரம்
கண்கள்பொறிபறக்குங் காலசைந்துவால்சுற்றும்
மானத்தைப்பார்த்து மனதையருவருக்கும்
ஆனந்தமாகி யதிரநடனமிடும்
சிவசிவாவென்றுசொல்லி திகைத்துநெடுமூச்செறியும்
அரகராவென்று அலறுவதைத்தான்கண்டு
தேவியுமங்கே திகைத்துமொழிசொல்வாள்காண்
பசுவுக்குவந்தநோய் பார்த்தறிந்துசொல்வோரைக்
கூட்டிவாவென்றாள் கோதைமயிலாளும்
ஆயர்இடையர்தம்மை யழைத்தோடிவந்தார்கள்
வந்தவர்களப்பசுவை மதியோடுதான்பார்த்து
சொல்லுவாரந்த தோகைமயிலாட்கு
ஆரமுலைப்பசுவு யடங்கிமிகச்சூலாச்சே
இன்றுநாளையீனு மீற்றுமயக்கமிது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றுதான்சொல்லி யேகினாரப்போது
பசுவின்மயக்கத்தைப் பார்க்கமுடியாமல்
கோவிற்கால்தன்னிற் கொண்டுவாவென்றுரைத்தாள்
தாதியர்கள்கூடித் தானெடுத்தாரப்போது
கொண்டுவந்துவிட்டார் கோவின்கால்முன்பாக
சூழநிறைந்து தூயயிடம்பண்ணுவித்து
வாய்த்தபரிகாரிகளை வரவழையுமென்றுரைத்தாள்
பரிகாரிகள்வந்து பணிந்துமேதெண்டனிட்டார்
கோவைப்பிழைக்கவைத்தால் கோடிதனங்கொடுப்பேன்
என்றமொழிகேட்டு யேற்றபரிகாரிகளும்
காட்டுமருந்துங் கடுமருந்துமொருகோடி
சிவனைநினைத்து தோத்திரங்கள்செய்கிறாள்
அபயமபயமென்றாள் அல்லலொழிப்பாயென்றாள்
செங்கைசிவப்பத் திருவயிற்றிலேயறைந்தாள்
அய்யகோவென்று அடித்துகீழேவிழுந்தாள்
அப்போசிவனும் அங்குள்ளதேவர்களும்
கயிலாசமீதிருந்து கண்டார்களந்நேரம்
வானுலகந்தன்னை வழிதிறந்துபார்க்கலுற்றார்
வைகுண்டலோகம் வழிதிறந்துபார்த்தார்கள்
அநியாயமோவென்று அலறியழுதகுரல்
மகாதேவர்தானும் மனதாரக்கேட்டதன்பின்
சிவபெருமானங்கே திருவாய்மலர்ந்தருளி
சிவபெருமாவீஸ்வரியைத் திரும்பிமுகம்நோக்கி
போய்நீயுமையே புகழ்ந்தகுறிசொல்லென்றார்
பத்தினியாய்ச்சென்று பகுந்துரைப்பாயென்றருள
அந்தயுமையவளும் அரனாருரைப்படியே
கொக்கிறகுசூடிக் குறமாதுதன்னைப்போல்
பொற்கூடைபொற்பிரம்பு பொற்குடுக்கைதானெடுத்து
பாடிநடந்துவந்தாள் பார்வதியாள்நற்குறத்தி
பாடியிருந்து பரமனிருதாள்பணிந்து
இருந்தவளைப்பார்த்து இறைவனார்சொல்லுகிறார்
குன்றுமலைச்சி கொடிச்சிகொடியிடைச்சி
வள்ளிகுறமாது மலையரசன்மகளே
என்றதுகைபார்த்து ஏற்றகுறிசொல்லுமென்றார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிகளுமப்போது குறமாதுசொல்லுகிறாள்
மண்ணுஞ்சுமந்ததுண்டு மரத்தாலடியுமுண்டு
சிறுத்தொண்டர்பிள்ளை கறிஉண்ணப்போனதுண்டு
மண்டோதரியுடனே வாளரக்கன்மாளிகையில்
கூடியேவந்து குழந்தையாய்போனதுண்டு
ஆரூரில்சோழன் அருமைமகனையன்று
தேரூர்ந்துகொன்றெழுப்பச் செய்ததுந்தானுமுண்டு
பிள்ளையொருமைந்தன் பெருவயிரந்தானுமவன்
அன்னைபிதாவுக்கு முன்னேயவன்பிறந்தான்
இப்படியுநல்லகுறி இசைவாகத்தோணுதென்றாள்
அப்போசிவனும் அருளுவார்உத்தமிக்கு
கொச்சைக்குறத்தி குறிபார்க்குஞ்சிற்றிடைச்சி
கழுவிலிருந்து கைகாட்டினர்தங்கையரே
உழுதுதிரிந்தபன்றி வுங்களண்ணன்தானல்லவோ
ஆச்சியர்கள்வீட்டில் அடியுண்டுகட்டுண்டு
வெண்ணைதிருடியுண்ட வெறியன்றங்கையல்லவோ
புன்னைமரத்திற் போயொளித்தார்தங்கையல்லவோ
என்றேயிருவோரும் என்றபடிகொண்டாடி
சந்தோஷமாகித் தாமேவிடைகொடுத்தார்
திருவாபரணமெல்லாம் பூட்டிச்சிவனாரும்
போய்வாறேனென்று புனிதர்விடைபெற்று
மாதாவுமன்னேரம் வானுலகுவிட்டிறங்கி
தேவேந்திரலோகஞ் சென்றாள்குலமாது
மைவாழ்குறத்தி வானவர்தன்கோவில்வந்தாள்
இந்திராணியம்மை யெங்கிருக்கின்றாளென்றாள்
இந்திராணிகன்ன டெழுந்துமேயோடிவந்து
வாராய்குறமாதெனவே வந்தேனெனவுரைத்தாள்
பாராய்குறத்தியம்மா பசுவைபிழைப்பித்தால்
வேண்டியதெல்லாம் விதம்விதமாய்கொடுப்பேன்
சொன்னவுடனே சொல்லுவாள்குறமாது
குறமாதுதானுங் குறிசொல்லஇந்திராணி
ஆசனங்கள்போட்டு அடிபணிந்துகேட்கலுற்றார்
குறமாதுதானுங் குஞ்சிரிப்புகொண்டருளி
விநாயகபூசைசெய்ய வேணுமென்றுதான்சொல்லி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டியதெல்லாம் வேண்டித்தான்குவித்து
விநாயகனைத்தானினைந்தாள் வெள்ளியமலைக்குறத்தி
கணபதியுமங்குவரக் கனமாய்படைத்ததனை
உருட்டித்திரட்டியொரு உண்டையாய்ப்பிடித்து
கவளங்கொடுக்கக் கணபதியும்வாங்கியுண்டார்
சிங்கியடித்துச் சிரித்தாள்குறமாது
கேளாயோயென்குறியும் கேவலமென்றெண்ணாதே
எந்தன்குறிதானும் எள்ளளவுந்தப்பாது
செங்கைவடிவேலனென் சிறுமைந்தன்கண்டாயே
மூத்தமகனுமந்த மூர்த்திவிநாயகன்காண்
கந்தமருமகள் வள்ளிதானுமவள்மாமி
ஆறார்சடையீசர் அவருடையபத்தினியாள்
பரமேசுவரருடைய பார்வதியும்நான்தாண்டி
உன்னுடையசிந்தையிலே நினைத்தபடிசொல்லுகிறேன்
வானுலகமாள மகன்வருவானுன்றனுக்கு
அன்புடனேகேளாய் ஆனகுறிதானும்
இம்மையிலுமறுமையிலு மென்குறிகள்தப்பாது
ரத்தினமுடிசூட்டி நல்லமைந்தனாய்வருவான்
பெற்றிடுவீரிப்போது பெருமாள்திருவருளால்
கண்ணிறைந்தபாலகனார் கணக்கெழுதத்தோன்றுகிறார்
நீலகண்டர்தம்மருளால் நினைத்தபடிகிடைக்கும்
வளர்த்தபசுவயிற்றிற் மைந்தர்வந்துதோன்றுகின்றார்
கோவின்வயிற்றில் குமாரன்வந்துதோன்றுகின்றார்
சித்திரைக்குச்சித்திரையிற் சிறந்தபவுரணையில்
அத்தன்தலைகிழமை யாதித்தவாரமதிற்
புத்தகமும்பூநூலும் பொருந்தியபொற்குண்டலமு
ஆயிரங்கிங்கிலியர் அசைக்கவொண்ணாப்புத்தகமும்
எழுத்தாணிகைப்பிடித்துப் பிறப்பாடியென்மகளே
உத்தளமாய்வெண்ணீறும் ஒளிருந்திருவழக்காய்ச்
சித்திரபுத்திரர்வந்து செனிக்கிறார்மாமயிலே
பூலோகம்ஆளப் பிறக்கிறார்பொற்கொடியே
எறும்புகடையானைகளை யெல்லாமெழுதவல்லார்
புத்தகமுந்தன்னிற் புகழ்ந்தெழுதும்புண்ணியனார்
ஆளுஞ்சிவனுக்கும் ஆனமகாவிஷ்ணுவுக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகுக்கும்பிரமாவுக்கும் வாழ்விக்கும்லட்சுமிக்கும்
கணக்கராய்த்தானிருந்து காரியமெல்லாம்பார்ப்பார்
இப்படியாக இருப்பான்காண்ஏந்திழையே
அரசனார்கருவேலம் அவர்கையிலிருக்குதுகாண்
இந்திராணிமாதே யிக்குறிபொய்யாதெனவே
இன்பத்தோடுங்குளிர்ந்து இருதோளும்பூரித்து
கும்பல்கும்பலாகப்பொன் குவித்தாளேஏந்திழையாள்
அன்னேரந்தான்குறத்தி யவள்முகம்பார்த்துரைப்பாள்
உன்னுடையஅன்பு இருந்தாலும்போதுமினி
பொன்னும்பணமும் புலையன்படைக்கிலையோ
நிறைநாழிமுத்தை நேரேகொடுவென்றார்
மங்கையரேபோய்வாரேன் மகாதுயரமுந்தீர்ந்து
மகனுடனேநீயும் மகிழ்ந்துமேவாழ்ந்திருப்பாய்

### விருத்தம்

உமையவள்குறிகள்சொல்லி யுரைப்படிமுடியுமென்று,
சமையுநல்லிந்திராணிக்குத் தானுமேமனதைத்தேற்றி
அமையவேவரத்தையீந்து யடைவுடனரன்பால்சென்று,
உமையவள்நடந்ததெல்லா முரைத்தவனிடத்துற்றாளே.

### நடை

அப்பால்நடக்கு மதிசயத்தைக்கேளுமென்றார்
நாகமடந்தையரும் நல்குறியொன்றுசொல்லி
பசுவின்வயிற்றில் பாலன்பிறப்பதுதான்
நிச்சயமாயெண்ணி நினைவுகளைவிட்டுவிட்டு
கொலுச்செய்யுமண்டபத்திற் கோதையும்வீற்றிருந்து
வானம்புவலோக மண்பூமியுள்ளதெல்லாம்
சிறப்பிக்கவேணுமென்று சீரானவள்ளுவனை
அழையுமென்றபோதே யழைத்தங்கேவிட்டார்கள்
பசுவயிற்றிலிப்போது பாலன்பிறக்குதென்று
ஏழுலோகத்திலுள்ளோ ரெல்லோருந்தாமறிய
பறைசாற்றுமென்று பைங்கொடியாள்சொன்னவுடன்
வள்ளுவனுமப்போது வாகாய்பறையறைந்தான்
தெருவீதிகளெல்லாஞ் சிறக்கவேபந்தலிட்டார்
முத்துவளைந்து முகப்பந்தலிட்டார்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயிரக்கால்நட்டு வகைவகையாய்த்தூணிறுத்தி
தங்கத்தாலேசெய்து சதிர்பந்தல்போட்டார்கள்
பவளத்தால்காலும் பண்பாகத்தானிருத்தி
விதவிதமாய்ப்பந்தல் வேடிக்கையாய்ச்செய்து
இந்திரன்நற்சபைக்கு எதிரானவென்புறத்தில்
ஐம்பதுகாதம்பரப்பி அகலமுள்ளபந்தலென்று
தங்கத்தால்கால்கள் சதிராகத்தானிருத்தி
நவரத்தினத்தாலே நன்றாகத்தானழுத்தி
சித்திரவிஸ்தாரமாய் செய்யவேணுமென்றாள்
பத்திபத்தியாகப் பண்பாகச்செய்தார்கள்
தேவாதிதேவரெல்லாஞ் சிறக்கவேவந்திருக்க
தபோதனர்களெல்லோரும் தானுமேவந்திருக்க
முனிவர்களெல்லோரும் முக்கியமாய்த்தானிருந்து
அந்தணர்களெல்லோரும் அப்படியேதானிருக்க
சங்கீதமேளமுதற் றப்பாமல்வந்திருக்க
பட்டணத்திலுள்ள பரிசனங்கள்தானிருக்க
வகைவகையாய்ப்பந்தி வகுக்கவேவேணுமென்றாள்
பத்திபத்தியாகப் பண்பாகச்செய்யுமென்றாள்
அந்தப்படியே யடைவாகச்செய்யலுற்றாள்
பிள்ளைபிறந்தப் பெருமுகூர்த்தம்வந்ததென்று
ஏழுலோகமறிய இடிபோல்முரசடித்து
வாருமென்றபோதே வள்ளுவனும்பறைசாற்றத்
தேவர்முனிவர் சிறக்கவேவந்தார்கள்
ரிஷிகள்முதலாக எல்லோரும்வந்தார்கள்
அந்தணர்களெல்லாம் அப்படியேவந்தார்கள்
பட்டணத்திலுள்ள பரிசனங்கள்வந்தார்கள்
கூன்குருடுசெவிடூமை கும்பலாய்வந்தார்கள்
அவரவருக்கெல்லா மயிராணியப்போது
தானங்கள்வாங்கத் தான்வந்திருந்தார்கள்
வந்தபேருக்கெல்லாம் வடிவாசனங்கொடுத்து
திருமஞ்சனங்கள் சிறப்பாகக்கொண்டுவந்தார்
மாணிக்கச்சங்கு வலப்புறத்தேநின்றூத
வேதபிராமணர்கள் வேதங்கள்தானோத
மங்கையர்கள்வந்து வாழ்த்திகுறவையிட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்னியர்களெல்லாங் காவலாய்ச்சூழ்ந்துநிற்க
அங்கயற்கண்ணம்மை யருகிருந்துகைகொடுக்க
பார்வதியம்மை பண்பாகவந்தார்காண்
பொன்னின்கலமேந்திப் புறப்பட்டாள்பூமாது
மன்னர்பெருமாள் வருகிறஅதிசயத்தை.

### நாயனார் சிறப்பு

ஆயிரங்கிங்லியர் அசைக்கவொண்ணாபுத்தகமும்
பொன்னினெழுத்தாணியுமே பொற்பாகக்கைப்பிடித்து
காதிலிடுங்குண்டலமும் கனக்கவேதான்பூட்டி
அரனார்திருவருளால் ஆவின்வயிறுவிட்டு
பொன்னின்கலத்திற் பிறந்தார்புகழ்வீரர்
மின்னொளிபோலே வெளிப்பட்டாருத்தமனார்
பூமிவழிசிறக்கப் போர்வேந்தர்வந்துதித்தார்
பாவபுண்ணியங்கள் பதிந்தெழுதவந்துதித்தார்
ஏடும்பிடித்து இடதுகையில்வெண்ணீறும்
காதிலேயிட்ட கவசமணிக்குண்டலனார்
காரிந்திரன்மைந்தர் கணக்கரிவரென்பாரும்
எந்தவுலகி லிருந்தவர்காணென்பாரும்
பிரமாவோவென்று பொருந்தமொழியுரைத்தார்
இப்படியுஞ்சிலபேர் ஏற்றமொழியுரைத்தார்
திருவாழ்க்கைச்சொல்லத் தேவரால்கூடாது
எல்லாக்கணக்கு மெழுதவென்றுதான்பிறந்தார்
நமசிவாயவென்கிற நன்னாமச்சித்தமுடன்
நமனுக்கதிகாரி நானென்றசத்தமதாய்
சித்திரபுத்திரருஞ் சிறப்பாகவந்துதித்தார்
தெய்வலோகப்பெண்கள் சிறக்கக்குறவையிட்டார்
பெண்களெல்லாங்கூடிப் பெருங்குறவையிட்டார்
கன்னியர்களெல்லாங் கனக்குறையிட்டார்கள்
பதினெட்டுவாத்தியமும் பாரெங்குந்தான்முழங்க
பூமாரியெங்கும் பொழிந்தார்கள்தேவரெல்லாம்
தேவர்அமிர்தந் திருச்சங்கில்தானேந்தி
சேனையுமங்கே சிவனுமையாள்தான்கொடுத்தாள்
இந்திராணிதானும் இளங்கோதையன்னேரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவால்விளங்கித் தீர்த்தமுந்தானாடி
பட்டையுடுத்திப் பகவானெத்தெண்டனிட்டு
பிள்ளையைவாரி முகத்தோடேமுத்தமிட்டாள்
அப்போதுபச்சுடம்பு யாச்சுதவள்மேனியெல்லாம்
பாலுமுலையிரண்டிற் சுரந்ததுகாண்பைங்கொடிக்கு
தாஅபெற்றதுபோலே தன்கையிற்போனாள்காண்
அப்போவொருதாதி யறிவாயெழுந்திருந்து
காயங்கடைசரக்கு கனமாகவுள்ளதெல்லாம்
கூட்டியேதானுங் கொடுத்தாரேகோதையற்கு
அப்போதவ்வையாரும் அங்கேதானோடிவந்து
மைந்தனைக்கையாலெடுத்து மடிமீதில்வைத்திருந்து
வாகாய்துருவி வாயிற்செவிழுக்கெடுத்து
சேரணையெடுத்துச் சுரிகுழலால்கையமர்த்தி
தொப்புளறுத்து குலவைமிகமுழக்கி
ஈரந்துவட்டி யிணையாடைதான்போட்டு
பஞ்சாடைக்குள்ளே பாலகனைத்தானமர்த்தி
வேண்டுமுபசாரம் விதவிதமாய்ச்செய்தபின்பு
தேவேந்திரன்வரவை காணோமெனதிகைத்து
இந்திராணிதான்புலம்பி ஏங்கலுற்றாளன்னேரம்
பாலகனைப்பார்ப்பதற்கென் பத்தாவைகாணவென்று
அப்பபோசிவனாரு மங்குள்ளதேவர்களும்
வந்தவுடனே மகனாரைத்தான்வாங்கி
தாங்கியேயெடுத்துத் தழுவிமுத்தந்தானுமிட்டு
கண்டான்மகன்முகத்தைக் கண்ணாயிரத்தாலே
அந்நேரமிந்திரனும் அழகானதாதியரே
சுந்தரியாளிடத்திற் கொண்டுபோமென்றுசொன்னார்
ஆவலுடன்வந்து அரியமகனார்க்கு
தெய்வப்பிராமணரைத் திரும்பியழைத்தார்கள்
பிறந்தகதைவிபரம் பிசகாமற்கேட்டவுடன்
இந்தப்படியாயிருக்குமந்தவேளையிலே
நவக்கிரகமெல்லா நலமானநாளொன்றில்
பேரிடவேணுமென்று பெரியதொருயிந்திரனுப்
சித்திரையில்வந்ததனாற் சித்திரபுத்திரரென்றார்
அப்படியேபேரை யழைத்தார்களந்நேரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீறிட்டபாற்பசுக்கள் சிறப்பாய்கொடுத்தார்காண்
தானதருமங்கள் தான்கொடுத்தாரந்நேரம்
மகனையன்றுபெற்றெடுத்த வாய்த்ததொருபசுவும்
மகனுக்குபாலமிர்தம் வாஞ்சையாய்தான்கொடுத்து
நிற்குமளவில் நினைவுமறந்தொருநாள்
பாலகன்னெஞ்சிற் பசுக்குளம்புபட்டவுடன்
இந்திராணிகண்டு ஏங்கிமிகப்பயந்து
மகனையெடுத்து மார்போடேதானணைத்து
இந்திராணிதானும் இளம்பசுவையந்நேரம்
கரத்தாலடித்தவுடன் கண்சிவந்துதான்பசுவும்
திடமுடையபாற்பசுவுந் தெய்வமேசாட்சியென்றார்
சரணஞ்சரணமையா தற்காத்துக்கொள்ளென்று
சிவனைநினைந்து தோத்திரங்கள்செய்ததுவே
அப்போசிவனும் அங்குள்ளதேவர்களும்
பசுவையடித்த பாவத்தைத்தான்தெரிந்து
இந்திரவிமானத்தை யெடுத்துக்கொண்டோடிப்போய்
இந்தட்சணம்பசுவை இங்கேயழையுமென்றார்
தேர்கொண்டுவந்தார்கள் தேன்மொழியாள்வாசலிலே
வந்தவுடன்அப்பசுவு மகாதேவரைப்போற்றி
தேரின்மேலேறிச் சிவனாரிடஞ்சேர்ந்து
இந்திரற்குப்பிள்ளை கொடுத்துவாவென்றுரைத்தீர்
பாலனையீன்றுகொடுத்தேன் பரிவுடனே
கொடுத்தவுடனென்னைக் கோதையாள்தானடித்தாள்
வந்துவிட்டேனென்று வருந்தியுரைத்ததுவே
சிந்தைமகிழ்ந்து சிவனாருமேதுசொல்வார்
உன்மகனையிங்கே யுனக்கழைத்துநான்தருவேன்
வஞ்சமில்லாமல் மனமகிழ்ந்துநில்லென்றார்
அப்படியேநற்பசுவும் ஆனந்தங்கொண்டதுவே
இப்பால்நடக்கின்ற இவ்வசனஞ்சொல்லுகிறேன்
தேசாருமிந்திரருந் தேவியுந்தானேதுசொல்வார்
பாலன்பசித்துப் பதறியழுதவுடன்
பாலமுதம்வாங்கப் பகவானைத்தேடுமென்றார்
பசுவைமிகத்தேடி பார்ந்தார்களெல்லோரும்
காடெல்லாந்தேடி காணோமெனவுரைத்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திராணியான இளங்கோதைதானழுதாள்
இந்திராணியப்போது இயங்கிமிகவாடி
மாயைவந்து மாயையாய்ப்போச்சுதென்று
மற்றுமொருபாற்பசுவின் பாலமுதைமைந்தனுக்கு
குற்றம்வராதபடி கொடுத்துவளர்த்தனரே
பாலகர்க்குத்தொட்டிலைப் பாங்காகச்சாய்ப்பார்காண்
வயிரம்வயிடூரியத்தால் வகைவகையாய்ச்செய்தார்கள்
சித்திரபுத்திரரைச் சீர்சிறந்ததொட்டிலிலே
வைத்துத்தாலாட்ட மன்னவருஞ்சொன்னவுடன்
ஆவின்பாலூட்டி யரியதொட்டில்மேற்கிடத்தி
தொட்டிலைத்தானசைத்து சூழநின்றதாதியர்கள்
இந்தநல்லதொட்டிலிலே என்மகனேநித்திரைபோ
தேவேந்திரன்மணியே செம்பொன்னேதானுறங்காய்
இந்திரனார்செல்வங்கள் ஈடேறவந்தானோ
வானுலகமாள வந்துபிறந்தானோ
மைந்தராய்வந்து மகவாசைதீர்த்தானோ
எங்கள்துயர்தீர இன்றுவந்தபாலகனோ
தோகைகணக்குஞ் சிறந்தபெருங்கணக்கும்
மண்ணிற்கணக்கு மகாதேவர்கணக்கும்
விண்ணிற்கணக்கும் விரைந்தெழுதவந்தவனோ
சந்திரர்சூரியர் சார்ந்தலருமகனோ
ஆதிபரன்கட்டளையில் அவதரித்தபாலகனோ
துட்டர்கணக்குந் துரோகியர்கள்தன்கணக்கும்
சிட்டர்கணக்குந் தெரிந்தெழுதவந்தவனோ
தேவேந்திரன்தவத்தாற் சிறியவுயிர்செய்யும்
நன்மைகளுந்தீமைகளு நன்றாயறிந்தவனோ
சீராய்சிவலோகஞ் சேருகின்றபுண்ணியனோ
ஆராய்ந்துசொல்ல அறிவுடனேவந்தவனோ
ஆவின்வயிற்றில் அவதரித்தபாலகனோ
எங்களரும்பொருளோ யிந்திரர்கண்மணியே
எங்கள்குலம்வாழ எழுந்தருளும்நாயகமோ
இந்தப்படியாக யேற்றிநின்றுதாலாட்டி
அந்தமகனை யரிதாய்வளர்க்குங்கால்
தாதிமார்தன்பாலைத் தானுண்கச்சொன்னார்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள்முலைப்பாலை யுண்கவோநான்பிறந்தேன்
என்றறிந்துசொன்ன விளமைக்குழந்தைக்கு
மந்திரநூல்வேத மகவறிவையுண்டாக்க
வாத்தியார்தம்மை வரவழைத்தாரந்நேரம்

### விருத்தம்

இந்திரன்புதல்வருக்கு இன்பமாயோதிவைத்த
தந்திரவாத்திமார்கள் தான்அரிவோமென்றோத
மந்திரப்புதல்வனாரும் வகைசொல்லுமென்றுகேட்க
மந்திரவுரைசொல்லாமல் மைந்தனுமுரைசெய்தானே.

### வசனம்

அகோ தெப்படியென்றால் இந்திரன் இந்திராணி இவர்கள் நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்த சித்திரபுத்திரனானவனுக்கு வேதங்கள் அப்பியாசம் பண்ணுவிக்கவேணுமென்று உபாத்தியாரை யழைப்பித்துப் பட்டணமெல்லாம் அலங்காரஞ் செய்து மகாதானம் கோதானம் வஸ்திரதானங்கள் செய்து ஓமம் எக்கியங்களெல்லாஞ் செய்து சித்திரபுத்திரற்கு உபாத்தியார் அரிவோமென்றுசொல்ல அதற்குப் பயன்சொல்லுமென்று வாத்தியாரைக் கேட்க அவர் சொல்ல யேதுவில்லாமல் சித்திரபுத்திரர்தானே பயன் சொல்லிப் பின்னடக்கிற விபரங்களைச் சொல்லுகிறோம்.

### நடை

விநாயகர்பூசை விதவிதமாய்த்தான்முடித்து
ஆதிமுதலான அரிவையுங்கைகொடுத்து
அரியோமரியோமென் றாதரவாய்ச்சொன்னார்கள்
ஆயிரம்பார்பார்கள் அரியோநமவெனவே
அரியென்றசொல்லுக்கு அருத்தங்களுரையுமென
அப்போதுவாத்தியார் அதன்பொருள்சொல்லாதிருக்க
நான்சொன்னபடிகேளும் நல்லதொருவுத்தமரே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரிக்குப்பொருள்சொன்னால் அண்ணாவிநீர்எனக்குக்
குருக்களுமாவீர் குற்றமில்லைகண்டீரே
எனக்குமோர்அண்ணாவி யீசனல்லால்வேறுமுண்டோ
மேலானவுங்களுக்கு வேதமதுசொல்வேன்யான்
கிட்டியான்வாசிக்கக் கேளுங்களென்றுசொல்லி
நன்னெறிநூல்விழித்து நற்படமீதேறி
சைவநூல்வேதந் தழைக்கவேவாசித்தார்
ஓரெட்டுக்குள்ளே யுலகமெல்லாம்வாழவென்று
தேவர்கள்வாழவென்று திருவேடுவாசித்தார்
மூவர்கள்வாழவென்று முதலேடுவாசித்தார்
அயனரன்மால்செங்கை யானதொருசீவனும்
நமனாரும்வேந்தன் நடுக்கணத்திலுள்ளவர்காண்
சங்கரநாராயணர் தான்கொடுத்தபட்டோலை
அட்டவணைபட்டோலை யப்படியேவாசிக்க
உபாத்தியார்தன்கணக்கு வந்துவெளிபட்டதுகாண்
தனதுமனையன்றி தலைநாளில்நீருமொரு
அகுதிமனையை யடிமையொத்திக்கண்டீரோ
உம்முடையசெய்கையும் உமக்கறியப்போகாமல்
என்னுடையயேட்டி லெழுதினேனென்றுசொன்னார்
என்றுசொல்லிவாத்தியா ரிருகையாற்போற்றிசெய்து
ஈஸ்வரனார்கற்பனையோ வென்றுசொல்லித்தானிருக்க
இவ்வார்த்தைகேட்டு இந்திரனிந்திராணியுடன்
மைந்தனையங்கே மனமகிழ்ந்துமுத்தமிட்டார்
இப்படியேதானும் இருக்குஞ்சிலநாளில்
மைந்தர்பெருமான் மனமகிழ்ந்தேதுசொல்வார்
பூலோகசோதனைக்கு போய்வாரேனென்றுரைத்தார்
நகரங்கள்சோதனைக்கு நாம்போறோமிந்திரரே
அங்கேசிவன்வாச லருகிருக்கநாம்போறோம்
என்றுகணக்கை யிடமுடனேதான்சுருட்டி
நன்றியுடனேபுறப்பட்டார் நற்கணக்கர்
இட்டபடியே யீஸ்வரனார்தான்கொடுத்தார்
கட்டளையிட்டபடி கணக்கெழுதப்போறோமென்றார்
அந்தக்கயிலை யரனார்கருவேலம்
நித்தமெழுதிவர நிமலரருள்கொடுத்தார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்திரமாயென்வசத்திற் றந்ததொருபட்டோலை
சீருடனேயென்வசத்திற் சிறப்பாகவிருக்குதுகாண்
பரமனார்தான்கொடுத்த பண்டாரபொக்கிஷமும்
கொடுத்தவரிசைகளை கொற்றவரேகண்டீரோ
பொன்னுலகமட்டுமல்லோ புண்ணியனேநீராண்டீர்
நிறைந்தபுகழ்மாதாவு நீருமிகத்தவசிருக்க
உங்களுக்குப்பிள்ளையாய் யுகந்தளித்தார்கண்டீரோ
அண்டரண்டகோளமட்டும் அணுவளவுந்தப்பாமல்
எழுத்தாணிப்பட்டோலை யென்கையிற்றான்கொடுத்தார்
முத்திரைமோதிரமும் முன்விரலிலேயணிந்தார்
கண்டீரோநீருங் கணையாழிமோதிரத்தை
இவ்வளவுவாழ்வுமுங்க ளிருவருடவாழ்வும்
புதிதானகாரியத்தைப் போய்ப்பார்க்கவேணுமென்று
போய்வருவேனையா பொருந்தவிடைதாருமென
வாலவயசு வருமளவில்நீரிருந்தால்
பாலகனாய்வந்த பலங்கிடைக்குமென்றுசொல்ல
அந்தவந்தப்பாலகனும் அரனருளாற்றான்கிடைக்கும்
அப்படியேநானும் அவ்விடத்திலிருந்துவிடடேன்
எப்படியுமென்தாயே யிங்குமங்குமாயிருப்பேன்
போகவிடையருளும் புண்ணியரேஎன்றுரைத்து
மாதாமைத்தந்தையை வணங்கியிருபாதமதில்
அருமைத்திருமகனை யன்னைபிதாதான்வாழ்த்தி
இந்திரவான்தேரி லேறியேயுத்தமனார்.

### விருத்தம்

சென்றனன்ஈசன்தன்பால் சீர்பாதந்தெண்டனிட்டு
நின்றனன்மகிழ்ச்சிகூர்ந்து நிகரிலாஉடையாள்தானும்
வந்தனன்மகனேயென்று வாரியேமுகந்துகொண்டாள்
மைந்தனுமங்குவந்த வரன்முறையியம்பலுற்றார்.

### வசனம்

அகோதெப்படியென்றால் சித்திரபுத்திரநாயனாரான வர் இந்திரன் இந்திராணி இவர்களை வணக்கத்துடனே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யனுப்பிக்கொண்டு தேரின்மேலேறி சுவாமி கையிலையங்கிரி வாசரான பரமேசுரனையும் பார்வதியம்மனையுங் கண்டு நமஸ்காரஞ்செய்து சிந்தைகளிகூர்ந்து நிற்கப் பார்வதியம்மனும் மகனைக் கட்டிவாரி முகந்துகொண்ட வுடனே சித்திரபுத்திரநாயனார் சுவாமியிடத்திலும் அம்மாளிடத்திலும் நடந்த விருத்தாந்தமெல்லாஞ் சொல்லுகிறார் எ—று.

## நடை

அப்பால்நடக்கு மதிசயங்களுள்ளதெல்லாம்
செப்பமுடனானுஞ் சொல்லுகிறேன்சீராக
மாதாபிதாவை மறந்திருந்தேனித்தனைநாள்
ஈஸ்வரன்சொன்விவை யெள்ளளவுந்தப்பாமல்
தாமரைப்பூவாய் தடாகத்திற்சென்றிருந்து
ஆவின்வயிற்றில் அவதரித்தேனாதரவாய்
இந்திரனிந்திராணி யிவர்கள்மனங்குளிர
புத்திரனாகவென்னை போற்றியேதான்வளர்த்தார்
பிறந்தவுடன்தருமம் பெருக்கவேசெய்திடுவான்
என்னையுமங்கே யீன்றதொருநற்பசுவை
என்னைமிதித்ததென்று இந்திராணிதானடித்தாள்
உடனேதானப்பசுவும் உன்கயிலைவந்ததுவே
மற்றுமொருபசுபால் கொடுத்தென்னைவளர்த்தார்கள்
நன்றாய்வளர்த்தார்கள் நாயகியும்நாயகனும்
இந்தப்படியா யிதுவரையும்நானிருந்தேன்
இவ்விடத்துச்சிந்தையினால் ஏக்கமிகவுண்டாகி
போகிறேனென்றுசொன்னேன் போர்வேந்தனப்போது
பாலவயசு பருவமுனக்கில்லையென்றார்
இவ்விடத்திற்றானு மிருக்கவேணுமென்றார்
இங்கிருக்கநீதி யெள்ளவுமில்லையென்று
அரன்கயிலைசென்று அவ்விடத்தில்நானிருப்பேன்
அங்குமிங்குமாக இருப்பேனெனவுரைத்து
அவர்கள்விடைவாங்கி யடிபணிந்திங்குவந்தேன்
என்றுசித்திரபுத்திரனார் இரக்கமாய்ச்சொன்னவுடன்
பசுவைமிகவழைத்து பாலன்வந்தான்கண்டாயே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றரனார்சொல்ல ஏற்றதொருநற்பசுவும்
சென்றுமகனார் திருமுகத்தைத்தான்மோந்து
எழுந்துமிருகொம்பால் இரங்கித்தடவினதே
இப்படியேதானு மிருக்கின்றவேளையிலே
இந்திரனிந்திராணி இவர்களிருபேரும்
மகனார்தான்போன வழிதடத்தைத்தானோக்கி
வந்தார்கயிலை மலைதனிலேவானவர்கோன்
அப்பால்நடக்கு மதிசயத்தைக்கேளுமினி
சிவனாரிடத்திலே தேவேந்திரன்புலம்பிப்
புத்திரனுஞ்சத்துருவாப் போனானெனவுரைத்தார்
உரைத்தமொழிகேட்டு உமைபாகரேதுரைத்தார்
சத்துருவென்று சலியாமல்சொன்னாயே
தாயாரருகே தன்பிள்ளைவந்ததென்றால்
பேயாவுனக்கினித்தான் பேசக்கணக்குமுண்டோ
பித்தரைப்போலே பிதற்றுகிறாய்நீதானும்
நாட்டுக்கணக்கும் நமனார்பெருங்கணக்கும்
நன்மையும்தின்மையும் நடுவெழுதவேணுமென்று
எமதருமர் தன்னிடத்தி லிருந்துகணக்கெழுத
வேணுமென்றுசொல்லி விரும்பியேநாமழைத்தோம்
எங்கிருந்தாலென்ன ஏற்றதொருயிந்திரரே
போம்பிள்ளாயென்றுரைக்கப் போனாரேயிந்திரரும்
ஈஸ்வரனார்தானும் ஏற்றதொருபுத்திரரை
இப்போதுநீயும் இயமனுடவாசலுக்குச்
சித்தாந்தம்யாவுஞ் செய்யுமுறைப்படியே
அந்தாந்திரக்கணக்கும் அளவாயெழுதுமென்றார்
இப்படியேதானு யியமனைத்தானழைத்து
கலியன்உத்திரத்தாற் களறிகள்தான்மிகுந்து
அவைக்குரலுண்டாகு மானதாலிப்போது
எல்லாக்கணக்கு மியல்பாகத்தானெழுத
சித்திரபுத்திரரைச் சிறப்பாயருளினன்காண்
என்றுநமக்குச் சிவனாரிசைத்தபின்
நன்றுநன்றுஎன்று நமஸ்கரித்துஅன்னேரம்
இருபேருமொன்றாகி யேற்றவிடைதான்வணங்கி
நின்றபொழுதேபிரமா நிமலாருளாலே
இருபேரும்வாழவென்று ஏமாற்றிவிடைகொடுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டழகருடனே கனத்தரண்டஞ்சூலமுடன்
குத்திடுங்கோல்கொடுத்துக் கோலக்கடாவளித்து
இவ்வளவுந்தான்கொடுத்து ஏற்றபிரமாவும்
வாராய்சிவனுக்கு வழியடிமைசெய்தவர்போல்
சிவனைநினைத்துத் திருத்தொண்டுசெய்வார்போல்
தவத்தைநினைத்துத் தான்பூசைசெய்வார்மேல்
தருமங்கள்செய்வார்போல் சற்றுமேசொல்லாமல்
புத்திகளுஞ்சொல்லி போகவிடைகொடுக்க
கருங்கடாமேலேறிதான் கள்ளனைத்தானும்வைத்து
வலக்கடாமேலேறி வாரார்யெமதருமர்
நல்லமுரசுசின்னம் நன்றாய்முழங்கிவர
இருபேருமொன்றாகி யிந்திரலோகம்புகுந்தார்
இருபேருந்தாங்கள் இசையவேதான்பேசி
பாரிலுள்ளோர்தன்கணக்கைப் பார்த்தார்களப்போது
சிவகுருவேயென்று திருநீறணியாதார்
நாராயணாவென்று நாமமணியாதார்
பெற்றதாய்தந்தையைப் பேணாதபாவியர்கள்
மண்ணில்விழுந்து வழக்கோரஞ்செய்தவர்கள்
அம்பலத்தில்நின்று அனியாயஞ்சொன்னவர்கள்
கல்லாக்கசடர் கணக்குப்படியாதோர்
சிவனைவணங்காதார் திருக்கோயில்சூழாதார்
அயனைவணங்காதார் ஆலயத்தைமேவாதார்
பிச்சைக்குவந்தவரை பின்னைவாவென்பார்கள்
கன்றுவருந்தக் கறந்தபாலுண்டவர்கள்
சுற்றங்கொதிக்கச் சுரந்துபாலுண்டவர்கள்
போட்டநாழிமறக்கால் போட்டளந்தபாவியர்கள்
பிள்ளையழித்துப் பேதமுறச்சொன்னவர்கள்
உள்ளபொருளை இல்லையென்றேயுரைத்தவர்கள்
தூரவழிக்குத் துணைவாரோமென்றுசொல்லி
ஆருமில்லாக்காட்டில் அடித்துப்பறித்தவர்கள்
குளிசீலையன்றி குளித்திடும்பொல்லாதார்
கொண்டமனையாள்வருந்த கூத்தியர்கள்தன்னைவைத்தே
மாதாபிதாவருந்த வயிறுவளர்த்திடுவார்
இட்டுண்டுவாழாதார் ஏற்றவர்க்குமில்லையென்பார்
நீட்டும்பிழைகையில் நின்றுமெல்லகேட்டவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாவற்போர்செய்யுஞ் சண்டாளபாதகர்கள்
கொண்டகணவனுக்கு குறிப்பறிந்துசெய்யாதார்
இப்படியாகக்கொற்ற விழிதுயில்செய்வோரையெல்லாம்
செப்பமுடநல்ல செந்தழலிற்றான்போட்டு
பாசத்தைவீசி பதரவேதான்பிடித்து
நாசிதனில்நஞ்சையிட்டு நாக்கில்துறட்டிவிட்டு
உச்சிதலைதனிலே யோங்கிமுனையறிந்து
அச்சப்படக்கண்ணில் ஆணைதனைநிறுத்தி
கையிரண்டும்பின்காட்டாக் கட்டியிருகால்பின்னி
மார்பைத்துளைத்து மறுகதிருபாம்புடனே
கூறியநாராசங் கொடுஞ்சிலூரடேற்றி
ஆண்குறியில்பெண்குறியில் அடைவாய்த்துரட்டியிட்டு
பாரையிற்போட்டு பதறியிழுத்திழுத்து
வேறுவேறேயுடலை வெட்டியேபோட்டிருந்து
காரமுள்ளவுப்பதை கரைத்ததிலேதானொழுக்கி
முள்ளுவனங்களில் முகங்கீழாய்போட்டிழுத்து
பள்ளமேடென்று பாராமற்றானிழுத்து
இவர் — தங்களையெல்லாம் ஏழாநரகத்தில்
தள்ளவென்றுபட்டோலை தானெழுதிக்கொண்டார்காண்
நல்லோர்பெரியோரை நடுங்கவேசொன்னவரை
கொண்டகணவனுக்கு கொலைமருந்துசெய்தவரை
வீதிவீதியாக விவரமாய்த்தானெழுதி
அவ்வீதிவிட்டு மறுவீதிவந்தார்கள்
பெற்றதாய்சொத்தை களவுசெய்யும்பேதையரை
அரைத்தஅம்மிசாத்தாத அரும்பாவியானவரை
குத்துமுரலுலக்கை யொதுங்கவையாக்கொற்றவரை
வாசற்படிநடக்கும் வழிசுத்திசெய்யாரை
எந்தப்பதார்த்தமுங் ஏற்றிசுத்திசெய்யாரை
கண்டபோதொன்றுசொல்லி காணாமலொன்றுசொல்லி
குண்டுணிகள்சொல்லுங் கொடும்பாவியானவரை
பகலுறக்கஞ்செய்யும் பாவிகள்தங்களையும்
நரகத்திலேயெழுந்த நடுவோலைதானெழுதி
கள்ளுகளோடு கடுகவந்துசிக்கினதே
குண்டுணிகள்சொல்லி குறளிகள்தான்பேசி
சண்டையிட்டுமுன்னே சாலங்கள்சொல்வாரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணவனைக்காணாமல் கள்ளியவள்வீடுவிட்டுத்
தீர்த்தமுமாடித் திருநாளும்பார்த்தவரை
பத்தாயிருக்கப் பசியாற்றிக்கொண்டவளை
அவர்களைப்போல அணுகணக்குத்தப்பாமல்
செய்யவென்றுநல்கணக்குச் சேரவேதானெழுதி
செட்டிகள்வீதியிலே சிறப்பாகவந்தார்காண்
அவர்களெல்லாமங்கே யடிபணிந்துவாய்புதைத்து
வில்லாச்சரக்கை விலைச்சரக்காய்விற்றிடுவோம்
செல்லாப்பணத்தை செலுத்துவோங்கண்டீரே
எல்லாப்பிழையும்பொறுத்தருளும் என்றுசொல்லி
அவர்களுக்குச்சொல்லி யமைத்தபடிதானெழுதி
வெள்ளாளரெல்லாம் வேண்டினதெல்லாம்படைத்தும்
நெல்லுகளைநாங்கள் உலர்த்தாமல்விற்றிடுவோம்
கள்ளமரக்கால்நாழி கலந்துமிகவிற்றிடுவோம்
என்றுசொல்லிநாங்கள் குற்றம்பெறுமெனவே
இவர்களுக்குத்தக்க ஏற்றபடிதானெழுது
பட்டமார்வீதியிலே வந்தார்பரிவுடனே
பட்டமார்வீதிவந்து பணிந்துமிகத்தொழுது
குளிக்காமல்சேவிப்போம் கோவிலையும்பூசிப்போம்
பால்தயிரும்நெய்யும் பசித்தெடுத்துசாப்பிடுவோம்
ஏராளமானதனை யேற்றிடுவோமென்றுசொல்லி
இவர்களுக்குமங்கே ஏற்றபடிதானெழுத
அந்தந்தச்சாதிதெரு அடைவாகத்தான்பார்த்து
அவரவர்கள்செய்யும்வகை யதிர்க்கவேதானெழுதி
புண்ணியஞ்செய்வோர்க்கு புதுமைகள்செய்யுமென்றார்
புண்ணியஞ்செய்வோரைப் புதுமையாயெடுத்தெழுதி
பசியாமலன்னம் பாங்குடனேகொடுத்தவரை
இடுக்கத்துடனே ஏமாற்றிவந்தவர்க்கு
உடுத்தப்புடவை யுகந்தளித்தோர்தங்களையும்
பிச்சையுமிட்டுப் பெரியவிடங்கொடுத்து
மகேசுரபூசைக்கு மடங்கட்டிவைத்தவரை
சாலைமரமுஞ் சத்திரமும்வைத்தவரை
சிவபூசைதவபூசை குருபூசைசெய்வோரை
நான்குதிசைவிளங்க நந்தவனம்விடுத்தவரை
ஆலயங்கள்கட்டி யன்னமிகக்கொடுப்போரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடித்தபழங்கோயி லெடுத்துப்புதுப்பித்தவரை
தாகத்துக்காகநல்ல தண்ணீர்கொடுத்தவரை
பொரிந்தவயிர்தனக்கும் போகநீர்விட்டவரை
இராக்காலப்பட்டினியை யிதமாகத்தீர்த்தவரை
பஞ்சம்வருங்காலம் புகுந்தன்னமிட்டவரை
பெரியோர்தங்களையும் பேணிநடந்தவரை
விருந்துகள்வந்தால் வேறுவைத்துவுண்ணாமல்
வதைத்துவகையில் வஞ்சகஞ்செய்வோரை
நெய்விளக்குமாவிளக்கு நேயமாய்ச்செய்தவரை
மாதானங்கோதானம் வஸ்திரதானமுதலாய்
தானங்களெல்லாம் தயவாகச்செய்தவரை
வழக்கோரஞ்செய்யாமல் மன்னவருடன்சேர்ந்தவரை
சிவனைவணங்கிச் சிவபூசைசெய்தவரை
செருப்புக்குடைமுதலாய்ச் சிறந்தபிராமணர்க்கு
கோடைகாலத்திலே கொடுத்தன்னமிட்டவரை
பிள்ளைபால்வார்த்தோரை பிணிக்குமருந்தளித்தோரை
அதிதிபரதேசியருக் கன்னமிட்டுவுண்டவரை
பவுரணையில்நல்விரதம் பத்தியாயிருந்தோரை
பத்தாவின்மேலாசை பண்பாகவைத்தவரை
குருவையுமறவாரைக் கொலைகளவுசெய்யாரை
கணவரிடசொல்லைக் கட்டாய்நடத்தினரை
ஆறுகுளங்கள்தன்னி லணைக்கட்டிவைத்தவரை
வழியைப்பறியாமல் வாகாக்காத்தோரை
கன்றுபால்குடிக்குமட்டுங் கருத்தாகவிட்டவரை
கருமங்கள்செய்வோரைத் தப்பாமலெழுதிவைத்தேன்
ஒளிவுமறைந்தவர்க்கு ஊன்றுகோல்தான்கொடுப்போர்
காய்ந்ததலைக்கெண்ணெய் கட்டாகத்தானளிப்போர்
ஆவைவணங்கி யனுதினமுந்தான்தொழுவோர்
விநாயகர்பூசை விருப்பமாய்செய்தவர்கள்
பள்ளிக்கூடங்கட்டிப் பாங்காகவாத்தியர்க்குச்
சம்பளமும்உப்பணமும்தான் கொடுத்தோர்தங்களையும்
சுந்தனையென்னாளுந் கருதித்தொழுதிடுவோர்
மாதாபிதாவை மகிழ்ந்துநித்தந்தொழுவோர்
வேதங்களாகமங்கள் விதிப்படியேதானடப்போர்
குருநன்றிசெய்தநன்றி குறையாமற்றானடப்போர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஷயங்கள்தனைமீள விருப்பமாய்ச்செய்தவரும்
வண்ணான்நாவிதன்கூலி மகிழ்ந்தேதான்கொடுப்பார்
தருமங்கள்செய்வோரை தப்பாமற்றானெழுதி
இப்படிக்கொத்த இயல்புடையபுண்ணியரைச்
செப்பமுடனறிந்து செய்தபிழைபொறுத்து
தப்பாமலீசுரனார் தன்னடியிறான்சேர்த்து
வைகுண்டலோகத்துக்கும் வகையுடனேதான்சேர்ந்து
அந்தவுலகத்தி லமரர்களைப்போலிருந்து
புண்ணியஞ்செய்தவர்கள் போதவேதானிருக்க
கயிலைக்குவடபுரத்திற் காவனமுண்டாக்கி
பூங்காவனத்திற் புட்பங்களுண்டாக்கி
காய்கனிகளுள்ளதெல்லாங் கனக்கவேயுண்டாக்கி
எப்போதுஞ்சிவனை இன்பமாய்ப்பூசைசெய்ய
பணிவிடைகள்செய்யவே பாங்காகவுண்டுபண்ணி
அவ்விடத்திலேயிருக்க அன்பாகசெய்வித்து
வைகுண்டலோகத்துக்கும் வாழ்ந்திருக்கத்தானெழுதி
பாவையர்க்குத்துன்பப் பலனையெழுதுகிறார்
அட்டைக்குழியும் அழுகுபுழுக்குழியும்
கிருமிவகைக்குழிகள் வேறாகச்செய்தார்காண்
மிருகங்கள்வாழ்குழிகள் வேறாகச்செய்தார்காண்
அகில்கிடங்குவெட்டி யதிலேயனல்வளர்த்தி
முள்ளுவனங்களையு மோசமாய்ச்செய்தார்காண்
நூற்பாலம்மயிர்பாலம் நூதனமாய்ச்செய்தார்காண்
காடுங்கறடுங் கல்லுமிகவுண்டாகி
சற்றுநிழலில்லாமல் தவிக்கவேசெய்தார்காண்
நரகக்குழியும் நடுநடுங்கச்செய்துவைத்தார்
மெத்தவேயுண்டாக்கி விமரிசையாய்ஆயுதமும்
ஆயிரம்கிங்கிலியர் அசைக்கவொண்ணாசெக்குகளும்
இரும்புத்தூணுக்காச்சி யேற்றபடிநிறுத்தி
செப்புத்தூணுக்காச்சி சேரவேதானிறுத்தி
இரும்புமுக்காலிகளை எந்நேரம்காச்சிவைத்தார்
செவிகளுக்குநாராசஞ் சேரவேயுண்டாக்கி
உச்சிமுதலா யுள்ளங்கால்தன்வரைக்கும்
வகைவகையாயாணி வரிசையாய்த்தானடித்து
தொறண்டிவகைகள் தோற்றமிகவுண்டாக்கி
இந்தவகைப்படியே எள்ளளவுந்தப்பாமல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவபுண்ணியங்களுக்குப் பரிந்துவகைசெய்தபின்பு
இந்திரனிந்திராணி யிவர்களப்பாற்போகலுற்றார்
அப்பால்நடக்கு மதிசயங்களுள்ளதெல்லாம்
செப்பமுடனேநானுஞ் சொல்லுகிறேன்கேளுமென்றார்
மாதாவின்றன்னருகே வத்தார்பெருங்கணக்கர்
எமதருமராசனு மியல்பாகஅங்கிருந்தார்
தந்தையரைவணங்கித் தாயார்தம்பாதமதில்
நமஸ்கரித்தத்தன்மகனை நன்றாகவேவாழ்வாய்
என்றுசொல்லியுத்தமரை இருகையாற்றானெடுத்து
கன்னல்மொழியாள் கனிவாயால்முத்தமிட்டாள்
முத்தமிட்டபோது முன்னின்றதாதியர்கள்
எண்ணெய்ப்பலகைதன்னி லெடுத்தங்கேதான்போட்டு
பொற்கிண்ணிதன்னிற் போதவேயெண்ணெயிட்டு
எண்ணெய்க்காப்புச்செய்ய எழுந்தருளவேணுமென்றார்
எண்ணெய்க்காப்பிட்டபின்பு ஏற்றதலைதான்கோதி
தீர்த்தமுமாடித் திருநீறுதானணிந்து
சிவனைத்தொழுது சிவபூசைதான்முடித்து
வேதப்பிராமணர்க்கு வேண்டியதானங்கொடுத்து
அதிதிபரதேசியர்க்கு அன்னமிகக்கொடுத்து
மகேசுரபூசையை வண்மையுடன்செய்தபின்பு
ஆபரணமுள்ளதெல்லாம் அழகழகாய்த்தான்பூண்டு
புட்பாதிகளெல்லாம் போதவேதான்முடித்து
போசனச்சாலைக்குப் போயிருந்தாருத்தமனார்
நாடாளும்இந்திரரும் நாகமடந்தையரும்
தலைவாழையிலையறுத்து தங்கத்தகடழுத்தி
பூமிதனில்வைத்து பொன்னின்முக்காலிவைத்து
மாணிக்கவட்டிலை வைத்தார்கள்முன்பாக
கைக்குநீர்வார்த்துக் கறிவகைகளுள்ளதெல்லாம்
சுற்றிக்கறிகளெல்லாம் சேரவேதான்படைத்து
தும்பைப்பூப்போலமுது சொறிந்துநறுநெய்வார்த்து
தம்பியரையுண்ணவென்று தடவினார்முதுகதனை
அப்போதுமுத்தமனார் அவர்கள்முகம்நோக்கி
உன்வீட்டிலேயமுது உண்பமேயாமாகில்
உன்வயிற்றில்வந்து பிறப்பேன்காண்மாதாவே
என்றபொழுதில் இயல்பானமாதாவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்றுபரதவித்து நெடுமூச்சுத்தானெறிந்து
அகமகிழச்சந்நதிதான் அறியாதபாவியென்று
காதல்மிகவில்லாத கன்னியிருந்தென்னவென்று
போதமயங்கியே போய்ச்சேர்ந்தான்பஞ்சணையில்
மாதாமயங்கியபின் மைந்தரெழுந்திருந்து
உண்ணவேவாருமென உவந்துநிற்கவப்போது
தண்ணீர்குடித்தவுடன் தாகந்தெளிந்தாற்போல்
கைதொழுதுபாலகனைக் கட்டியெடுத்தணைத்து
மைவிழியாள்தானும் மடியிலெடுத்துவைத்து
வருக்கைப்பலாச்சுளையு மற்றுமுள்ளநற்கனியும்
சர்க்கரைநற்சீனி தாரணியிலுள்ளதெல்லாம்
திரட்டுப்பால்தன்னையுஞ் சிறக்கவேதான்படைக்கப்
பாங்குடனேவுத்தமனார் பரிந்தமுதுசெய்யலுற்றார்
கைகழுவிசுத்திபண்ணிக் கனகமணியாசனத்தில்
அடைக்காயும்வெற்றிலையும் ஆனபரிமளங்கள்
சிறப்பாகத்தான்கொடுத்து சிந்தைமகிழ்துரைப்பார்
இமயலோகக்கணக்கு எழுதவேபோவாய்நீ
அற்பமாகுங்குற்றங்கள் அக்கணக்கிலெழுதாமல்
சொற்பமாம்குற்றமதைத் தொகைபடுத்தாமற்கணக்கை
எழுதிமுடித்திடுவாய் என்மகனேயென்றுசொல்ல
ஏதுகுற்றஞ்சொன்னீர் என்னுடையமாதாவே
தலைவாழையிலையறுத்து தானெனக்குப்போட்டதுவும்
குற்றமென்றுபட்டோலை கொண்டேனான்மாதாவே
என்றுசொல்லியேசி யிருக்கின்றவன்னேரம்
அந்தமொழிகேட்டு அந்நேரம்பலகாரம்
மைந்தர்பெருமாள் மாளிகையினுட்புகுந்து
போகவிடைதாருமென்று பொருந்தவேதாமுரைத்தார்
வந்துதொழுத மகனாரைதான்பார்த்து
வாரியெடுத்து மார்போடேதானணைத்து
இந்திரருடனேயிந்திராணி மனமகிழ்ந்து
தருமராசனிடத்தி றாமொருவார்த்தைசொல்வார்
புத்திரர்பின்வருவார் போமுன்பெனவுரைத்தார்
அந்தப்படிதரும ராசனும்போகலுற்றான்
போனார்யமதருமர் பூவுலகிற்சேனையுடன்
அப்பால்நடக்கிற அதிசயத்தைக்கேளுங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிருகண்டன்நற்கதையை மெய்யாகச்சொல்லுகிறேன்
வருந்திமிருகண்டன் மகனுமேவேணுமென்று
பாதாழந்தோன்றவெட்டிப் பதிவாய்மிகவளர்த்தி
ஓமகுண்டமத்தியிலே யோந்தகம்பம்நாட்டியந்தக்
கம்பத்திலேறி கால்விரலைத்தானூன்றி
வேதங்கள்அக்கினியு மேலேபடர்ந்தெரிய
ஈசனேபிள்ளையரு ளென்றேதவமிருந்தார்
தண்ணீரருந்தாமற் சருகுப்பொசியாமல்
இருந்தான்தவசு ஈராண்டோட்டுடனே
வருந்தித்தவசிருந்தான் மன்னுமிருகண்டன்
அந்தத்தவத்தருமை யரனாருந்தாமறிந்து
தவசிவடிவாகத் தானெழுந்தார்சங்கமரும்
அப்போதுமையவளு மப்படியேதானும்வந்தாள்
இருபேருந்தவசியா யேகினார்தவத்தருகே
மிருகண்டன்செய்தவத்தை மெய்யாகக்கண்டார்கள்
அப்போதுமிருகண்டன் அரனாரைத்தான்தொழுது

விருத்தம்

ஐயனேபோற்றிபோற்றி யறம்வளர்த்தவனேபோற்றி
செய்யனேபோற்றிபோற்றி திருக்கயிலாசாபோற்றி
பையவேதவசியாகப் பார்தனிலுதித்தாய்போற்றி
உய்யவேயடியேற்கன்பு ஒருமைந்தனருள்வாய்போற்றி.

நடை

என்றமொழிகேட்டு இருவருமனமகிந்து
சிந்தையுடனே திருவாக்குத்தானுரைப்பார்
வாராய்மிருகண்டா மதலையைநாம்தருவோம்
சீராகவேவயசு தீர்க்காயுசாயிருந்தால்
கல்வியறிவில்லாமற் கசடனாய்த்தானிருப்பான்
அல்லதுகல்வியறிவு உடையவனாயிருந்தால்
பதினாறுவயததனிற் பரிந்தேயிறந்திடுவான்
ஆனதினாலந்தவகைதனிலே ஆண்பிள்ளை
எந்தவகையா யிருக்கவேவேணுமென்றார்
அப்போமிருகண்டன் ஆராயுங்கல்வியனாய்த்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவத்தினில்மிக்கோனாய்த் தந்தருள்வாய்பிள்ளையென்று
தெண்டனிட்டப்போது திருமதலைதானருளி
அம்மையுமையவளும் ஆனபரமேஸ்வரரும்
இடபமதிலேறி யேகினார்கயிலைதன்னில்
மிருகண்டனாரு மிக்கத்தவமுடிந்து
நலம்பெறவேதானிருந்து நன்றாகவாழ்க்கையிலே
வந்துபிறந்தான் மகவாகிமார்க்கண்டன்
சாஸ்திரபுராணமெல்லாம் சதுராகத்தான்படித்து
வேதங்களோதி விளங்கினார்மார்க்கண்டன்
அப்பால்நடக்கு மதிசயத்தைக்கேளுமினி
வில்வந்துளசி விருப்பமுடன்தானெடுத்து
மந்தாரைப்பூச்சி மறுவற்றபூக்களுடன்
செண்பகமுமல்லிகையுஞ் சேர்ந்தஅலரியுடன்
புஷ்பவகைகளெல்லாம் போதவேதானெடுத்து
கண்டியணிந்தைத்தெழுத்தை கருத்திலேதானமைத்து
சிவனைத்தொழுது சிவபூசைசெய்யலுற்றான்
அல்லும்பகலும் அரைநாழிபிரியாமல்
அந்தமுடன்சிவனை யன்பாகப்பூசைசெய்தான்
தோத்திரங்கள்தானும் துலங்கவேசொல்லலுற்றான்

**விருத்தம்**

அண்டர்கட்கரியாய்போற்றி யடியவர்க்கெளியாய்போற்றி
வண்டமிழ்ப்பாண்டிநாடு வாழமண்சுமப்பாய்போற்றி
கண்டவர்க்கினியமேனி காட்டியென்சென்னிமீதில்
முண்டகத்திருத்தாளானே முத்தனேபோற்றிபோற்றி.
வேதநாயகனேபோற்றி விண்ணவர்தலைவாபோற்றி
மாதொருபாகாபோற்றி மறுசமயங்கள்மாயப்
பேதகம்செய்வாய்போற்றி பிஞ்ஞகாபோற்றியான்செய்
பாதகமனைத்தும்தீர்க்கும் பராபராபோற்றிபோற்றி.

**நடை**

இப்படிதோத்திரங்கள் இயம்பிமிகப்பணிந்து
பழதுகள்வாராமல் பரமனையேதொழுதார்
இந்தப்படியே யிருக்குந்தருவாயில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டுபதினாறு யாச்சுதேயங்கவர்க்கு
அப்போதுயமதருமர் அருகில்நின்றதூதுவரை
மார்க்கண்டமாமுனிக்கு வயதுபதினாறாச்சு
மார்க்கண்டன்றன்னை வரவழையுமென்றுரைக்க
அந்தமொழிகேட்டு ஆனபெருந்தூதுவர்கள்
சென்றவனைத்தேடிச் சீக்கிரத்தில்வந்தார்கள்
அப்போதுமார்க்கண்டன் ஆனபெருங்கோவிலில்நிற்க
நின்றமார்க்கண்டன்தனையு நீர்வாருமென்றுரைத்தார்
அப்போதுதூதரைத்தான் அன்பாகத்தான்பார்த்து
நீங்களும்யாரென்று யெடுத்துரைத்தாரந்நேரம்
இயமதருமராஜன் இயல்தூதர்நாங்களெல்லாம்
எங்களரசனும்மை யினிமையாய்த்தானழைத்தான்
உங்கள்வயசுமொரு பதினாறாச்சுதென்று
வந்தோமுமையழைக்க வாருமென்றுதானுரைக்க
மார்க்கண்டனாரு மனம்நடுங்காதேயுரைப்பார்
தார்கொன்றைசூடுகின்ற சங்கரத்தானினைந்து
வந்ததொருதூதுவரே வார்த்தையொன்றுகேளுங்கள்
அந்தமூடனுங்களை யழைத்துவரச்சொன்னவனும்
முந்தியிருந்தவனோ முறைசெய்யவந்தவனோ
எந்தயியம னென்னையழைக்கச்சொன்னவன்காண்
என்றபொழுதில் யெமதூதரேங்கிநின்றே
இருவரையுந்தான்பிடிக்க இசைபாதென்றோடிவந்து
எமதருமராசன்பா லிசைக்கிறார்தூதுவர்கள்
மார்க்கண்டன்றன்னை வரவழைக்கச்சொன்னீரே
அவன்சொன்னவார்த்தை யடியேன்உரைக்கிறோம்
முந்தியிருந்தவனோ முறைசெய்யவந்தவனோ
எங்களியமன் ஒழித்தோடிப்போவான்காண்
தந்தபடியே வழிபார்த்துஓடுமென்றான்
உடனேபயந்து ஓடிவந்தோமென்றனரே
அந்தமொழிகேட்டு அப்போதுயமதருமர்
கோபித்துக்கண்சிவந்து கூற்றுவருமந்நேரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### விருத்தம்

அரியு மயனுந் தெரியாத அரனைநோக்கித் தவம் புரிந்துப், பிரியமுடனே முருகண்டன்பெற்ற பிள்ளைவுயிர் சோர, ஏரியுங்குஞ்சி யுளகூற்ற னெடுத்தான் சூலத்துடன் பாசம், விரியுங் கடல்சூழுலகமெல்லாம் வெற்றி பிறக்கத் தோன்றினனே.

தெரியுங் கடல்போற் கோபமூண்டு சேனையெல்லாம் புகைசூழக். கரியமலைபோல் செம்மலைபோல் கடுக நடந்தான் வழியின்மேற், பெரியகடாவின் மீதேறிப் பிறைபோல் வளர்ந்த வயிறுகளும், எரியும் விளக்கின் சுடர் போல இரண்டு விழியும் பொறிசிதற.

### வசனம்

அகோ தெப்படியென்லால் மார்க்கண்டனுக்கு வயசு பதினாறு ஆனவுடனே இயமன் தூதர்களையனுப்பி கூட்டி வரச்சொல்ல மார்க்கண்டனானவன் சுவாமி கையிலையங் கிரிவாசர் கிருபையைத் தியானித்துக்கொண்டு வந்து தூதரை நிராகரித்து எமதர்மராஜனையுஞ் சட்டைபண் ணாமற் சொன்ன செய்தியைத் தூதரானவர் தருமராஜ னிடத்திற் பேரயறிவிக்க தருமராஜன் மிகுந்த கோபங் கொண்டு கண்களிரண்டும் நெருப்புப் பொறிபறக்க அண்டங்கள் மலைகளெல்லாம் நடுநடுங்கத் தேவர்களெல் லாம் வெருண்டோடத் தக்கதாக வயிரமுடி தரித்து புசங்களிரண்டிலும் ஆயிரம்பேர்களால்தூக்கப்படாநின்ற உடைவாளும் சூரியுங்கட்டி ஆயுதவரிசைகளிற் சில ஆயு தமும் இடுப்பில் வயுந்துகட்டிப் பாசக்கயிறுந் தண்டா யுதமுமெடுத்துக் கருங்கடாவின் பேரிலேறிக்கொண்டு வெற்றிச்சங்கமூதிவீரமுரசறைந்து இருபுறமுஞ்சேனைதறங் கள் சூழ்ந்துவர ஆயிரங்காலாள் ஆயுதபாணிகளுடனே வரவும் ஓரொருகொம்பு இரண்டுநாழிகைவழிப் பரப்பு நீளம் வளர்ந்திருக்கபடாநின்ற கருங்கடாவானது இரண்டாயிரம் வரவும் மீசைகள் படபடவென்று துடிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவும், அண்டபுவனங்களெல்லாம் அதிரவும் வலதுதுடை தட்டி மார்க்கண்டனைத்தேடிப் புறப்பட்டான்.

### நடை

வாரார்எமதருமர் மார்க்கண்டனைத்தேடி
இயமதருமன் அங்குவரும் இரைச்சல்மிகக்கேட்டு
மார்க்கண்டன்தானு மனதுமிகநடுங்கி
என்னசெய்வோமென்று ஈஸ்வரரைத்தானினைந்து
தஞ்சமென்றுசொல்லிச் சரணம்பணியலுற்றான்.

### விருத்தம்

கண்டான் பாலகன் காலனையுங் கண்ணில் மிகவும் நீர்ததும்பி, அண்டர்பெருமான்றனைப் பார்த்தே யடியேன்செய்த குற்றங்க, ளுண்டானாலும் பொறுத்தருள் வாயுற்றகால னென்னுயிரைக், கொண்டே யின்றுபோகா மற் கோவே காத்துக்கொள்வாயே.

என்றேயிறங்கி மார்க்கண்டன் இறைவன்பாத மலர் போற்றி, நின்றேதொழுது கும்பிட்டே நெடுமூச்செறிய நிமலனும், நன்றேயுனது பத்தியினி நமனுமுன்னைப் பற்றிடில்யாமுஞ், சென்றே தொலைப்போம் மார்க் கண்டா தெரிவாயென்றே செப்பியுடன்.

அஞ்சாதேநாங் காத்திடுவே மானைமுகவன் தன் னாணை, மிஞ்சாதேநீ யவனுடனே சொல்லா லொன்றும் பேசாதே, மஞ்சார்பொழில்சூ ழுலகறிய மதியா துன் மேல் வருவானேல், நஞ்சார்கூர்வாள் மழுவாலே நமனைக் கொல்வோ மெனச்சொல்ல.

கோலஞ்செய்து மலர்தூவிக் குறித்துன்பாதம் வணங் கிடுவேன், ஆலமுண்ட மிடற்றானே அடியேனெஞ்சங் கலங்காமற், சூலபாசந் தன்னுடனே சுற்றி நின்று என் னுயிரைக், காலன்கொண்டு போகாமற் காத்துக்கொள் வாயே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தனே போற்றிபோற்றி அடியார்க்கெளியாய் போற்றி, பித்தனே போற்றிபோற்றி பிறைமுடித்தாடி போற்றி, நித்தனே போற்றிபோற்றி நிருமலா போற்றி போற்றி, யுற்றதோர் கூற்றன்வந்தா லுதைத்துடன் சொல்லுவாயே.

ஆதிப்பொருளா யலைகடலா யணுவுக் கணுவா யாவ ருக்கும், நீதிப்பரனாய் நிற்குணனாய் நினையுபடியார்க்கெளி யோனாய்ச், சோதிவடிவாய்ச் சுடரொளியாய்த் தோன் றுஞ் சிவனே மாமறலி, மோதிப்பாச மெறிய வந்தான் முழுதுநானுன் னடைக்கலமே.

வசனம்

இம்படி மார்க்கண்டன் தோத்திரம்பண்ணுவனைக் கேட்டு எமதருமராஜன் சொல்லுகிறான்.

விருத்தம்

வாடாகெடுவா மார்க்கண்டா மறந்தானாலும் விடு வேனோ, ஓடுகொண்டாரென்செய்வா ருன்னைப்பிடித்துக் கொடுபோகிச். சூடாமணிசேர் வியிரண்டுஞ் சொரு கச்சூலந் தாற்குத்திக் கூடாவுயிரைப் பிடித்தே நான் கொண்டேபோவேன் கண்டாயே.

வசனம்

என்னடா மார்க்கண்டா என்னுடைய தூதுவன் வந்துஉன்னையழைத்தால் அதற்குவாராமலிருந்துமேலான வார்த்தை சொல்லுகிறாய் உன்னை விடத்தக்கதில்லை கர்த்தாவானவர் உன்னைக் கொண்டோடும் போது தடுக்கமாட்டாரென்று வெகுவாய்த் தருமராசன் மார்க் கண்டனைப் பயப்படுத்துகிறான், எ — று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருத்தம்

ஈசன்றன்னா லென்செயலா மிந்தப்பதத்தை யினி யவரால், வாசஞ்செய்து மலரிட்டு வணங்கினாலு மாற் றரிது, மோசம்போகா துன்றனக்கு முடிந்தநாளும் வந் ததுகாண், பாசங்கொண்டே யுன்னுயிரைப்பற் றிமிகவும் பறிப்பேனே.

ஈரெட்டொழிய வயசுனக்கு ஏற்றமுண்டோ என் னுடனே, மார்பைத்தட்டி எதிரடி வலிமைசொன்னாய் மார்க்கண்டா, பாரிப்போதே நானுன்னைப் பரமேஸ் வரரும் பார்த்திருக்க, கூரிட்டொளிர்வேல் யின்னாலே கொண்டேபோவேன் கண்டாயே.

விருத்தம்

அஃதெப்படியென்றால் எமதர்மமகாராசனானவன் மார்க்கண்டனைப் பார்த்து, அடா மார்க்கண்டா நீ எத் தனை தவத்தோடுங்கூடிப் பூசைசெய்தாலும் உனக்குப் பதினாறுவயசுக்குமேலிருப்பில்லையே கர்த்தன்தானென்ன செய்வார்? அவர் பார்த்திருக்கக் கொண்டுபோகிறே னென்று கருங்கடாவின்பேரிலிருந்து கீழிறங்கி கோபத் துடன் சொல்ல மார்க்கண்டன் சிவனைத் துதிக்கிறான்.

விருத்தம்

அடியேன் தொழுநம் பரனேயபயம் பரமேஸ்வரனே யபயம், துடிசேரிடையாள் கணவாவபயந் தூயநெல்லைப் பதியாயபயம், கடிசேர்சூலக் கர்த்தாவபயங் தூயநெல் லைப் பதியாயபயம், கொடிதாகிய கூற்றுவனைக்கொன்று கொடுப்பாயெல்லா வரமுமென்ன.

வசனம்

இப்படி அபயமிட்டு வருந்தின மார்க்கண்டனைப் பார்த்து சுவாமியருளுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### விருத்தம்

வந்துபயந்தே யபயமிட்ட மார்க்கண்டா நீயஞ் சாதே யைந்துகரத்தன் றன்னானை மந்தநமனையணுக வொட்டோஞ், சிந்தைமகிழ்ந்தே யிருவென்று திருவெண்ணீறு காப்பணிந்து, மைந்தன்றன்னைத் தன்னருகே வா வென்றழைத்து வைத்தனரே.

### வசனம்

இப்படிக் கைலாசபதியானவர் மார்க்கண்டேயனைத் தன்கிட்ட வைத்ததைப் பார்த்து எமதருமராசன் சொல்லுகிறான்.

### விருத்தம்

கூசக்கிடவே னல்லவென்று கொடியகோபத்துடனியமன், ஈசர்க்கெதிரே தழலெனவே யெரியுஞ் செக்கர்க் குஞ்சியுடன், பாசக்கயிற்றா லவன்றன்னைப் பற்றிப்பிடிப் போமென்றெண்ணிப், பேசிக்கொண்டு தான்வந்து பெரிய மலைபோல் நின்றனனே.

### நடை

நின்றானியமன் நேசமுள்ளபாசமதை
வீசியெறிந்தான்காண் விரைந்துமார்க்கண்டன்மேல்
அப்போதுமார்க்கண்டன் அரனையேகட்டலுற்றான்
வீசினபாசத்தால் விமலனொடு மார்க்கண்டனைச்
சிக்கெனவேதானிறுக்கி சேர்த்துமேதானிழுத்தான்

### விருத்தம்

வட்டச்சடையார் திருமுதுகை வலுவாய் மார்க்கண்டன்றன்னை, கட்டிக்கொண்டான் தாளிறுக்கக்கண்ணீர் நின்று மிகத்ததும்புஞ், சிட்டர்க்குரிய பிரானாருஞ் சிறுவன்றானுமகப்படவே, துட்டக்காலன் பாசத்தைச் சுழற்றி யிழுக்கலுற்றானே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வசனம்**

அஃதெப்படியெனில் எமதருமராசனுக்குக் கோப முண்டாகி மார்க்கண்டன்பேரிற் பாசத்தைவீசி - மார்க் கண்டனானவன் சுவாமியைத் தாவிச்சேர்த்துக் கட்டிக் கொள்ள அப்பாசம் சுவாமியையும் மார்க்கண்டனையுஞ் சேர்த்தது. அதைககண்டு மார்க்கண்டனானவன் றன்னைப் பாசமிழுக்கிறதுந் தவிர நம்முடைய நிமித்தியஞ் சுவாமி யையும் பாசக்கயிறுகட்டி யிழுக்கும்படியாச்சுதேயென்று கண்ணீரானது தாரைதாரையாகவோடுகிறது. சுவாமிக் குத் தெரிந்து கோபமுண்டாகிஎமதர்மராசனை யாக்கினை செய்யப்போகிறார்.

**விருத்தம்**

வாழுமுலகி லருள்பெற்ற மார்க்கண்டனைத்தான் காத்திடவே, யேழையாக வெழுந்திருந்து இடதுகாலை மிகநீட்டி, வீழவுதைத்தார் நிலம்பார்க்க விண்ணுமண் ணுந்தானதிர, ஆழியுடைந்தாற் போலியமன் அலறி வீழ்ந்தா னவனியிலே.

**நடை**

அப்பால்நடக்கும் அதிசயத்தைச்சொல்லுகிறேன்
பாதத்தாலேயுதைக்கப் பாதாளத்தேவிழுந்து
இறந்தானேயெமன் ஏற்றதொருஈசுவரரும்
மார்க்கண்டாநீயு மயங்காதேயென்றுரைத்து
என்றும்பதினாறு யிருக்கவரங்கொடுத்து
ஒன்றுக்குமஞ்சாதே யுன்னைநாம்காத்திடுவோம்
என்றுசிவனா ரிவ்வசனஞ்சொல்லிடவே
மார்க்கண்டன்மனதுக்கும் மகிழ்ச்சியுடன்வாழ்ந்திருந்தான்
அன்றுமுதலுலகிலுள்ள ஆருயிர்கள்இறவாமல்
இருந்ததினாலென்னசெய்வாள் ஏற்றதொருபூமாது
கன்றிமுகம்வாடி கண்ணிடத்துநீர்சொரிந்து
சாவார்களில்லாமல் றரைப்பாரமாச்சுதினிப்
பூமிபெருகாதிருக்கப் புனிதரருள்வேணுமென்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பைங்கொடியாள்பூமாது பாரஞ்சுமந்தலற
இந்திரனார்தம்மிடத்திற் போவோமெனநினைத்து
சித்திரபுத்திரரைச் சென்றுகண்டுசொல்வோமென்று
பூமாதுமங்கே புனிதமாயோடிவந்தாள்
வந்துநின்றுஇந்திரனார் வாய்த்ததிருமாளிகையில்
முறையிட்டுச்சொல்லுகிறாள் மடிந்தான்காண்மறலியுமே
என்னாற்சுமக்கக் கூடவில்லையென்றுரைத்தாள்
அப்போதுசித்திரபுத்திரர் ஆதரவாய்வந்துநின்று
நாரயணரிடத்தில் நண்ணியேசொல்லுமென
நின்றுசலித்து நெடுமூச்சுதானெறிந்து
ஆரமுலைமாது அலறியேசென்றுகண்டாள்

## விருத்தம்

பாலன்செய்த பாக்கியத்தாற் பரமசிவனாற் பாதத்தாற், காலன்பட்டு விழுந்திறந்தான் அதனாலுயிர்கள் காசினியிற், சாலமிருந்து சாவின்றித் தரணி பார மாச்சுதென்று, ஞாலமடந்தை வருத்தமுற்ற நாராயணனை போற்றினளே.

## நடை

அப்போதுமாயவரும் ஆனதொருபூமாதே
உன்னுடையபார மொழித்தருள்வேன்நான்தானும்
போமென்றுசொல்லி யனுப்பினார்பூமாதை
அப்போதுதன்கணத்தை யழைத்தேயருள்புரிவார்
தேவேந்திரலோகத்திற் றானிருக்கும்உத்தமரை
இங்கேயழைத்தோடி வாருமென்றாரங்கே
கணங்களுமோடியே கணக்கரிடம்வந்துகண்டு
நாராயணரும்மை நன்றாயழைக்கலுற்றார்
என்றமொழிகேட்டவுடன் ஏற்றதொருபுத்திரரும்
சிந்தைமகிழ்ந்து சீக்கிரமாய்த்தானெழுந்து
நாடாளுமிந்திரர்க்கும் நாகமடந்தையற்கும்
கூடவேதெண்டனிட்டு கூப்பிட்டெழுந்திருந்து
இனித்தானனுப்புமென்று இணையடியைக்கைதொழவே
நல்லதென்றுஇந்திரரும் நாயகியுமுளமகிழ்ந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போய்வாருமென்று புகழ்ந்துவிடைகொடுத்தார்
சேனைகள்சூழ்ந்துவரச் செம்பொன்னின்தேரேறி
சித்திரபுத்திரனார் சிவன்கயிலைபோய்ச்சேர்ந்தார்
முப்பத்துமுக்கோடி தேவர்களும்வந்துவிட்டார்
நாற்பத்துநாற்கோடி ரிஷிகளும்வந்துவிட்டார்
சந்திரருஞ்சூரியரும் தானவரும்வானவரும்
வந்துமுனிவரெல்லாம் வணங்கினாரப்போது
சித்திரபுத்திரருஞ் சிவனடிவணங்கி
அர்ச்சனைகள்செய்து அரன்பாதம்போய்ப்பணிந்தார்
வந்துபணிந்த மகனாரைத்தானெடுத்து
நன்மையுந்தின்மையும் நடுவெழுதவந்தீரோ
என்றரனார்களிகூர ஏற்றசித்திரபுத்திரரும்
பக்தியுடன்பட்டோலை வாசித்தார்பாங்காக
அப்போதுவிஷ்ணுவும் அகமகிழ்ந்தேயடிவணங்கி
சிவனருகில்சென்று செப்புகிறார்நல்வசனம்
எமதருமராசன் இறந்ததினாற்பூமாது
சாவின்றிமிகுந்தவுயிர் தம்மைச்சுமக்கமாட்டாமல்
அல்லல்படுந்துயர மாற்றவேவேணுமென்று
சிவனாரிடத்திற் செப்பினாரப்போது
எல்லோருங்கூடி யிசைந்தார்சிவனிடத்தில்
சிவனாருமங்கே சித்தம்மகிழ்ந்திடவே
பிரமாவுமன்னேரம் பெருமையாய்த்தானுரைப்பார்
வயதுபதினாறாய்ச் சிருட்டித்தோநாவர்க்கு
கணக்குப்படிசென்றான் காலத்தையறிந்துமவன்
தவத்தைமிகப்பாராமற்றானே தான்மாண்டான்காண்
புத்திக்குறைச்சலினாற் போய்மாண்டானந்தநமன்
பிள்ளைகள்செய்தகுற்றம் பொறுத்தருளவேணுமையா
ஆரிடத்திற்செல்வோம் அரனேநீரல்லாமல்
வேறொருவருண்டோ விண்ணப்பம்கேட்கவென்றார்
இப்படியேவானவர்கள் எல்லோருமுறையிடவே
சொல்லுகிறோம்கேளுங்கள் சுருக்கமாயென்றுசொல்வார்
அன்னதானஞ்செய்வோர் அருங்கோவில்கட்டினவர்
கன்னிகாதானஞ்செய்வோர் கன்றுக்குப்பால்விட்டோர்
சிவன்பாதஞ்சென்றவர்கள் சிவபூஜைசெய்தவர்கள்
அன்னைபிதாவை யனுதினமுந்தான்தொழுவோர்

10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவிலுக்குநித்தம்போய்க் கும்பிட்டுவருவோர்கள்
பார்வதிபூசை பத்தியாய்ச்செய்தவர்கள்
வைகுண்டநாதருக்கு வழியடிமைசெய்தவர்கள்
இவ்வளவுபேரும் இன்பமுடனென்னிடத்தில்
கொண்டுவரவேணுமென்று கூறியேபின்புசொல்வார்
எமனையெழுப்பி யின்பமுடன்மகிழ்ந்து
கூப்பிடுங்களென்றுசொல்லிக் கோமான்விடைகொடுக்க
அருளளிப்பாயென்றுசொல்லி அந்தகனைதானெழுப்ப
தண்டாயுதத்தோடே யெழுந்தானியமனுந்தான்
வாய்புதைத்துதெண்டனிட்டு வணங்குகிறான்தானியமன்
அப்போதரனார் அகமகிழ்ந்துபார்த்தவனை
நன்மைகள்செய்தவர்மேல் நாடாதேயென்றுசொல்லி
ஆயுதங்களெல்லாம் அன்பாகத்தான்கொடுத்து
தன்மகன்கணக்கெழுதித் தான்வந்தவுத்தமரை
நன்மைதின்மையுள்ளபடி நமனருகேதானிருந்து
வாக்குடனேசொல்லுமென்று மகிழ்ந்துமேதானுரைத்தார்
இருபேருமொன்றாய் எல்லோரையுமனுப்பி
எமலோகபட்டணத்தை சேருகிறாரிருபேரும்
படைகள்மிகநெருங்கப் பாரக்கடாவேறி
வெற்றிகுடைபிடிக்க வெண்சாமரைபோடக்
கணக்கரும்நல்ல கற்பகத்தேரேறி
இயமதர்மன்கூட இசைந்துவந்தாருத்தமனார்
எட்டுதிசையு மெங்குமேதான்முழங்க
திக்குத்திசைகளெல்லாஞ் சிறப்பானபந்தலிலே
கவிவாணர்பாடக் கட்டியர்களாடிவர
நாடகசாலைப்பெண்கள் நாட்டியங்களாடிவர
பதினெட்டுவாத்தியங்கள் பண்பாகத்தான்முழங்க
வாசங்கள்தான்வீச வான்கவரிதான்வீச
பொன்னுலகத்தாரும் போதவேசூழ்ந்துவர
தேவாதிகளெல்லாஞ் சிறப்புடனேதான்வரவே
இந்தப்படியே இருபேரும்வந்திருந்தார்
புட்பமாரிபொழிந்து பொன்னுலகோர்வாழ்த்திட
வானம்புவியு மற்றுலகிலுள்ளதெல்லாம்
எமதருமன்மாளிகையில் எழுதுகின்றார்நற்கணக்கர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்குவாசல்வழிக்கு நடுவேயோர்மாளிகையில்
சித்திரபுத்திரருஞ் சிறப்பாகத்தானிருந்து
பட்டோலைதன்னைப் பதிவாகவாசித்தார்
திருந்தவேநன்மைசெய்தோர் சிறந்தவழிவருவதற்கு
வடக்குவாசல்வழியை வரிசையாய்ச்செய்யலுற்றார்
மாணிக்கஞ்சேர்ந்த வயிரக்கால்தானாட்டி
இடம்பெறவேபந்தல் எழிற்காவணம்போட்டு
மாடங்கள்கட்டி வயிரவிளக்கேற்றி
கூடங்கள்கட்டிக் குளிர்ந்தமலர்க்காவுடனே
நல்லதண்ணீர்பந்தல்களை நன்றாகவுண்டுபண்ணி
புண்ணியஞ்செய்வதற்குப் பொருத்தமிகவுண்டாக
அதுக்கானபேரை யவ்வழிக்குகாவல்வைத்து
இதுதான்கயிலைவழி யென்றுமேபுண்ணியற்கு
சொல்லும்படிக்குச் சுருதியுள்ளகாவலரைத்
திட்டங்கள்செய்து சிறப்புடனேவைத்தார்காண்
கீழ்வாசல்தன்னருகே கேசவனைத்தானோக்கி
ஞானநிஷ்டைசெய்தவர்கள் நல்லவழிவருவதற்கு
சிவஞானபக்தர் தரிசிக்கவருவதற்கு
பராசக்திபத்தர்கள் பண்பாயிருப்பதற்கு
மண்டபமும் மாளிகையும் வகையுடனேதான்வைத்து
மாளிகைகூடம் வகுப்பாகச்செய்யலுற்றார்
வெள்ளிக்கதவுமிட்டு வேதியரைக்காவல்வைத்து
வைகுண்டநாதருக்கு வழியடிமைசெய்தவர்கள்
வருகின்றவழியென்று வைத்தாரேதூதுவரை
வேறுமொருவாசல் விரைவாகவகுக்கவென்று
வந்துதெற்குவாசல் வழிதோறுமுட்பரப்பி
நெருப்புப்பரந்தெங்கும் நின்றெரியவுண்டுபண்ணி
சுண்ணாம்புஞ்சோறும் சுடுமணலுமுண்டாக்கி
பேதெரியவெட்டிப் பெருங்கழுக்கள்தானாட்டி
கூறையும்காவும் குளிர்ந்தநிழலில்லாமல்
நாயும்நரியும் பெருங்கடுவாயோநாயும்
கட்டெறும்புகொட்டுந்தேள் கடியதொருபாம்புடனே
அட்டைப்புழுக்குழியும் அரணைப்புழுக்குழியும்
நரகக்குழியும் நன்றாகஉண்டாக்கி

அரியதொருபாதகரை யடித்திழுத்துவரச்சொன்னார்
கல்லுங்கரடும் கடியமணல்பரப்பி
பாதகரைத்தண்டிக்கப் பாவிகளைக்காவல்வைத்தார்
மேற்கேயொருவாசல் விதவிதமாய்ச்செய்யும்வகை
பார்க்ககப்பயங்காட்டும் படர்பூதப்பிசாசுகளும்
கருநாயுஞ்செந்நாயுங் கலந்துகட்டிநிறுத்திவைத்தார்
குரைக்குந்தலைப்பேய்கள் கூட்டமாய்நிறுத்திவைத்தார்
செக்குலக்கைதிருகிச் சிறப்பாகஉண்டுபண்ணி
செப்புத்தூணாட்டியதிற் றீயெரியநிறுத்திவைத்தார்
இரும்பாலேதூண்டில்களை யெங்குமேதானாட்டி
நிகரில்லாத்தரைதனிலே நெருப்பெரியச்செம்புருக்கி
பஞ்சமாபாதகர்க்குப் பரப்பியேசெய்துவைத்தார்
கிங்கிலியரங்கே கெட்டியாய்க்காவல்வைத்தார்
இப்படியேவாசல்க ளெல்லாம்குத்தபின்பு
செப்பமுடனிருபேருஞ் சிறப்பாகத்தானிருத்தார்
இங்கிதங்கள்பேசி யிருபேருந்தான்மகிழ்ந்து
வள்ளுவனுக்காள்விட்டு வரவழைத்தாரந்நேரம்
வள்ளுவனுமங்கே வலமாகவந்துநின்று
அடியேனையிங்கே யழைத்ததெதுக்கெனவே
படியேழுஞ்சென்று பறையடிக்கநீகேளு
சீவசெந்துக்களெல்லாம் சிறப்பாகத்தானறிய
காயிருக்கப்பழமுதிரும் படியேயடிமுரசை
அடித்துவாவென்றுசொல்லி யனுப்பினாரந்நேரம்
அப்படியேவள்ளுவனும் ஆனைதனைக்கொண்டுவந்து
ஆனைக்குள்ளவரிசைகளை யன்பாயலங்கரித்து
ஆபரணமுள்ளதெல்லாம் அடைவாகவேபூட்டி
தம்பட்டம்வைத்துத் தனிக்காலவழியேதான்
ஆனைதனிலேறி புறப்பட்டானப்போது
துர்க்கைதிருக்கோவில் தூரவேதான்தெரிய
துய்யகரிவிட்டிறங்கித் துர்க்கையைத்தான்பணிந்தான்
மதுவைகொடுத்தாள் மாகாளியப்போது
அரக்குமதுவை அறிவின்றித்தான்குடித்தான்
பதினாலுலகறியப் பறையறைந்துசொல்லுகிறான்
ஆண்பால்பெண்பால் ஆதியேதான்பிறந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாலுவகைச்சாதிகளும் நன்றாகத்தான்றெரிந்து
பழமுதிரக்காயிருக்க வென்றுசெல்லிபண்புடனே
வெய்யபெருந்தோளான வீதியிலேவந்துநின்று
முறையிட்டுத்தான்பறையு முழங்கினானப்போது
இந்தமொழிகேட்டுடனே யெல்லோருந்தான்மகிழ்ந்து
அந்நேரஞ்சிறுபிள்ளைகள் அனேகபேர்தான்கூடி
இரச்சலிட்டுக்கொண்டு எதிராகநின்றாரே
அப்போதுவள்ளுவனு மானதனைநோக்கி
அடித்தானேபிள்ளைகள்மே லானதொருகோபத்தால்
அப்போதுபிள்ளைகளுக் கதிககோபமுண்டாகி
கையில்மணலெடுந்துக் காற்றிலேதூற்றிவிட்டார்
கண்ணில்மணல்விழுந்து கசங்கியேவள்ளுவனும்
கோபம்பெரிதாகிக் குணக்கேடாச்சொல்லிவிட்டான்
குடித்தவெறியாற் குணந்தப்பிசொல்லிவிட்டான்
பூவுதிரபிஞ்சுதிர பெருக்கெனவேமொட்டுதிரக்
காயும்பழமும் கலந்திரவேணுமென்று
தினம்பிறப்பாராயிரம்பேர் தினமிறப்பாராயிரம்பேர்
கனமிகுதியேறாமற் றாரணிப்பாரங்குறைய
என்றேமதுகுடித்த வெறியாலிரங்காது
அடியடியென்று அடித்தான்பெருமுரசை
அப்படியேதானடித்து அவ்விடத்தைவிட்டேகி
சித்திரபுந்திரர்பாற் சென்றேயடிபணிந்தான்
அந்தக்கொடும்பறை கேட்டவ்விடத்திலுள்ளவர்கள்
இந்தவகையேதென்று எழுந்துமேதான்பிறக்க
எல்லோருமொன்றா யெமலோகம்போய்புகுந்தார்
நல்லதர்மராஜனையும் நற்கணக்குநாதரையும்
வந்துமிகப்பணிந்து வள்ளுவனங்குவந்து
மன்னவரேநீங்கள்சொன்ன மாற்றத்தைவிட்டுவிட்டு
கருக்குழியிற்பூதமுதலும் கருத்தரித்தபின்முதலும்
வடுப்பிஞ்சுகாயுதிர வென்றுரைத்தேவள்ளுவனும்
ஏற்றதொருபறையடித்தா னெல்லோருந்தான்கேட்க
என்றுதொழுதுசொன்னா ரிருபேருந்தான்பார்த்து
அந்நேரமவர்களுக் கதிககோபமுண்டாகி
சொன்னமொழிஒன்றிருக்கச் சொற்றவறியடித்தவனே
கோபம்பெரிதாகிக் கூட்டிவரச்சொன்னார்கள்
வந்துமேவள்ளுவனு மலரடியைப்போற்றிசெய்ய
வாராய்நீவள்ளுவனே வாய்மதங்களேதுரைப்பாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போதுவள்ளுவனு மடிபணிந்தங்கேதுரைப்பான்
இப்போதுவந்தகுறை யென்னாலேவந்ததல்ல
அரக்குமதுமகாளி யம்மைமிகவார்த்தாள்
அரக்குவெறியால் முழங்கினேனம்முரசை
பிள்ளைகள்துர்ச்சனரால் பிழைகேடாய்சொல்லிவிட்டேன்
இந்தப்பிழையைப் பொறுத்தருளவேணுமையா
குடித்தவெறியாற் குணந்தம்பிசொல்லிவிட்டேன்
உள்ளமொழிசொன்னதெல்லா முறுதியாய்என்றுசொல்ல
மாயையதுசொன்ன வள்ளுவனைத்தான்பார்த்து
சாராயந்தான்குடித்தான் தவறுவந்துவிட்டதனால்
வள்ளுவனைச்சொல்ல வகையேதுமில்லையென்றார்
பிள்ளைகளாலே பிழைகேடுவந்ததென்றார்
வள்ளுவன்றானென்செய்வான் மற்றபேரேதுசெய்வார்
வள்ளுவன்சொற்படியே மானிடவரெல்லோரும்
வாழ்வுபெறவேவாழ்ந்து மகிழ்ந்திருங்கள்புவிமீதில்
என்றேயமனார் இன்பமாய்த்தானுரைத்தார்
பூலோகத்திலுள்ள புகழ்படைத்தமனிரெல்லாம்
அவரவரிடத்தில் ஏகினாரப்போது
இருந்தாரிருவருந்தான் இரத்தினமணிமண்டபத்தில்
மணிமுடியைத்தான்பூட்டி வண்மையுடன்தானிருந்து
பட்டோலைகள்தன்னைப் பரிந்துமிகவாசிக்க
அப்போதுசெட்டிச்சி யம்மையொருசீமாட்டி
அமராவதிப்பெருமாள் அன்னைபோற்காத்தளிப்பாள்
தர்மராஜவின்தேவி தான்செய்தபுண்ணியங்கள்
அழகியபுத்தகத்தில் அகப்படவேயப்போது
இயமனார்தன்னிடத்தி லியல்பாகவாசித்தார்
இந்தவிபரம் இனிமேல்விளம்புகிறேன்
இக்கதையைக்கேட்டவர்க ளிராசர்பதம்பெறுவார்
நன்றிப்பெருங்கதையை நாள்தோறும்படிப்பவர்கள்
பாடிப்படித்திடவே பத்தியுடன்கேட்டவர்கள்
நாடியெழுதினவர் நல்விரதந்தானெடுத்தோர்
பலமாகப்பெருஞ்செல்வம் படைத்துமேவாழ்ந்திருப்பார்
ஆல்போல்தழைத்து அறுகுபோல்வேரூன்றி
மூங்கில்போல்சுற்றம் முசியாமல் வாழியவே.

**சித்திரபுத்திரநாயனார் கதை முற்றுப்பெற்றது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

கடவுள் துணை

# அமராவதி கதை

செட்டியம்மையென்ற சீமாட்டிதன்கதையை
காரணத்தால்நான்பாடக் கணபதியேமுன்னருள்வாய்
தர்மராசாவின் தயவானதேவியென்பால்
அமராவதியென்ற அழகானநற்பெயரால்
பூதலத்திற்செல்வம் பொருந்தமிகவுண்டாகி
மட்டில்லாச்செல்வம் வளர்ந்துமிகவுண்டாகி
அன்னைசுற்றத்துடனே வருள்பெறவேதான்வாழ்ந்து
முத்தொட்டில்கட்டி முடியவாழ்வுண்டாகித்
தருமங்கள்தானே தவறாமல்செய்துவந்தாள்
பாவங்களென்றுசற்றும் பக்கத்திலேகேட்டறியாள்
இந்தப்படியே யியல்புடனேதான்வாழ்ந்தாள்
நாயகனாதனிநோன்பு நாவிலெடுத்தறியாள்
கணக்கரென்றசெய்தி கனவிலுங்கேட்டறியாள்
முப்பாலுங்காச்சி முடியாமல்வாழுகின்றாள்
சிவஸ்தலம்விஷ்ணுதலம் தரிசனங்கள்செய்தறியாள்
சித்திரபுத்திரர்நோன்பு சிந்தையிலேவைத்தறியாள்
இவள்செய்திதன்னை இயல்கணக்கர்தாமறிந்து
எமதர்மராஜனுட னின்பமாய்த்தானுரைக்க
அவளுடையநற்கணக்கை அணுவளவுந்தப்பாமல்
கேட்டாரியமருந்தான் கிருபையுடனேயிருந்து
அவள்செய்தபுண்ணியங்க ளடைவாகச்சொல்லுகிறார்
பட்டணமெல்லாம் பறைதட்டியாராய்ந்து
அன்னக்கொடிகட்டி யமுதுபடைத்திடுவாள்
அதிதிபரதேசியர்க்கும் ஆருமற்றார்தங்களுக்கும்
ஆராய்ந்துதேடி யமுதுமிகக்கொடுப்பாள்
அத்தாலங்கேட்டால் அமுதமேதான்கொடுப்பாள்
மகேசுரபூசைமுதல் மனமகிழ்ந்துசெய்திடுவாள்
கோடைக்குத்தண்ணீர் குளிர்ச்சிமிகவுண்டாகப்
பானகம்நீர்மோர் பதிவாகச்செய்துவைத்தாள்
சித்திரைமாதத்திலே செழிப்புடனேநற்குடையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசிறியுந்தான்கொடுத்து வெப்பங்கள்தணித்திடுவாள்
கன்னிகாதானங் கருதிமுடித்துவைப்பாள்
வேதியர்க்குள்ளதெல்லாம் விரும்பியேகொடுத்திடுவாள்
ஆடையில்லாபேர்களுக்கு ஆடைமிகக்கொடுத்திடுவாள்
சனிவாரமெண்ணெய் தப்பாமற்கொடுத்திடுவாள்
நந்தவனமுண்டாக்கி நற்பூக்கள்தான்பறித்து
ஆலயங்கதன்னி லடைவாகச்சாத்திவைப்பாள்
தூரத்துக்குத்தூரஞ் சுமைதாங்கிகட்டிவைப்பாள்
காதத்துக்குக்காதங் கற்கிணறுகட்டிவைப்பாள்
பிள்ளைபாற்றின்பண்டம் பெருக்கவேதான்கொடுப்பாள்
வெட்டுந்தலையை பொருள்கொடுத்துமீட்டிடுவாள்
வட்டியில்லாமற்கொடுத்து வாங்கிமிகவைத்திடுவாள்
வேந்தனுக்குஅஞ்சி விரும்பிவருபவர்க்கு
தேறுதலைச்சொல்லி யடைக்கலங்கள்தான்கொடுப்பாள்
கன்னங்கள்குத்தி களவுசெய்யவருபவர்க்கு
அஞ்சாதேபோவென்று ஆதரவுசொல்லிடுவாள்
ஏழைபரதேசியர்க்கு இல்லிடமுங்கட்டிவைப்பாள்
இடிந்தமடமுதலாய் எடுத்துமேபுதுப்பித்துப்
பூப்பந்தல்போட்டுப் புதுக்கனிகள்தான்கொடுப்பாள்
அனாதைப்பிணத்தை யடக்கிவைப்பாள்கண்டீரோ
ஆயிரங்கோட்டையரிசி அன்றைக்கன்றுசெலவிடுவாள்
அதற்கானகாய்கறியு மப்படியேதான்கொடுப்பாள்
சம்பாரஞ்சொல்லுவதைத் தடையறவேதான்கொடுப்பாள்
இந்தப்படிதரும மெள்ளளவுந்தப்பாமல்
செய்துமேதானுஞ் சறப்பாகந்தானிருக்க
விரதமுநோன்பும் விரும்பாதபாவியென்று
கணக்கருக்கங்கே கடுங்கோபமுண்டாகி
என்னதானம்செய்தாலு மேந்திழையாள்தன்னைவிடோம்
பூமிதனிலிருந்து பொருந்தியேவாழாமல்
அதற்கானபடிசெய்ய அழைப்பிக்கவேணுமென்று
கணக்கருக்குக்கைக்கூலி கட்டுவாருலகமதில்
இந்தவசனமதை எவ்வளவுமறியாமல்
இருந்தஅமராவதியை யிங்கழைக்கவேணுமென்று
ஏவினாதூதுவரை யின்னமொருவார்த்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளுடையவாச லடையாளங்கேட்டீரோ
தென்னமரங்களுஞ் சேரவேசூழ்ந்துநிற்கும்
கப்பல்படகுமுதல் கரையருகேவந்துநிற்கும்
தீவுகளிலுள்ளவைகள் சேகரமாய்வந்துநிற்கும்
பசுக்கவொருகோடிநிற்கும் பைங்கொடியாள்வாசலிலே
என்றுசொல்விநற்கணக்கர் ஏவினார்தூதுவரை
அந்நேரந்தூதுவர்க்கு அதிககோபமுண்டாகி
இரும்புத்தடியுடனே ஏற்றதோராயுதமும்
பாசக்கயிறும் பெருவலையுந்தானெடுத்து
வந்துவளைத்தார்கள் மனையாட்டிவாசலிலே
வாசலிலேவந்துநின்று வலிமையெல்லாங்கண்டார்கள்
அதிதிபரதேசிகட்கு அன்னங்கொடுக்கிறதும்
கூனர்குருடர் குறைக்கால்முடவருக்கும்
ஆராய்ந்துபார்த்து அமுதுகொடுக்கிறதும்
தருமங்களெல்லாந் தயவுடனேசெய்கிறதும்
இத்தனையுங்கண்டு இயல்பானதூதுவர்கள்
அமராவதியாளை யழைத்துவரச்சொன்னார்கள்
இவளைநாமழைத்துப் போனோமேயாமாகில்
தருமங்களெல்லாந் தவிர்ந்துவிடுங்கண்டீரோ
அன்னற்கொடிகளெல்லா மலைந்துவிடுங்கண்டீரோ
என்றுசொல்லித்தூதுவர்கள் ஏங்கிமனங்கலங்கி
கையில்தடியைக் கடக்கவேபோட்டுவிட்டு
நின்றுபெருமூச்சும் நெடுமூச்சுந்தானெறிந்தார்
அந்நேரமோடிவந்தாள் அமராவதியாளும்
கண்டாளே தூதுவர்கள் கலங்கியிருக்கிறதை
அமராவதியாள் அவர்முகத்தைத்தான்பார்த்து
வாருங்கள்மக்களே மயங்கியிருப்பானேன்
இத்தனைநேரமட்டும் இளைப்பாயிருந்தீரே
அடியாள்தன்பேரில் அபராதமுண்டுகண்டீர்
என்றுசொல்லியிங்கிருந்து இன்னமுதுகொள்ளுமென்றார்
அப்போதுதூதுவர்கள் அடுத்தமொழியுரைப்பார்கள்
இந்நேரம்நாங்கள் இன்னமுதுகொள்வதில்லை
என்றுசொல்லிதூதுவர்கள் இருந்துவிசாரமுற
வாருங்கள்மக்களே வருந்திமெலிவானேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்னமிடவந்திரோ களவுசெய்யவந்திரோ
தாய்க்குத்தாயாகி நானிருக்கவுங்களுக்கு
உண்டிருக்கஅன்னமுதல் உடுமடியுந்நான்தருவேன்
அஞ்சாமல்நீங்க ளன்னம்தான்புசிக்க
வாருங்களென்று வருந்திமிகவழைக்க
இவ்விடத்தில்யாமமுது புசித்தேமேயாமாகில்
எங்களிடநாயனார் எழுதுவார்பட்டோலை
ஆனதினால்நாங்க ளமுதுபுசிப்பதில்லை
இருந்தரசாளுமென்று ஏகினார்தூதுவர்கள்
வந்துவணங்கிமலரடியைத்தெண்டனிட்டுச்
சித்திரபுத்திரரே சீமானேகேளுமையா
செட்டிசியாலெங்களைத் தீக்குழுவிற்போட்டாலும்
செட்டிச்சியைநாங்கள் தீண்டோமொருநாளும்
என்றுசொல்லக்கணக்கர் இருகண்ணுந்தான்சிவந்து
உங்களையுண்ண உபசாரஞ்சொன்னாளோ
மற்றுமொருதூதுவரை வரவழைத்தேதுசொல்வார்
அமராவதியொருத்தி ஆனதர்மஞ்செய்துகொண்டு
என்னோன்புகொண்டு என்றனையும்நினையாமல்
பூதலத்திற்செல்வம் புகழ்பெறவேதானிருந்து
தனிகுறும்புசெய்துகொண்டு தரணியிலிருப்பவளை
இந்நேரமிங்கே யழைத்துவாவென்றுசொன்னார்
என்றுசொல்லித்தூதுவரை இயல்பாகத்தானனுப்பி
அந்நேரந்தூதுவர்க்கு அதிககோபமுண்டாகி
இரும்புதடியெடுத்தார் ஏற்றதொருகிங்கிலியர்
வந்துவளைத்தார் வாழ்வரசிவாசவிலே
நந்தவனம்வந்து நறும்பூப்பறிக்கிறதும்
அன்னங்கொடுத்து ஆதரவுசொல்லுவதும்
சத்திரங்கள்வைத்துத் தயவாகநடக்கிறதும்
தருமங்களெல்லாந் தவறாமல்செய்கிறதும்
கண்டார்கள்கிங்கிலியர் கவலைமெத்தவுண்டாகி
கையிற்றடியைக் கடக்கவேவிட்டெறிந்து
தலையிலேகையைவைத்து சலிப்பாயிருக்கையிலே
அந்நேரம்அங்குவந்தாள் அமராவதியாளும்
வாருங்கள்மக்களே வாடியிருப்பானேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமுதுகொள்ளவொருமென் றழைத்தாளேயப்போது
பானகம்வாங்கிப் பசியாரக்குடித்தார்கள்
இப்போதிவளை யழைத்துமேபோனாக்கால்
தருமங்களெல்லாந் தவறிவிடுமென்றுசொல்லி
ஏதுகுறையென்று ஏசினார்கிங்கிலியர்
சித்திராபுத்திரனே சீமானேகேளுமையா
எங்களையும்நீங்கள் என்னபழிசெய்தாலும்
செட்டிச்சியைக்கூட்டி வரமாட்டோமென்று சொன்னார்
அந்நேரமக்கணக்கர்க் கதிககோபமுண்டாகி
உங்களுக்குக்கைக்கூலி காட்டினாளுதாரி
பானகம்வாங்கிப் பதிவாய்குடித்தீர்கள்
இதற்கோஅனுப்பிவைத்தே னென்றாரேயுத்தமனார்
அதையுங்கணக்கெழுதிக் கொண்டாரேயுத்தமனார்
சினந்துமிகவுரைத்துச் சீரியேயப்போது
மற்றுமொருதூதுவரை வரவழைத்தாரந்நேரம்
பெற்றதாயைக்கொன்ற பெரும்பாவிமொட்டையனைக்
கொண்டகணவனைக்கொன்ற கொலைப்பிராமணியை
இவர்கள்தமையழைத்து ஏவினார்நற்கணக்கர்
அரைநாழிகைப்பொழுதி லழைத்தோடிவாருமென்றார்
ஆயுதங்கள்தானெடுத்து அடைந்தாரிருவருந்தான்
வந்துதலைப்பட்டார்கள் வாழ்வரசிவாசலிலே
மனையிலொருபுறத்தே மறைவாயிருந்தார்கள்
தானதாருமங்கள் தயவாய்நடக்கிறதே
இத்தனையுங்கண்டு எடுத்துரைத்தான்மொட்டையனும்
இவளெத்தனைதரும மினிதாகச்செய்தாலும்
நாயனாருரைத்தபடி நான்விடுவதில்லையென்றான்
என்றுசொல்லிமொட்டையனு மிருகண்ணுந்தான்சிற
அந்நேரமேதானும் அமராவதியாளும்
தீர்த்தமுமாடித் தெருவழியேவருகையிலே
பூனையாய்வந்து குறுக்கிட்டான்மொட்டையனும்
அப்போதும்செட்டிச்சி அதிககவலையுற்று
துக்கமுண்டாகத் துடித்ததேவலதுகண்ணும்
மயக்கம்பிறந்து மதிமறந்துஅந்நேரம்
ஏதோகொடுமை இனிகேட்கவேணுமென்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூனைகுறுக்கிடுதல் போந்தகூறல்லவென்று
தருமங்கள்செய்வதிலே தப்பிதமுண்டென்று
என்றுசொல்லியம்மை ஏற்றதொருபாத்திரத்தில்
அமுதுகறிகளை யப்போதுதானெடுத்துச்
செகண்டியடித்துத் தெருவெல்லாம்தான்திரிந்து
ஆராய்ந்துதேடி யமுதுகொடுத்திடவே
சட்டதிட்டமாகச் செய்தாளேயந்நேரம்
ஒன்றுந்தவறாமல் உள்ளபடியேநடத்தி
வந்தாளரண்மனையில் வாழ்வரசிதானுமப்போ
இருக்கும்பதியில் இயல்பாகத்தானிருந்து
பேத்திமார்பாட்டியார் பிரியமுடனேயிருக்க
பாலோடும்நெய்யோடும் பதிவாயமுதருந்தி
சாந்தும்புனுகுஞ் சவ்வாதுந்தானணிந்து
புஷ்பாதிகளெல்லாம் போதவேதான்சூடிச்
சந்தோஷமாகவே தானிருக்கும்வேளையிலே
கொல்லவந்தகூற்றுவனும் கோலப்பிராமணியும்
அவ்வேளைதான்பார்த்து அவள்நடையில்வந்தார்கள்
வாசற்படியில் வந்துநின்றாளந்நேரம்
கண்டமராவதியாளும் கர்மமோவென்றுசொல்லி
இருபேரும்நீங்கள் இன்னமுதுகொள்ளுமென்றாள்
சத்திரத்தில்வாருமென்று தான்விரும்பிச்சொன்னாளே
அப்போதுகூற்றுவனு மர்னப்பிராமணியும்
இந்நேரம் நாங்கள் அமுதுகொள்வதில்லையெனப்
பலகாரம்நான்தருவேன் பதிலாகக்கொள்ளுமென்றாள்
பலகாரம்நாங்கள் புசிப்பதில்லையென்றார்கள்
என்னத்திலிச்சையென்று ஏந்திழையாள்தான்கேட்கப்
பாலின்மேலிச்சையென்றான் பிராமணியுமப்போது
பாலும்பழமும் பரிவாகக்கொண்டுவந்தாள்
காய்ச்சினபால்நாங்கள் கண்ணாரக்கொள்வதில்லை
கண்காணப்பால்தான் கறந்துதரவேணுமென்றான்
இதுவுமொருசோதனையா வென்றுமனதிலெண்ணி
ஆனாற்கறந்து அடைவாய்த்தருவேனென்றாள்
அணைக்கயிறுங்கடைக்காலும் அன்பாகத்தானெடுத்து
காராவினண்டையிலே காரிகையாள்தான்வரவே
கொல்லவந்தகூற்றுவனும் குடுகுடெனஓடிவந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொம்புதனிலேறிக் கொற்றவனுந்தானிருக்க
அணைவதற்கென்று அமராவதிவரவே
அப்போதுபசுவுக் கதிகோபமுண்டாகி
காடிகழுநீர் கலந்துவைப்பதில்லயென்று
வைக்கோல்பிடுங்கி வாரியேவைக்கையிலே
குத்தியெடுக்கக் கூரியகொம்பதனால்
இருந்தாள்அமராவதி மிகக்கலங்கிக்
கதறக்கொடுத்தாளே காரிகையாளந்நேரம்
ஏங்கியழுதாள் எமலோகந்தானறிய
தருமங்கள்செய்ததிலே தான்கேடுவந்ததுண்டோ
பொல்லாதகாலமாய்ப் பூனைகுறுக்கிடவும்
துற்குறிகள்காட்டினதுஞ் சோதனையுமுண்டாச்சு
ஏதுகுறைகளுண்டோ என்னமோவென்றுசொல்லி
எண்ணாததெண்ணி யேங்கியுயிர்பிரிந்தாள்
கொல்லவந்தகூற்றுவனும் கோலப்பிராமணியும்
பாசக்கயிறும் பருவளையுந்தானெடுத்து
கட்டினாரப்போது கண்மண்டைதான்பிதுங்க
இரும்புத்தடியால் இரக்கமற்றுத்தானடித்துப்
பாப்பாத்திகள்ளியவள் பாசக்கயிறுபிடித்து
அடித்தானேகூற்றுவனும் அமராவதியாளைக்
காமவல்லியென்னுமொரு காற்றுவந்துவீசிடவே
ஆகாயமின்னொளியு மதிககோபத்தோடுவர
இரும்புத்தடிமுறிந்து இரக்கமுற்றுத்தான்விழவே
பாசக்கயிறும் பருவளையுந்தான்தெறிக்க
அப்போதுகூற்றுவனு மானபிராமணியுந்
திடுக்கிட்டுநின்று தடுமாறியந்நேரம்
இத்தனைக்குந்தருமங்கள் இனிதாகச்செய்தாளே
இவளைநாம்விட்டுவிட்டால் இயல்கணக்கரேதுசொல்வார்
கோபித்துக்கண்சிறிக் கொலைக்கழுவிற்போட்டிடுவார்
எப்படியுந்தானிவளைக் கொண்டுபோவோமென்று
இருபேருமாக நினைத்துமேதாமுணர்ந்து
வலைக்கயிறுதானெடுத்து வய்யவேதான்பூட்டிக்
கட்டியிழுத்தார்கள் காரிகையையந்நேரம்
கண்கள்தெரித்துவிழக் கட்டியிழுத்தார்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டுவந்துவிட்டார்கள் கொற்றவர்முன்பாகச்
சித்திரபுத்திரருஞ் சீறியேயேதுசொல்வார்
தருமத்தைத்தானே தயவாய்நினைத்தாயே
என்றுசொல்லிநற்கணக்கர் இருகண்ணுந்தான்சிவக்க
கட்டிக்கொடுத்தாரே கடுந்தூதர்கிட்டவுடன்
பின்கட்டாய்க்கட்டிப் பிடரியிலேகுத்துமென்று
செப்புத்தூணோடே சேரவேகட்டுமென்றார்
உச்சிதனிலாணி யோங்கியடியுமென்றார்
அமராவதிக்கு அதிககோபமுண்டாகி
தண்ணீர்தவிக்குதென்றாள் தாமக்குழலாளும்
சித்திராபுத்திரனார் சீமானார்தாம்கேட்டு
செம்பையுருக்கித் தெளியவைத்துக்கொடுங்களென்றார்
அந்தப்படியவர்கள்செய்ய அமராவதியாளும்
பானகமென்று பதிவாகத்தான்குடித்தாள்
இதையுமறிந்தாரே இயல்பானநற்கணக்கர்
மழுவையும்காய்ச்சி வைக்கவேசொன்னார்காண்
சந்தனச்சேகராகத் தான்குளிர்ச்சியானதுவே
அப்போதொருகாற்று அவணிதனில்வந்தடித்து
கயிறுதெறித்துக் கடுந்தூரந்தான்விழவே
கணக்கருக்கப்போது கடுங்கோபமுண்டாகி
முந்நூறுகாத மகலமுள்ளகாட்டூடே
கல்லுங்கறடுங் கார்முள்ளுந்தான்படவே
கட்டியிழுங்களென்றார் கண்விழிகள்தான்பிதுங்க
இந்தப்படிகாடெங்கும் இழுக்கின்றார்தூதுவர்கள்
அந்நேரங்காட்டி லதிசயங்களுண்டாச்சு
பொல்லாதகாடெல்லாம் பூங்காவனமாச்சு
புட்பங்கள்தான்சொரியும் பூஞ்சோலையுண்டாச்சு
சாந்துபுனுகுசவ்வாதுமணந்தான்வீச
தாமரைத்தடாகங்கள் தானுமேயுண்டாகி
இந்திரலோகம்போ லிருந்தாளப்பெண்கொடியும்
வாசம்பொருந்தியே மனமகிழ்ந்துதானிருந்தாள்
தருமங்களானதெல்லாந் தற்காத்துநின்றனவே
வந்தகாற்றுகூடக் கயிறுந்தெறித்ததுவே
ஓடிவந்ததூதர் உரைத்தார்கணக்கருடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொல்லாதகாடெல்லாம் பூங்காவனமாச்சு
ஆனையைக்கட்டுங் கயிறுமறுந்ததென்றார்
இத்தனையுங்கேட்டு இயற்கணக்ககரந்நேரம்
செப்புத்தூணோடே சேர்த்துஇறுக்குமென்றார்
கொல்லரைக்கூட்டிவந்து குறடுகள்தான்காய்ச்சி
காய்ச்சிப்பிடுங்கவுமே கம்மாளர்வந்துநிற்க
அமராவதியு மபயமிடத்தொடுத்தாள்
கண்கள்தெறித்துவிழக் கன்னத்திற்போடுமென்றார்
தண்ணீர்தவிக்குதென்றாள் தாமக்குழலாளும்
ஈயத்தைக்காய்ச்சி யிதம்பெறவேதான்குடித்தாள்
பன்னீர்சலமாகப் பாங்குடனேதான்குடித்தாள்
அதையுமறிந்தார்காண் ஆனதொருகணக்கர்
இருப்புலக்கையாலே யடியென்றாருத்தமனார்
அந்நேரஞ்செட்டிச்சி யானைபோல்வீறிடவே
வீறிட்டசத்தம் விமலனார்தாமறிந்து
சிருட்டித்தாரந்நேரஞ் செட்டிச்சிநோகாமல்
மின்னுமழையு மிகவேதானுண்டாகி
காற்றும்புயலுங் கனமாகிவந்திடவே
செப்புத்தூணெல்லாஞ் சேரத்தணித்ததுவே
கொல்லர்முகமுங் குளிர்ச்சிமிகவானதுவே
தாமக்குழலாளுந் தற்சொரூபமாயிருந்தாள்
இன்னமொருவுபாய மெடுத்தாரேயுத்தமனார்
அரையளவுகுழிகள் ஆழமாய்வெட்டியதில்
செட்டிச்சியம்மைதனைச் சீராகத்தானிறுத்தி
கைகள்தன்னைப்பின்னங் கட்டாகத்தானிறுத்தி
உச்சிமயிரை யொருமிக்கத்தான்வகிர்ந்து
மூன்றுதிசைமரத்தில் மூன்றுவகையால்முடிந்து
ஆனைதனைக்கொண்டிடற அவிழ்த்துவிடுகமன்றுரைத்தார்
இந்தமொழிகேட்டுடனே ஏங்கினாள்பைங்கொடியும்
அப்போதுதூதுவர்கள் அதுசெய்யவந்தவுடன்
தருமங்கள்செய்ததெல்லாம் தழைத்துமிகவோடிவந்து
காற்றும்புயலுங் கடுகெனவேதானடித்து
எல்லாரையும்தூக்கி யெறிந்ததேபூமியிலே
அதையுமறிந்தார்கள் ஆனதொருநற்கணக்கர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டைக்குளத்தி லழுத்தவேதள்ளுமென்றார்
தாமரைத்தடாகமாய்த் தானுமேயுண்டாச்சு
அட்டைக்குளத்தி லழுத்திநிற்குய்பாவிகளும்
செட்டிச்சியாலே சிவலோகஞ்சேர்ந்தார்கள்
வாசம்பொருந்தி மணந்ததேயக்குளமும்
செக்கிலேபோட்டுத் திருகுமென்றாராயிழையை
வாணிபரைக்கூட்டிவந்து வடங்களுந்தான்முறுக்க
அந்தச்சமயத்தில் அங்கொருவரில்லாமல்
தாயில்லாப்பிள்ளைநின்று தவிக்கிறதைக்கண்டாளே
பிள்ளையையெடுத்துப் புழுதியெல்லாந்துடைத்துப்
கண்ணீர் துடைத்துக் கடுகவனுப்பினாளே
ஆதரவுசொல்லியனுப்பினாள் பிள்ளைதனை
உடனேவடமுறுக்கி யோடிவந்தார்வாணிபருஞ்
செட்டிச்சியம்மைதனைச் செக்கிலேதான்போட்டு
ஆட்டவேணுமென்று அங்குவந்தாரந்நேரம்
செட்டிச்சியுமப்போ சிவனைநினைந்தழுதாள்
அப்போதொருகாற்று அவனிதனிலுண்டாகி
செக்குந்தகர்ந்தவுடன் செக்குலக்கைதான்முறிந்து
ஓடினார் தூதுவர்க ளொவருமேகாணாமல்
அந்நேரம்வாணியர்கள் அதுசெய்திகண்டவுடன்
வந்துமேசொல்லுகிறார் வாய்த்தகணக்கருடன்
ஆகாசக்காற்று அதிகோபமாகவந்து
செக்குந்தகர்ந்து செக்குலக்கைதான்முறிய
ஓடினார் தூதுவர்க ளொருவருமேதான்காணோம்
அமராவதியாளு மன்னம்போலவேயிருந்தாள்
கணக்கரிதைக்கேட்டவுடன் கண்களிரண்டுஞ்சிவந்து
அமராவதியாளை யழிநரகில்தள்ளுமென்றார்
நரகத்தைக்கண்டாளே நல்லதொருமாதும்
நரகத்திலேகிடந்தபாபியர்களெல்லோரும்
செட்டிச்சிபார்த்தவுடன் சிவலோகஞ்சேர்ந்தார்கள்
நரகக்குழிகளெல்லாம் நல்லகுழியாயினவே
அதையுமறிந்தாரே ஆனதொருநற்கணக்கர்
எண்ணெயும்பிண்ணாக்கும் எடுக்கவென்றாரவள்தலையில்
விற்றுவரச்சொல்லி விடைகொடுத்தாரந்நேரம்
அந்நேரம்தூதுவர்கள் அவள்தலையிற்றானெடுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழுதெருவும் இயல்பாகக்கூறிடவே
கொள்வாருமில்லைக் கூப்பிடுவார்தானுமில்லை
பட்டணத்திலுள்ள பலபேர்களெல்லோரும்
புண்ணியரைச்சற்றும் புகழ்ந்தறியாபாவியிடம்
எண்ணெயும்பிண்ணாக்கு மினிவாங்கலாகாதென்று
செட்டிச்சியைக்கண்டவுடன் தெருக்கதவைத்தானடைத்தார்
தெருவுகளெல்லாம் சேரவேதான்சுமந்து
கழுத்துந்தெறிக்க கண்உண்டைதான்புதுங்க
அமராவதியாளும் அநியாயமென்றழுதாள்
அய்யகோதெய்வமோ அரும்பாவஞ்செய்தோமே
இந்தவிதிகளெல்லாம் எனக்கேன்வரவேணும்
விதியைநினைத்தந்தணர் வீதியில்வந்தவுடன்
அதிலொருபிராமணியும் அந்தநேரமோடிவந்து
எண்ணெயும்பிண்ணாக்கும் இறக்குமென்றாளப்போது
அந்தக்ஷணமே யிறக்கினாளாயிழையாள்
தண்ணீர்தவிக்குதென்றாள் தாமக்குழலாளும்
நீர்மோர்பெருக்கி நிறையவேகொண்டுவந்தார்
கொண்டுவந்தமோரைக் குடித்தாள்வயிறுமுட்ட
தாகந்தெளிந்து களைதீர்த்தாள்செட்டிச்சி
பிராமணியுமப்போ பெருத்தமொழியுரைத்தாள்
அமராவதியாள் அருகிருந்துகேட்கலுற்றாள்
அன்னமேதேனே அமராவதியாளே
நீயெத்தனைதருமம் நிலையாகச்செய்தாலும்
சித்திரபுத்திரரைச் சிந்தையில்வையாமல்
புண்ணியவானென்று புத்திதனில்வையாமல்
இயமதருமர்வாசலிலே இருந்துகணக்கெழுத
பசுவின்வயிற்றிற் பாலகனாய்வந்தவரை
அகத்தில்நினையாமல் அநியாயம்போனதென்ன
தருமங்களெல்லாம் தவிடுபொடியாக்கிடுவார்
அண்டபுவனமெல்லா மறிந்துகணக்கெழுத
புண்ணியனார்வந்து பிறந்ததினாலே
இத்தனைபாடுபட்டும் எள்ளவும்புத்தியில்லை
அவரைநினையாமல் அவதிமிகப்பட்டாயே
அவர்நோன்பிருக்க அறிவிக்கவேணுமென்று
உன்னாலேதானு முலகமெங்குந்தானறிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்குவந்தேயுன்றனைக் கேரணிகள்செய்கின்றார்
என்றேபிராமணியும் எடுத்துரைத்தாரந்நேரம்
அமராவதியாட்கும் அறிவுமிகவுண்டாகி
சித்திரபுத்திரராம் சிவனார்பெருங்கணக்கர்
பாவங்கள்புண்ணியங்கள் பகுத்தெழுதவந்தாரே
காணாதகாட்சியெல்லாங் காட்டிவைத்தார்சீமானும்
அவரைநினையாமல ல்லலெல்லாம்பட்டேனே
அறியாமல்நானும் அவதியுற்றேனென்றுசொல்லி
மண்ணில்விழுந்து மலரடியைத்தெண்டனிட்டு
அறிவெனக்குவந்ததையா ஆனதொருபாலகரே
செய்பிழைபொறுப்பீரென்றுசொல்லியேதெண்டனிட்டாள்
கணக்கருமப்போது கருணைமிகவுண்டாகி
சித்தந்திரும்பி திருவாய்மலர்ந்தருளி
மெத்தமனமகிழ்ந்து வேகமெல்லாந்தான்தணிந்து
என்னைநினைந்ததினாலும் இனிவருமெப்பிறப்பும்
இவளுக்குநற்பலனு மினிகொடுப்போமென்றுசொல்லி
ஸ்நானங்கள்பண்ணிவரத் தாமேயனுப்பினார்காண்
ஸ்நானங்கள்செய்து தவக்குறையுந்தான்முடித்து
சிவனைநினைந்து திருநீறுந்தானணிந்து
சித்திராபுத்திரரே சீமானேயென்றுசொல்லி
கணக்கரிடத்திலே காரிகையாள்வந்துநின்றாள்
அந்நேரமுங்கணக்கர் ஆனையைவரவழைத்து
திருமஞ்சனங்கொண்டுவந்து சிறக்கவேதான்சொரிந்து
பட்டுமுதலுள்ளதெல்லாம் பண்பாகத்தான்கொடுத்தார்
ஆபரணமெல்லா மழகாகத்தான்கொடுத்தார்
எல்லாப்பதமு மினிமையாய்த்தான்கொடுத்தார்
அந்நேரமேதானும் அமராவதியாளும்
தருமத்தையெல்லாம்நான் தவறாமல்செய்திடவும்
தன்னையிழுத்துவந்து இடறுகள்செல்வானேன்
வகைவிபரமாக வசனிக்கவேண்டுமென்றாள்
அப்போதுநற்கணக்கர் அறிவித்தாருத்தமிக்கு
உன்னாலேஎன்பே றுலகமெல்லாந்தானறிய
செய்துவைத்தேனுத்தமியே செய்தபிழைபொறுப்பாய்
என்னோன்பிருந்தவர்கள் இகபரங்கள்தானடைவர்
இந்தவிரதம் எடுத்திலாப்பாவியற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீபட்டதண்டனைகள் நிலையாகத்தானடக்கும்
அப்படிக்குவாராமல் உன்னையழைத்துவந்தோம்
உன்னாலேமோட்ச மடையவென்றேஉன்னைநான்
கூட்டிவந்ததென்றவுடன் கொம்பனையாள்கேட்டிடுவாள்
அறிவித்தால்நானு மப்படியேநடப்பேனென
சொல்லுகிறேன்கேளாய் சுகமானவென்பிறப்பே
சித்திரைமாதம் பதினெட்டாந்தேதியிலே
சித்திரைக்குச்சித்திரையில் கீரார்பவுரணையில்
பூதலத்திலுள்ள புகழ்மனுச்கசந்துவெல்லாம்
ஆண்பெண்ணுடனே யடைவாகநோன்பிருந்து
ஆறுகுளத்திலே யன்பாகத்தான்முழுகி
திருநீறணிந்து சிவனைமிகவணங்கி
சூரியநமஸ்காரந் தொழுதுமிகவணங்கி
சாந்தாற்றரைமெழுகிச் சந்தனத்தால்கோலமிட்டு
வாழைகரும்பு வான்கமுகுவாழையுடன்
பழக்குலைகளாலே பந்தக்கால்தானிறுத்தி
மஞ்சள்குலையும் மாங்குலையுந்தான்தூக்கி
பலகைதனைப்போட்டுப் பாவாடைமேல்விரித்து
வேழமுகத்து விநாயகனைமுன்வைத்து
பூரணகும்பம்வைத்துப் பொன்னின்விளக்கேற்றி
நிறைநாழிவைத்து நிரைமரக்கால்தானும்வைத்து
அடைக்காயும்வெற்றிலையும் மன்புடனேதான்படைத்து
கடலைதுவரைமுதல் காராமணிப்பயறும்
பயறுவகையுள்ளதெல்லாம் பாங்குடனேதான்படைத்து
பலகாரவகைகள் பாங்காகச்செய்துவைத்து
பருப்பரிசிபானகம் பாங்குடனேதானும்வைத்து
பொன்னினெழுத்தாணியுடன் புத்தகமும்கூடவைத்து
உப்புகற்பூர முள்ளதெல்லாம்தான்படைத்து
எள்ளுபருந்தி ஏற்றதொருமுத்துகளும்
இத்தனையும்நன்றாய் இயல்பாகவைத்தபின்பு
புதுப்பானைதன்னிலே பொங்கலிட்டுக்கீழறக்கி
திருக்கண்ணமுதஞ் சேகரமாய்வைத்திறக்கி
புத்துருக்குநெய்யும் பொறிக்கறியும்பாற்குழம்பும்
கறிவகைகளுள்ளதையுங் காட்டாகத்தான்படைத்து
தயிறுமுறைத்துவைத்துச் சகலகறிவர்க்கமுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேமநிட்டையாக நைய்வேத்தியஞ்செய்து
அரகராவென்று அடிபணிந்துதெண்டனிட்டு
தூபம்புகைகாட்டித் தோத்திரங்கள்செய்துநன்றாய்
சூடன்பணிமாறி சூழக்குரவையிட்டு
வாத்தியங்களெல்லாம் வகைவகைபாய்த்தான்முழங்க
ஆண்டவரேயென்று அடிபணிந்துதெண்டனிட்டு
ஆசாரியர்தன்னை அன்புடனேகூட்டிவந்து
காடடாகநன்றாகக் கதைகள்படிக்கவைத்து
இன்பமாய்த்தானிருந்து இக்கதையைதான்கேட்டு
கேட்டுமுடிந்தபின்பு கிருபைவரத்தெண்டனிட்டு
இப்படியே நோன்பு இயல்பாயிருந்தவர்க்கும்
இந்தக்கதையை எழுதிப்படித்தோர்க்கும்
எல்லாப்பதமுங் கொடுப்போநாமேந்திழையே
புத்திரசம்பத்தும் புண்ணியமுண்டாகும்
மங்கிலியம்வாழ்ந்து மக்கள்தழைத்திருப்பர்
பூலோகமெல்லாம் புகழ்ந்துபறைசாற்றிடென்று
இந்தப்படியேநோன்பு எல்லோருந்தானிருக்க
இந்தப்படியேகணக்க ரியல்பாயுரைத்திடவே
நாயனாருரைத்தபடி நன்றாய்க்கருத்தில்வைத்து
தப்பாமல்நோன்பிருந்து தவப்பெருவோமுத்தமரே
சித்திரர்புத்திரரே சீமானேநீர்கேளீர்
உயிரோடேசொர்க்கும் வரவழைத்துக்கொண்டாக்கால்
இப்போதேயென்னை யிங்கேவரவழைத்தால்
என்கர்மமெல்லாம் தவிர்ந்துவிடுமென்றுசொல்ல
சித்திராபுத்திரர்க்குச் சிந்தைமிகவுண்டாகி
பூலோகத்திற்குப்போய் பொருந்தவேதான்வாழ்ந்து
தருமங்களெல்லாம் தப்பாமற்செய்யவும்
போகவிடைகொடுப்போம் பொற்கொடியேகேளுமென்றார்
நூறுவயதிருப்பாய் நூற்றாண்டுசென்றபின்பு
உன்னையுதானு முடனழைத்துக்கொள்ளுகிறேன்
ஆனதினால்நீயு மாக்கையழியுமுன்னே
பூந்தேரிலேறிப் போய்வாருமென்றுசொல்ல
அப்படியேதேரேறி அமராவதிவருமுன்
அப்பால்நடக்கு மதிசயத்தைக்கேளுமினி
சூரிபகொம்பதினால் கொன்றபசுத்தானும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரையுமருந்தாமல் இனத்தோடிங்கூடாமல்
கண்ணீரொழுகிக் கதறுதேநற்பசுவும்
அமராவதியாளென் அன்னையிறந்தாளென்று
ஊராருறவுள்ளா ருற்றார்கள்தான்கூடி
கூப்பிட்டழுது கோவிந்தாவென்றிடவே
ஆண்டிபரதேசி அனியாயமென்பதுவே
அமராவதிகூட்டை யன்பாகத்தானெடுத்து
செய்யுஞ்சடங்குகளைச் சீக்கிரமாய்த்தான்முடித்து
மஞ்சளையும்பூசி மலர்களுந்தான்சூட்டி
பட்டுமுடுத்தி பட்டாடைமேற்போட்டு
மாலைகழுத்திலிட்டு மருக்கொழுந்துதானணிந்தார்
பூந்தேருங்கட்டிப் புட்பமலங்கரித்து
வாத்தியங்களெல்லாம் வரிசையாய்த்தான்முழங்கக்
குரவைதனைமுழக்கிக் கோவிந்தாவென்றுசொல்லி
அமராவதிகூட்டை யானதொருபூந்தேரில்
வைத்துமேதானெடுத்து வானமெல்லாந்தான்முழங்கி
மயானக்கரையில் வகையாகப்பந்தலிட்டு
சந்தனக்கட்டை சதிராகத்தானடுக்கி
கருமங்கள்செய்தார்கள் காரிகைக்குமப்போது
கொள்ளிகள்வைத்துக் குடமுடைத்தார்கள்
இந்தப்படியாக யிருக்குமந்தத்தருவாயில்
வாய்க்கரிசிபோட்டார்கள் வந்தவர்களெல்லோரும்
அமராவதியாளை அனுப்பினாரந்நேரம்
மயானத்துறைக்கு வந்தாளேதேவியரும்
கட்டையிலேயிட்ட கனத்தவுடல்புகுந்தவுடன்
செட்டிச்சிதனக்குச் சீவன்பிறந்ததுவே
நித்திரைதெளிந்ததுபோல் நினைவுமிகவுண்டாகி
சிவசிவாவென்று சிவனைமிகத்தொழுதாள்
திசைநோக்கித்தானும் தெண்டனிட்டாளுத்தமியும்
நன்மையு தின்மையும் நடுவெழுதவந்தவரே
காணாதகாட்சியெல்லாம் காட்டிவைத்தீர்சீமானே
படாதபாடெல்லாம் படுத்திவைத்தீர்சீமானே
இப்படிநினைந்து ஏங்கினாளுத்தமியும்
அடுக்கினகட்டையெல்லாம் ஆல்போல்தழைத்திடவே
அமராவதியாள் அகத்திலேவந்தவுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்றார்உறவுமுறையார் ஊராரைக்கூட்டிவந்து
போஜனம்பண்ணுவித்து போகவிடைகொடுத்தாள்
தருமங்களெல்லாந் தப்பாமல்செய்திடுவாள்
நாயனார்தம்நோன்பு நன்றாகவிருக்கவென்று
நாயனார்தம்மிடத்தில் நன்றாயறிவித்தாள்
தர்மராஜாவுமப்போ தானுமிகப்பயந்து
ஸ்திரீபுருஷாள்தானுஞ் சிறக்கவேநோன்பிருந்தார்
சித்திரைமாதம் பதினெட்டாந்தேதியிலே
சித்திரைக்குச்சித்திரையிற் சீரார்பவுரணையில்
பறையோசைகேட்டும் பதம்பெற்றோமென்றுசொல்லி
பூலோகத்தினுள்ளே புகழ்ந்துமனுஷரெல்லாம்
நாயனார்திருநோன்பு நன்றாகவிருங்கள்
என்றுசொல்லிவள்ளுவனும் எடுத்துப்பறைசாற்றிடவே
பலகைகளைபோட்டு பாவாடைமேல்விரித்து
நிறைநாழிவைத்து நிறைமரக்கால்தானும்வைத்து
தேங்காய்பழங்கள் சிறக்கவேதானும்வைத்து
சர்க்கரையெள்ளுருண்டை சகலபதார்த்தமுடன்
பருப்பரிசிபாகனம் பாங்குடனேதான்படைத்தும்
கறிவகையிலுள்ளதெல்லாங் கூட்டாகத்தான்படைத்துப்
பொங்கலுமிட்டுப் போதமிகப்படைத்துத்
திருக்கண்ணமுதஞ் சேகரமாய்தானும்வைத்துப்
புத்துருக்குநெய்யும் போதவேதான்படைத்துத்
தூபதீபங்காட்டித் தோத்திரங்கள்தான்செய்ய
தெண்டனிட்டுத்தான்பணிந்துதிருநீறுதானணிந்து
ஏங்கிபரதவித்து இங்குவருந்தருவாயில்
உத்தமனார்தாமு முடனேயறிந்தார்காண்
இதற்கென்னசெய்வோமென்று ஏற்றபடிநினைத்தார்
பார்வதியாளிடத்திற் பண்பாகச்சொல்லலென்று
சித்திராபுத்திரருஞ் சிறப்பாகத்தான்பார்த்து
எந்தன்பிறப்புவளர்ப் பெல்லோருந்தாமறிய
என்னோன்புநல்விரதம் எல்லோருந்தாமிருக்க
வேணுமென்றுநினைத்து மேன்மையுள்ளசெட்டிச்சி
அமராவதியாளை அன்புடையமாதரசை
வரவழைத்துநானும் வகைப்படிசொல்லிவிட்டேன்
சொன்னபடியவளும் தோத்திரங்கள்செய்துமிகப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூலோகத்திலுள்ள புகுந்தமனுஷர்க்குரைத்தாள்
விரதமிருந்து விஸ்தாரஞ்செய்துவைத்தாள்
எந்தன்பிறப்பை எடுத்துரைக்கயாருமில்லை
சிவனாருமப்போது சிந்தையிலேமிகநினைத்து
பார்வதியம்மாளைப் பக்கத்திற்றானழைத்து
புத்திரநற்பிறப்பைப் பூவைமிகநீயு
பூலோகந்தானறியப் போய்ச்சொல்லுமென்றுரைத்தார்
பாப்பாத்திவேஷம் புகுந்தாளேபார்வதியும்
கையிற்பிரம்புங் கனத்ததொருபுத்தகமும்
தானெடுத்துக்கொண்டு சதிராகவந்திருந்து
ஏதுக்குநீயும் இளைப்புடனேயிருக்கின்றாய்
என்னுடனேநீயும் உரைத்திடுவாயுத்தமியே
அமராவதியாள் அறிவுமிகவுண்டாகி
நாயனார்திருநோன்பு நாங்களிருக்கின்றோம்
அவருடையபிறப்பை யறிவிப்பாரில்லாமல்
தயங்குகிறோமென்றாள் தாமரைக்குழலாளும்
அப்போதுபிராமணியும் அவிழ்த்தாளேபுத்தகத்தைக்
கேளுங்களிக்கதையைக் கிருபையுடன்சொல்லுகிறேன்
நாட்டுக்கணக்கர் நமனார்பெருங்கணக்கர்
பூலோகத்திலுள்ள புகழாந்தமனுஷருக்கு
நன்மையுந்தின்மையும் நடுவெழுதவேணுமென்று
எமதர்மாவாயிலிலே யிருந்துகணக்கெழுதுவதும்
பிறப்பும்வளர்ப்பும் பேரானநல்வளமும்
தவத்தாலேவந்தகதை தானேயுரைத்திடுவாள்
தவத்தருமைகண்டு சந்ததியாள்வந்ததுவும்
பசுவின்வயிற்றில் பாலனபிறந்ததுவும்
சம்புதலத்திற் றாமரையாயிருந்ததுவும்
எல்லாக்கதையும் எடுத்துரைத்தாள்பிராமணியும்
புத்தகமுந்தானும் பொன்னிலெழுத்தாணியுடன்
கேட்டார்களெல்லோருங் கிருபையுடனேயிருந்து
தெண்டனிட்டுத்தான்பணிந்து திருநீறுவாங்விட்டார்
சாந்துசவ்வாது சந்தனமுந்தான்கொடுத்தார்
அடைக்காயும்வெள்ளிலையும் அன்புடனேதான்கொடுத்தார்
மாலைகழுத்திலிட்டார் மண்டலமெல்லாமறிய
ஆபரணபூஷணமு மன்பாகத்தான்கொடுத்தார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படியேவரிசைபெற்று ஏகினாள்பார்வதியும்
புத்திரனாரிடத்திற்குப் போனதொருசேதியெல்லாஞ்
சிவனாருங்கேட்கச் சிந்தைதகளிகூர்ந்து
செப்பினார்பார்வதியும் சேதியொன்றுந்தப்பாமல்
பூலோகந்தோன்றப் போனதெல்லாஞ்சொன்னவுடன்
புத்திரருமப்படியே புகழ்ந்துமிகத்தொழுது
இயமரிடம்வருவதற்கு ஏற்றவிடைவாங்கி
புத்திரரும்வந்து புகழ்ந்துமேதானிருந்தார்
இந்தக்கதையை இன்பமாய்க்கேட்டவுடன்
அமராவதியாட்கு அறிவுமிகவுண்டாகிச்
செல்வங்களெல்லாம் சேரவேயுண்டாகி
நாளுக்குநாளதிகம் நன்றாய்த்தழைத்ததுகாண்
கேட்டபேரெல்லோரும் கிளைகளுடன்வாழ்ந்திருந்தார்
நினைததபடிமுடித்து நீடுழிவாழ்ந்தார்கள்
அமராவதியாட்கு ஆண்டுபலசென்றதுவே
நோன்புகள்செய்தாட்கு நூறாண்டுசென்றவுடன்
சித்திரபுத்திரருஞ் சிந்தைதனிலேதெரிந்து
நோன்புமறவாமல் நூறாண்டுதானிருந்தாள்
அவளையுமிங்கே யழைக்கவேணுமென்று
கூட்டோடேசொர்க்கத்திற்கு கூட்டிவரவேணுமென்று
பூந்தேரனுப்பினார் புண்ணியனாரன்புடனே
அந்தநேரந்தானும் அமராவதியாளும்
நூறுவயதளவு நோன்புடனிருந்ததனால்
சிவலோகம்போகிறேன் சகத்துள்ளபுண்ணியரே
நோன்புவிரதத்தை நுணுக்கமாய்த்தானறிந்து
ஆண்டாண்டுகள்தோறு மன்பாகத்தானிருந்து
கிருபைபெறவேயிருந்து கேளுங்களிக்கதையை
பயபக்தியாயிருந்து பலன்பெறுங்கள்புண்ணியரே
என்றுமிகச்சொல்லி ஏற்றதொருஉத்தமியும்
அந்தியகாலம் அடுக்கவேவந்திடவே
தானதருமங்கள் தயவாகத்தான்கொடுத்தாள்
பிராமணபோஜனங்கள் பிரியமாய்நடத்திவைத்தாள்
சிவபூசைகுருபூசை செய்துமேதான்முடித்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டோடேசொர்க்கத்திற் கூடுகிறேனெனவுரைத்தார்
இந்தப்படிசொல்லி இருக்குந்தருவாயில்
அந்நேரம்வந்ததுகாண் அழகானபூந்தேரும்
அமராவதியும் அவள்தர்மராஜாவும்
இருபேருமொன்றாய் ஏறினார்தேர்மீதில்
சிவகணங்கள்வந்து தேர்கொண்டுபோனார்காண்
பூமாரியாகப் பொழிந்தார்களந்நேரம்
பரமசிவனும் பார்வதியுமிதுகண்டு
சொர்க்கத்துவாசனையுந் திறக்கவேசொன்னார்கண்
சித்திரபுத்திரரைச் சென்றுமேதெண்டனிட்டு
சிவனோடுமையாளைச் சேரவேதெண்டனிட்டு
சிவனாரிடத்திற் செப்பினாளுத்தமியாள்
தருமங்கள்செய்யவின்னந் தரணிதனிற்பிறக்க
புத்திரருமப்படியே பொருந்திப்பிறப்பதற்குத்
பிரம்மாவைப்பார்த்து பிறப்பிக்கச்சொன்னார்காண்
அந்நேரம்பிரம்மாவும் அகமகிழ்ந்துகொண்டாடி
தலைமகளாகவே பிறப்பித்தாரந்நேரம்
தருமராசாவையுந் தலைமகனாய்ப்பிறப்பித்தார்
ஒருவர்க்கொருவர் ஒப்புரவாய்வாழ்ந்திருந்தார்
அந்தப்பிறவியிலும் அந்தப்படியேதானதர்மம்
புண்ணியங்களெல்லாம் புகழ்ந்துநடத்தினர்காண்
அன்னக்கொடிகட்டி யடைவாகத்தான்வாழ்ந்து
தவறாமல்நோன்பு தானிருந்தாரதுபார்த்து
எல்லோரும்அந்நோன்பை தானிருந்தாரப்போது
ஆனபடிவாழ்ந்தே ஆண்டுநூறானபின்பு
சித்தரபுத்திரருந் தேரையனுப்பினர்காண்
கூட்டிவந்துவிட்டார்கள் குற்றமில்லைஇருவரையும்
இன்னமுந்தான்பிறக்க வேணுமோஏந்திழையே
என்றுசித்திரபுத்திரர் இதமாகத்தான்கேட்டு
இறப்பதுவும்பிறப்பதுவும் இனியெனக்குஆகாது
கலியுகங்கள்வந்து கலந்ததேபுண்ணியரே
நட்சத்திரபதவி நலமாகவளருமெனச்
சிவனாரிடதிலவர் செய்திகள்தானுரைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்நேரம்பிரம்மா அப்படியேசெய்துவைக்க
சிவனாரிடத்திலவர் செய்திகள்தானுரைக்க
நட்சத்திரபதத்தில் நன்றாகவாழ்ந்ருதிந்தார்
இந்தக்கதையை யெடுத்துரைக்கக்கேட்டவர்கள்
ஆல்போல்தழைத்து அறுகுபோல்வேரூன்றி
மூங்கில்போலன்னைசுற்றும் முசியாமல்வாழியவே
பூலோகமெல்லாம் பொருந்திமிகவாழியவே
எல்லோரும்நன்றா யினிதாகவாழியவே
சித்திரபுத்திரனார் சீமானும்வாழியவே
பொன்னினெழுத்தாணியுடன் புத்தகம்வாழியவே
நிலத்திலுள்ளமாந்தர் நெடுங்காலம்வாழியவே.

அமராவதிகதை முற்றிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புத்தக விளம்பரம்

### சோதிட நூல்கள்

விதானமாலை
சோதிட வினாவிடை
ஜாதக பாஸ்கரன்
சரசோதிமாலை
பரகிதம்

### சமய நூல்கள்

நவக்கிரக மஹாமந்திரம் (சாந்தியுடன்)
நவக்கிரக கவசம்
சனி துதி
அமாவாசை தர்ப்பண விதி
பிள்ளையார் கதை
ஆசௌச தீபிகை
பன்னிருதிருமுறை திரட்டு
நடராஜப்பத்து
கோளறுபதிகம்

கிடைக்குமிடம்:

**சோதிடவிலாச புத்தகசாலை**

46. பெரியகடை, யாழ்ப்பாணம்.

கே. கே. எஸ். வீதி, கொக்குவில்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org